மனித உரிமைகளுக்கான

# குழந்தைகளின் குரல்

## Children's Voices for Human Rights



*Courtesy: http://sq28kv71wv32mlqc.zippykid.netdna-cdn.com/wp-content/uploads/2013/05/juvenile1.jpg*

மனித உரிமைகளுக்கான குழந்தைகளின் குரல் – 68 – 2013

# கும்பகோணம் டிகிரி காபியும், சம காலத்துக் கல்வி முறையும்......

– ச.சீ. இராசகோபாலன்

நெடுஞ்சாலைகளில் கும்பகோணம் டிக்ரி காபிக் கடைகள் நிரம்பிக் கிடக்கின்றன. ஒவ்வொன்றிலும் எப்பொழுதும் கூட்டம். ஆவி பறக்கும் கொதிநிலையில் காபி பித்தளை டவரா–தம்ளரில் வழங்கப்பெறும். அசல் பித்தளையல்ல பித்தளை வர்ண முலாம் பூசப்பட்டுள்ள பாத்திரங்கள். டவரா–தமளரைக் கும்பகோணத்தின் அடையாளமாகக் கருதுகிறார்கள். வாயில் காப்பியை வைத்ததும் சூட்டின் காரணமாக நாக்கு ருசிக்கும் திறனை இழக்கின்றது. அதனால் காபியின் ருசியே தெரியாது சாப்பிட்டுவிட்டு கும்பகோணம் டிக்ரி காபி சாப்பிட்டதாக நினைத்துக் கொள்கின்றோம். கும்பகோணத்துக்காரர்களைக் கேட்டால் டிக்ரி காபி பாலின் தரத்தால் வருவது என்பார்கள். நமது குழந்தைகளுக்கு வழங்கப்பெறும் கல்வியும் டிக்ரி காபியைப் போன்றதே! கட்டிடம், பாடநூல்கள், ஆசிரியர்கள் போன்றவை முலாம் பூசப்பட்டப் பாத்திரங்கள். மனனமுறைக் கல்வி சூடான காபியைப் போன்றது.

கல்வி கற்கின்றோம் என்ற மாயையை ஏற்படுத்துவதுடன் கல்வியின் ருசியை அறியாமல் செய்துவிடும். நல்ல பால் தான் டிக்ரி காபியைத் தரும் என்பது போல சிந்தனையைத் தூண்டும் வகுப்பறைக் கற்பித்தல் தான் தரமான கல்வியைத் தரும் என்பதை மறந்துவிடுகின்றோம். சுயநிதிப் பள்ளிகள் அனுமதிக்கப்பட்டவுடன் பெற்றோரைக் கவர வேண்டிய தேவை ஏற்பட்டது. பொதுத் தேர்வில் பள்ளியின் தேர்ச்சி விகிதமும், தனிப்பட்ட மாணவரது மதிப்பெண்களும் தரத்திற்கு அளவுகோல்களாயின. உயர் தேர்ச்சியை அடைந்திட பள்ளிகள் பல குறுக்கு வழிகளைக் கடைப பிடித்தன. அவற்றில் தலையானது மனனமுறைக் கல்வி. இதன்படி பாடங்களைக் கற்பிக்காதோ அல்லது அரைகுறையாகக் கற்பித்தோ பாடநூலில் உள்ள வினாக்களுக்கு விடைகளை மனப்பாடம் செய்ய மாணவரைப் பழக்கப்படுத்த வேண்டும்.

இப்பள்ளிகளில் 10–ஆம் வகுப்புப் பாடங்களை 9–ஆம் வகுப்பிலேயும், 12–ஆம் வகுப்புப் பாடங்களை 11–ஆம் வகுப்பிலேயும் தொடங்கி, 10, 12 ஆம் வகுப்புகளில் முழுமையாகத் திருப்புதலுக்கும், தின, வார மற்றும் திடீர் தேர்வுகளுக்கும் பயன்படுத்துகின்ற நடைமுறையைப் பின்பற்றுகின்றன. மாணவர்க்கு ஒய்வு என்பதே இருக்காது. உறைவிடப் பள்ளிகளில் மிகுந்தக் கட்டுப்பாடுகள். அச்சத்திலேயே 24 மணி நேரமும் மாணவர்கள் வாழ வேண்டிய நிலை பரிதாபத்திற்குரியது. ஐ.நா. குழந்தைகள் உரிமை சாசனம் வற்புறுத்தும் மகிழ்ச்சிகரமான குழந்தைப் பருவம் மறுக்கப்படுகின்றது.

இம்முறையைத் தடுத்து நிறுத்த வேண்டிய கல்வித்துறையே பொதுத் தேர்வுகளில் நல்ல தேர்ச்சி பெற இதுவே சரியான முறை என்று ஏற்றுக் கொண்டு அதனைத் தம் பள்ளிகளிலும் செயல்படுத்த முயல்வதை என்னவென்று சொல்வது. பத்து, பன்னிரண்டாம் வகுப்பு ஆசிரியர்களுக்குத் உயர் தேர்ச்சி காட்டிட தனிப் பயிற்சி அளிக்க இயக்குனர் ஆணையிட்டுள்ளார். கல்வித் துறையே பருவத் தேர்வுகள் மாநிலம் முழுவதற்கும் பொதுவாக நடத்துவதும்,வினா வங்கி என்ற பெயரில் வினாத் தொகுப்புகளைக் கல்வித்துறையே வெளியிட்டு விற்பனை செய்வதும் பொதுத் தேர்வுகளில் உயர் தேர்ச்சி அடைந்திட வேண்டுமென்றே. இவை அனைத்தும் மனனமுறைக் கல்வியை வளர்க்கவே உதவும்..

இதன் விளைவு பொறியியல் மருத்துவம் போன்றத் தொழிற்படிப்புகளில் சேரும் மாணவர் முதலாமாண்டிலேயே தேர்ச்சி பெறத் தவறுகின்றனர். அதைப் பற்றிக் கவலைப் படாதிருப்பது ஏமாற்று வேலை என்றால் மிகையாகாது. தனியார் கட்டணப் பள்ளிகளைப் போல ஒன்பது, பதினொன்றாம் வகுப்புகளிலேயே பொதுத் தேர்விற்குரிய பாடங்களை முன்கூட்டிக் கற்பிக்காவிட்டாலும் அரசு, அரசு உதவிபெறும் பள்ளிகளில் டிசம்பர், ஜனவரி மாதங்களுக்குள் பாடங்களை முடித்துவிட்டு மீதிக் காலத்தை மீள்தேர்வுகளுக்குப் பயன்படுத்துமாறு பள்ளிகல்வி இயக்ககம் அறிவுறுத்தியுள்ளது. இதனால் பாடங்களை விரைந்து கற்பிக்க ஆசிரியர்கள் நிர்ப்பந்தப்படுத்தப்படுகின்றனர். 200 வேலை நாட்களில் கற்பிக்க வேண்டியவற்றை 150–160 நாட்களில் நடத்தத் வேண்டுமென்றால் கற்பித்தலும் குறைபடும், மாணவரது கற்றலும் வெகுவாகப் பாதிக்கப்படும். பாடத்திட்டங்கள் வகுக்கும் பொழுது ஒவ்வொரு பாடப் பகுதியையும் நன்கு கற்பிக்கவும் மாணவர் புரிந்து கொள்ளுதலை உறுதிப்படுத்தவும் தேவையான பிரிவேளைகள் ஒதுக்கப்படும்.

ஒரு பாடப்பகுதிக்கு 10 பிரிவேளைகள் தேவையென்றால் ஆசிரியர் விடுப்பு, அப்பகுதியில் ஒரு அலகுத் தேர்வு ஆகியவற்றையும் கணக்கில் கொண்டு 12 பிரிவேளைகள் ஒதுக்கப்படும். 10 பிரிவேளைகளில் கற்க வேண்டியதை 5, 6 பிரிவேளைகளில் முடிக்க முற்பட்டால் கற்றல் நடைபெறாது. அஜீரணம் தான் ஏற்படும். கற்றலில்லாமலேயே தேர்வுகளை எதிர்கொள்ள வேண்டுமென்றால் மனன முறைக்கு மாணவர் தள்ளப்படுவர். பள்ளியில் முழுமையாகக் கற்க இயலாததால் காலையும் மாலையும் தனிவகுப்புகளுக்குச் செல்ல வேண்டிய அவசியமும் ஏற்படுகின்றது. அதற்கான வசதி இல்லாதவர் அரைகுறை அறிவோடு தேர்வுகளை மட்டுமின்றி வாழ்க்கையையே எதிர்கொள்ள வேண்டியிருக்கும். பொதுத் தேர்விற்குரிய வகுப்புகளை எடுக்கும் ஆசிரியர்கள் படும் துன்பம் அளவிடற்கரியது.

ஒரு பட்டதாரி ஆசிரியர் வேடிக்கையாக ஆனால் வேதனையுடன் "மாணவர்கள் கீழ்வகுப்புகளினின்று அறியாமையைத் தொடர்வட்டி விகிதத்தில் சேர்த்துக் கொண்டு வருகின்றார்கள் (அடிப்படைகள் கூட தெரியாத அவர்களைத் தேர்விற்கு ஆயத்தப்படுத்தல் பெரும் சவாலாக இருக்கின்றது" என்று கூறினார்.. ஒன்றாம் வகுப்பிலிருந்து தரமான கல்வியை ஒவ்வொரு மாணவனுக்கும் உறுதி செய்வதன் மூலமே மனன முறைக் கல்வியினின்று மாணவர்களை விடுவிக்க முடியும். அதனை உறுதி செய்வது ஆண்டாய்வு. ஆனால் கல்வித் துறை தனது முதற்பணியான பள்ளி ஆண்டாய்வை முறையாக நடத்துவதைக் கைவிட்டுப் பல ஆண்டுகளாய்விட்டன. 10, 12 ஆம் வகுப்புகள் மட்டும் பள்ளி, அவற்றைக் கவனித்தால் போதும் என்ற மாயையினின்று கல்வித்துறை விடுபட வேண்டும். அப்பொழுது தான் அர்த்தமுள்ள முழுமையான கல்வி மாணவர்க்குக் கிடைக்கும். ஒரு அறிவு மிக்க சமுதாயத்தை உருவாக்க இயலும். விடுதலைப் போராட்டக் காலத்திலிருந்து மெக்காலே கல்விமுறையினின்று விடுவிப்போம் என்று தொடர் குரல் கொடுக்கப்பட்டு வந்தாலும் அதற்கு மாற்று கண்டறியாது திணருகின்றோம். கோத்தாரிக் கல்விக் குழு, பேரா.யஷ்பாலின் சுமையின்றிக் கற்றல் குழு ஆகியவை பள்ளிக் கல்வியில் தேவைப்படும் சீரிய மாற்றங்களை விரிவாகவும் தெளிவாகவும் எடுத்துரைத்துள்ளன.

தமிழ்நாட்டில் பாடச்சுமைக் குறைப்பு குழு, சமச்சீர் கல்விக் குழு ஆகியவையும் பல நடைமுறை சாத்தியமுள்ளப் பரிந்துரைகளை அளித்துள்ளன. ஆனால் அவை காற்றில் விடப்பட்டது மாத்திரமின்றி நேரெதிர் முடிவுகளும் எடுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன. மாணவர்க்காகப் பள்ளியா, பள்ளிக்காக மாணவரா என்ற வினா எழும்புகின்றது. பாடத்திட்டங்கள் உருவாக்குவதிலே மாணவரது வயது, புரிதல் தன்மை ஆகியவை கருத்தில் கொள்ளப்படாது உயர்கல்வியின் தேவைகளை முன்வைத்துத் தயாரிக்கப்படுகின்றன. இதுவே பெரும்பான்மையோரை உயர்கல்விக்குச் செல்லும் வாய்ப்பைக் குறைக்கின்றது என்பது ஒரு முரண்நகை. கற்றல் இன்று போட்டி முறையில் உள்ளதைக் குழுமுறையில் கற்பதை ஊக்குவிக்கும் வகையில் அமைக்க வேண்டும். வகுப்பறை விவாத அரங்காக மாற வேண்டும். மாணவர் பங்கேற்புடன் வகுப்பறை மாறும் பொழுது தான் உண்மையான கல்வி பெற முடியும் என்பது பல ஆய்வுகளும் வலியுறுத்தியுள்ளன. பள்ளிக் கல்வியில் சீரிய மாற்றங்களைக் கொணராது முன்னேற்றப் பாதையில் செல்ல இயலாது. பளபளக்கும் டபரா தம்ளர்களைப் பார்த்து டிகிரி காப்பி என நம்புவது மாதிரி, அர்த்தமற்ற கல்வி மூலம் அடுத்தடுத்த தலைமுறைகளை நாம் இழந்துவிடக் கூடாது.

## மாணவனின் தலைமுடியை குதறிய ஆசிரியை 'சஸ்பெண்ட்'

திருவனந்தபுரம்: கேரளாவில், மாணவனின் தலைமுடியை வெட்டிய, விளையாட்டு ஆசிரியை, பள்ளியிலிருந்து, 'சஸ்பெண்ட்' செய்யப்பட்டார். ஆசிரியை மீது, வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கேரள மாநிலம், திருவனந்தபுரம் அருகேயுள்ளது, நெடுமங்காடு என்ற சிறிய நகரம். இங்குள்ள ஒரு பள்ளியில், எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கான விளையாட்டு பாடப் பிரிவு நடந்து கொண்டிருந்தது. அங்கிருந்த ஒரு மாணவன், நீளமாக தலைமுடி வளர்த்திருந்தான். இதைப் பார்த்து, விளையாட்டு ஆசிரியை, கடும் கோபம் அடைந்தார். அந்த மாணவனை அழைத்து, அவன் தலைமுடியை, கத்திரியால், சரமாரியாக, வெட்டித் தள்ளினார். அழுதபடி, வீட்டுக்கு சென்ற மாணவன், தன் பெற்றோரிடம், இது குறித்து முறையிட்டான். இதையடுத்து, மாணவனின் பெற்றோர், போலிசில் புகார் அளித்தனர்.

விளையாட்டு ஆசிரியை மீது, வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. விசாரணைக்கும், போலீசார், அழைப்பு விடுத்துள்ளனர். இதையறிந்த, பள்ளி நிர்வாகம், அந்த ஆசிரியையை, அதிரடியாக சஸ்பெண்ட் செய்துள்ளது. இந்த விவகாரம், திருவனந்தபுரம் வட்டாரத்தில், பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

**– ஆதாரம்: தினமலர், 6.12.13**

# கடும் குற்றங்களைச் செய்யும் குழந்தைகளை சிறார் நீதிச் சட்டத்திலிருந்து விலக்கிவிடாதீர்

– வேத் குமாரி

சீர்திருத்த இல்லங்கள் சீர்திருத்தத்திற்கு இட்டுச் செல்லவில்லை என்றால், அதற்குக் காரணம் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம், குற்றங்களில் ஈடுபடும் சிறாரின் நடத்தையில் தேவைப்படும் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியவர்களான, சிறப்புத் தகுதியாளர்கள் மற்றும் வல்லுநர்களுடன் கூடிய இல்லங்களை ஏற்படுத்தாமல் இருப்பதுதான்.

வல்லுநர்களுடன் கலந்தாலோசித்த பிறகு, முன்னேறிய நாடுகளில் உள்ள நடைமுறைகளை பரிசீலித்தப் பிறகு, மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகமானது 16 முதல் 18 வயது வரையிலான சிறார் கடுமையான குற்றங்களில் ஈடுபடுவார்களானால் அவர்களுக்கு சிறார் நீதிச் சட்டத்தின் (J.J.A.) பாதுகாப்பு தேவையில்லை என்று கருதுவதாக அண்மையில் பல்வேறு பத்திரிகைகளில் செய்தி வந்துள்ளது. மேலும், இத்தகைய சிறார்கள் சீர்திருத்த இல்லங்களில் குறிப்பிட்ட காலம் இருப்பதால் அது அவர்களது நடத்தையில் நிச்சயமாக மாற்றத்தைக் கொண்டு வந்துவிடுவதில்லை என்றும் அமைச்சகம் தனது ஆய்வில் கண்டறிந்துள்ளது.

இந்த இரண்டு கருத்துகளுமே பிரச்சனைக்–குரியவையாகும். கலந்தாலோசிக்கப்பட்ட வல்லுநர்கள் யார் என்பது தெரியப்படுத்தப்படவில்லை. எந்த முன்னேறிய நாடுகளில் சிறார் நீதி அமைப்பிலிருந்து கடும் குற்றங்களைச் செய்யும் குழந்தைகளுக்கு விலக்கு அளிப்பதால் சிறார் குற்றங்கள் குறைந்துள்ளன என்பதும் தெளிவுபடுத்தப்படவில்லை. அநேகமாக அமெரிக்காவும் பிரிட்டனும் அந்த நாடுகளுக்குள் வரும் என்று நான் ஊகிக்கிறேன். ஏனெனில், பத்திரிகை செய்திகளில் அடிக்கடி இடம் பெறும் நாடுகள் இவைதான்.

1978ல், கடும் தண்டனைகளை வழங்க அமெரிக்கா முடிவு செய்தது. கொலைக் குற்றத்திற்கான தண்டனையிலிருந்து விலக்கு அளிக்கப்படுவதற்கான சிறார் வயதை 13 என குறைத்தது; வன்புணர்ச்சி, கொள்ளை உள்ளிட்ட குற்றங்களுக்கு உரிய தண்டனையிலிருந்து விலக்கு அளிக்கப்படுவதற்கான சிறார் வயதை 14 என குறைத்தது. அந்த நாட்டில் 1994ம் ஆண்டில் சிறார் குற்றங்கள் உச்சத்திலிருந்தன. ஒவ்வொரு லட்சம் குழந்தைகளிலும் 8,000த்திற்கும் மேற்பட்ட குற்றவாளிகள் இருந்தனர். 2010ம் ஆண்டில் இந்த குற்றவிகிதம் 4,857 ஆகக் குறைந்தது. ஆனால், அமெரிக்காவில் நடத்தப்பட்ட அனைத்து ஆய்வுகளும், அங்கு சிறார் குற்றங்கள் குறைந்ததற்கும் கடும் தண்டனைகள் அதிகரிக்கப்பட்டதற்கும் இடையே எவ்வித தொடர்பும் இருப்பதாகக் காட்டவில்லை[1]. 2010ல் 10–17 வயதுள்ள 7 கோடி குழந்தைகளில் 10 லட்சத்திற்கும் மேற்பட்ட சிறார் குற்ற வழக்குகளை அமெரிக்க நீதிமன்றங்கள் கையாண்டன. இருபதாண்டு காலத்தில் இந்த அளவிற்கு சிறார் குற்றங்களின் எண்ணிக்கை அதிகரித்த போதிலும், அமெரிக்க உச்சநீதிமன்றம், ராப்பர் – சைமன் வழக்கில் (2005) மரண தண்டனை அளிக்க மறுத்தது; கிரஹாம் – ஃப்ளோரிடா வழக்கில் குழந்தைகளுக்கு பரோல் இல்லாத சிறைத் தண்டனை வழங்குவதற்கு உச்சநீதிமன்றம் தடை விதித்தது.

**2012ல் பதிவு செய்யப்பட்ட மொத்த குற்றங்களின் எண்ணிக்கை 23,87,188. இவற்றில் குழந்தைகளால் செய்யப்பட்டவை மிகக் குறைவு – 27,936 மட்டுமே. மொத்தமுள்ள 44, 83,36,000 குழந்தைகளில் இந்தக் குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டவர்கள் மொத்தம் 35,123 பேர் மட்டுமே**

நரம்பியல் அறிவியலாளர்கள் வெளிப்படுத்திய ஆய்வு முடிவுகளைத் தொடர்ந்து இந்த மாற்றம் நிகழ்ந்தது. 16–20 வயது பிரிவுக்குள் உள்ளவர்களின் மூளைகளில், குற்றச் செயல்களை தூண்டுகிற பகுதி மிகவும் வளர்ச்சி அடைந்திருக்கும், அதனால் அவர்கள் ஆபத்தான நடத்தைகளில் ஈடுபடக்கூடியவர்களாக இருக்கிறார்கள்; அதே நேரத்தில் வயதில் மூத்தவர்களின் மூளைகள்

இத்தகைய உணர்வுத் தூண்டல்களை கட்டுப்படுத்தக் கூடியவையாக உள்ளன என்று அந்த ஆய்வு தெரிவித்தது[2]. அமெரிக்காவில் நடத்தப்பட்ட ஆய்வுகள் பின்வரும் உண்மைகளையும் கண்டறிந்துள்ளன: "பெரியவர்களுக்கான நீதிமன்றங்களில் வழக்கு தொடரப்படுகிற அல்லது பெரியவர்களுக்கான சிறைகளில் அடைக்கப்படுகிற பதின்பருவத்தினர் வாழ்க்கையில் மோசமாகவே செயல்படுகிறார்கள், சிறார் நீதி அமைப்பால் கையாளப்படும் சிறார்களைவிட இவர்கள் மிகவும் வன்முறை சார்ந்த குற்றங்களில் ஈடுபடக் கூடும். இந்த இளம் குற்றவாளிகள், பெரியவர்களைப் போல தங்களது செயல்களின் ஆபத்தான விளைவுகள் பற்றி ஆராய்வதில்லை. இதனால் அவர்கள் மோசமான முடிவுகளை எடுக்கக்கூடும். அது அவர்களை சட்டப்பூர்வமான சிக்கல்களில் தள்ளிவிடக்கூடும். சீர்திருத்த சேவைகளைப் பெறக்கூடிய, பெரியவர்களுக்கான குற்றத் தண்டனைகளிலிருந்து விலக்கி வைக்கக் கூடிய சிறார் நீதி அமைப்பிலிருந்து இத்தகைய பதின்பருவத்தினரை விலக்கி வைப்பது, அவர்களை சமுதாயத்தின் விளிம்புக்குள் தள்ளிவிடக்கூடும். அது அவர்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைப்பதை சாத்தியமற்றதாக்கிவிடும் என்பதை இந்தத் தகவல்கள் சுட்டிக்காட்டுகின்றன." இன்று, அமெரிக்காவில் இரண்டு மாநிலங்கள் மட்டுமே சிறார் வயதை 16 என தீர்மானித்துள்ளன. இதர 37 மாநிலங்கள் 18 வயதாகவே முடிவு செய்துள்ளன.

இங்கிலாந்தும் பிரிட்டனின் வேல்ஸ் அரசும் இத்தகைய சிறார்களுக்கு கடும் தண்டனைகளை வழங்குகின்றன. சிறார் நீதி அமைப்பிலிருந்து 12, 13 வயதுள்ள குழந்தைகளும் கூட விலக்கி வைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால், அங்கேயும் நிலைமையில் முன்னேற்றம் ஏற்படவில்லை. 2011 – 12ல் இங்கிலாந்து – வேல்ஸ் சமுகங்களில் நடந்த மொத்தக் குற்றங்களில் 15 சதவீதம் குழந்தைகளால் செய்யப்பட்டவை. குற்றச் செயல்களில் ஈடுபடக்கூடிய சிறார் மக்கள் தொகை 10 சதவீதமாக இருந்தது. 10–17 வயதுப் பிரிவைச் சேர்ந்த ஒவ்வொரு 445 குழந்தைகளிலும் ஒருவர் ஏதேனும் ஒரு வன்முறைக் குற்றத்திற்காக கைது செய்யப்பட்டார். இன்னொரு புரத்தில் பிரிட்டனின் ஸ்காட்லாந்து பகுதியில் 16 வயது வரையிலான சிறார்களில் 6 சதவீதத்தினர் மட்டுமே குற்றச் செயல்களில் ஈடுபட்டனர். அங்கு குழந்தைகள் பதிவாளர் (Children's Reporter System) என்ற முறை நடைமுறைப்படுத்தப்படுகிறது. குற்றம் செய்யவில்லை அல்லது நிரபராதி என்ற முறையில் அல்லாமல், "அடிப்படை நிலைமைகள்" நிரூபிக்கப்பட்டுள்ளதா என்ற அடிப்படையில் அணுகுவது என்பது உள்ளிட்ட கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு ஸ்காட்லாந்து அணுகுமுறை வகுக்கப்பட்டுள்ளது. குறிப்பான ஒரு குற்றத்திற்கு என அங்கு தண்டனை தரப்படுவதில்லை. மாறாக குழந்தையின் வாழ்க்கையில் ஏற்படக்கூடிய சிக்கல்களை கருத்தில் கொண்டு வழக்குகள் தள்ளுபடி செய்யப்படுகின்றன.

இந்தியாவின் நிலைமை அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் மாறுபட்டதாக இருக்கிறது. இங்கு 2012ல் பதிவு செய்யப்பட்ட மொத்த குற்றங்களின் எண்ணிக்கை 23,87,188. இவற்றில் குழந்தைகளால் செய்யப்பட்டவை மிகக் குறைவு – 27,936 மட்டுமே. மொத்தமுள்ள 44,83,36,000 குழந்தைகளில் இந்தக் குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டவர்கள் மொத்தம் 35,123 பேர் மட்டுமே (இவர்கள் கைது செய்யப்பட்டவர்கள் மட்டுமே, தண்டனை அளிக்கப்பட்டவர்கள் அல்ல)[3]. மொத்த நிகழ்ந்த 2,75,165 வன்முறைக் குற்றங்களில், 18 வயதிற்குக் கீழ்பட்ட குழந்தைகளால் செய்யப்பட்டவை 8,779 மட்டுமே. இவற்றில் கொலை, வன்புணர்ச்சி சம்பந்தப்பட்ட குற்றங்கள் 2,856. ஒட்டுமொத்த இந்தியாவில் 16–18 வயதுப் பிரிவைச் சேர்ந்த குழந்தைகளால் செய்யப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை 1,698 மட்டும்தான்.

100 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் தொகையைக் கொண்டுள்ள, ஒவ்வொரு துறையிலும் வல்லுநர்களைப் பெற்றுள்ள இந்தியாவால் இந்த அளவுக்கு சிறிய எண்ணிக்கையில் உள்ள குழந்தைகளுக்கு தனிப்பட்ட கண்காணிப்பு, கல்வி, உளவியல் ஆதரவு, சமூக ஆதரவு ஆகியவற்றை வழங்க முடியாது என்று அமைச்சகம் கருதுகிறதா? மூன்றாண்டு காலத்தில் நடத்தை மாற்றங்கள் ஏற்படாது என்று காட்டுகிற அறிவியல்பூர்வ ஆதாரம் ஏதேனும் உள்ளதா?

நாடு முழுவதும் கல்வி என்பது குறிப்பிட்ட ஆண்டுகளைக் கொண்ட தொகுப்புகளுக்குள் வழங்கப்படுகிறது. தொடக்கப் பள்ளி 5 ஆண்டுகள்; நடுநிலைப் பள்ளி 3 ஆண்டுகள், உயர்நிலைப் பள்ளி 2 ஆண்டுகள்; மேல்நிலைப் பள்ளி 2 ஆண்டுகள். இளநிலை பட்டப்படிப்புக்கான கல்வி 3 ஆண்டுகள் (தில்லி பல்கலைக் கழகம் தவிர்த்து) வழங்கப்படுகிறது. தொழிற்கல்வியை பொறுத்தவரையில் சட்டப் படிப்பு 3 ஆண்டுகளும், 5 ஆண்டுகளும் என உள்ளது. பொறியியல் படிப்பு 4 ஆண்டுகள், முதுகலைப் பட்டத்திற்கான படிப்பு இரண்டு ஆண்டுகள். இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் கடும் தண்டனையாக வழங்கப்படும் 20, 10 அல்லது 7 ஆண்டுகள் என்ற காலத் தொகுப்புகளில் கல்வி வழங்கப்படுவதில்லை.

சீர்திருத்த இல்லங்கள் சீர்திருத்தத்திற்கு இட்டுச் செல்லவில்லை என்றால், அதற்குக் காரணம் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம், குற்றங்களில் ஈடுபடும் சிறாரின் நடத்தையில் தேவைப்படும் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியவர்களான, சிறப்புத் தகுதியாளர்கள் மற்றும் வல்லுநர்களுடன் கூடிய இல்லங்களை ஏற்படுத்தாமல் இருப்பதுதான். சிறார் நீதிச் சட்டத்தின் பிரிவு 16(2) விதியின் கீழ் அத்தகைய இல்லங்களை ஏற்படுத்தியாக வேண்டும்.

1980ல் நடந்த குற்றவாளிகள் மறுவாழ்வுக்கான ஐ.நா. மாநாடு, நீண்ட கால சிறைத் தண்டனை வழங்கப்படுவதில் உள்ள முரண்பாட்டை சுட்டிக்காட்டியது. சுதந்திரமாக வாழ்வதற்கு அவர்களை தயார்படுத்துகிறோம், அவர்களது சுதந்திரத்தைப் பறித்து! அவர்களை பொறுப்புள்ள குடிமக்களாக மாற்ற முயல்கிறோம், அவர்களுக்கு எவ்வித பொறுப்பும் வழங்காமல்! சமுதாயத்தின் பிரதான நீரோட்டத்தில் அவர்களை இணைக்கிறோம், நீண்டகாலத்திற்கு அவர்களை சமுதாயத்திலிருந்து விலக்கி வைத்து! குறுகிய காலத்திற்கு சிறைத் தண்டனை அளிப்பதால் பயணில்லை என்று நீண்டகாலமாக சொல்லப்படுகிறது. அது குற்றவாளிகளின் மனங்களில் குற்றம் பற்றிய அச்சத்தை நீக்கிவிடுகிறது என்று கூறப்படுகிறது.

ஆனால், சிறைக் கைதி ஒருவர் விடுதலையான பிறகு சமூகம் பாதுகாப்பாக இருக்குமா என்பது அவர் எவ்வளவு காலம் சிறையில் வைக்கப்படுகிறார் என்பதைப் பொறுத்ததல்ல, மாறாக அவர் சிறையில் இருக்கும்போது நாம் என்ன செய்கிறோம் என்பதைப் பொறுத்ததேயாகும். சீர்திருத்தத்திலோ மறுவாழ்விலோ அக்கறை செலுத்தாமல் நீண்டகால சிறைத் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று கோருவது, குற்றத்தால் பாதிக்கப்பட்டவரின் உணர்வுகளைத் தணிப்பதற்காக, குற்றத்திற்குக் குற்றம் என பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்பதேயாகும்.

வன்முறைக் குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்படும் மனக் காயங்களையும், ஈடு செய்ய முடியாத இழப்புகளையும் மறுப்பதற்கில்லை. குற்றவாளியின் ரத்தத்தைப் பார்க்க வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்ப்பதையும் மறுப்பதற்கில்லை. சட்டத்தின் ஆட்சி நடைபெறும் சமுதாயங்களில், உணர்வுகளை மட்டும் கணக்கில் எடுத்துக்கொள்ளக் கூடாது; மாறாக நீண்டகால பின் விளைவுகள் எப்படி இருக்கும் என்பதை வைத்து முடிவு செய்யப்பட வேண்டும். குழந்தைகளை சிறைகளில் நீண்டகாலம் அடைத்து வைப்பது, சமுதாயத்தில் அவர்களை வேர்களற்ற மனிதர்களாக மாற்றிவிடும்; விடுதலைக்குப் பிறகு சமுதாயத்தோடு ஒருங்கிணைவதற்கோ, மறுவாழ்வு பெறுவதற்கோ வாய்ப்பற்றவர்களாக மாற்றிவிடும்; சிறைகளுக்குள் தப்பிக்க முயல்வது மற்றும் ஒழுக்கப் பிரச்சனைகளை ஏற்படுத்தும்; சாதாரண குடிமக்களின் வரிச் சுமைகளை அதிகரித்துவிடும். ஆகவே, வன்முறைக் குற்றங்களில் ஈடுபடும் குழந்தைகளைக் கையாள்வதற்கென, முழுமையான ஏற்பாடுகளுடன் கூடிய சிறப்பான பாதுகாப்பு உள்ள சீர்திருத்த இல்லங்கள் தேவை. அத்துடன் இணைந்ததாக, பாதிக்கப்பட்டவர்களுக்கான வலுவான பாதுகாப்பு, மறுவாழ்வு திட்டங்கள், உளவியல் மற்றும் நிதி ஆதரவுகள் ஆகியவையும் இருக்க வேண்டும். குழந்தைகள் செய்யக்கூடிய வன்முறைக் குற்றங்களின் வேர்களாக குழந்தைகளை முறைகேடாக நடத்துவது, முறையான பெற்றோர் கவனிப்பு இல்லாமல் போவது, பெற்றோர்களின் குற்றப் பின்னணி, வெளியே சுற்றும் நிலைமை, வன்முறை மற்றும் வறுமை சூழலில் சிக்குதல், போதைப் பொருள் அல்லது மதுப் பழக்க பிரச்சனைகள், கடுமையான நிர்ப்பந்தங்கள், குடும்பத்தின் பராமரிப்பின்மை, குடும்ப ஆதரவின்மை போன்ற காரணங்கள் உள்ளன என்று கண்டறியப்பட்டுள்ளது. அமைச்சகம் குழந்தைகளை சிறைகளுக்குள் தள்ள நினைப்பதை விட்டுவிட்டு இந்தக் காரணிகளை ஒழிப்பதற்குச் செயல்படட்டும்.

கட்டுரையாளர்: தில்லி பல்கலைக் கழக சட்டத்துறை பேராசிரியர்

***References:***

[1] "Assessing the Relative Effects of State Direct File Waiver Laws on Violent Juvenile Crime: Deterrence or Irrelevance?" by Benjamin Steiner and Emily Wright Source, The Journal of Criminal Law and Criminology (1973-), Vol. 96, No. 4 (Summer, 2006), pp. 1451-1477.

[2] Laurence Steinberg who argues in his paper "Should the Science of Adolescent Brain Development Inform Public Policy?" (Issues *in Science and Technology* , Spring 2012)

[3] Violent offences included are Murder, Attempt to Murder, Culpable Homicide not amount to Murder, Rape, Kidnapping and Abduction, Preparation and Assembly for Dacoity, Dacoity, Riot, Arson, and Dowry death.

**ஆதாரம்: The Hindu, செப்டம்பர் 26, 2013**

# சிறார் நீதி குறித்த தவறான கருத்துகளை உடைத்தல்

**– ஸ்வாகத ராகா**

சிறார் குற்றங்கள் மற்றும் நீதி குறித்த பொதுவான கண்ணோட்டங்கள் குறித்து, குறிப்பாக தில்லி, மும்பை கும்பல் வன்புணர்ச்சி நிகழ்வுகளுக்குப் பிறகு, உண்மைகளின் அடிப்படையில் ஒரு ஆழ்ந்த சிந்தனை தேவைப்படுகிறது.

கொடூரமான தில்லி கும்பல் வன்முறையும், மும்பை கும்பல் வன்முறை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள இரண்டு பேர் தாங்கள் சிறார் என்ற அடிப்படையில் முன்வைத்துள்ள கோரிக்கையும் சிறார் நீதிச் சட்டம் தொடர்பான முக்கியமான கேள்விகளை மீண்டும் எழுப்புகின்றன. குறிப்பாக கடுமையான குற்றங்களைச் செய்யக் கூடிய சிறார்கள் மீது பெரியவர்களுக்கான சட்டங்களின்படிதான் விசாரணை நடத்தப்பட வேண்டும், தண்டனை அளிக்கப்பட வேண்டுமேயன்றி அவர்கள் குழந்தைகள் என்ற அடிப்படையில் அல்ல என்ற வாதம் முன்வைக்கப்படுகிறது. 2013 ஜூலை 17 அன்று உச்சநீதிமன்றம் தற்போதைய சட்டத்தில் கை வைக்கக்கூடாது என்றும் சிறாருக்கான வயது 18 ஆண்டுகள் என நீடிக்க வேண்டும் என்றும் முடிவு செய்தது. எனினும், இது தொடர்பாக டாக்டர் சுப்பிரமணிய சுவாமி தாக்கல் செய்த சிறப்பு விசாரணை மனுவை உச்சநீதிமன்றத்தின் இன்னொரு அமர்வுக் குழு விசாரித்துக் கொண்டிருக்கிறது. இது தொடர்பாக, பொது மக்களின் நலன்களில் ஊடுருவி உள்ள சிறார் குற்றங்கள் மற்றும் நீதி தொடர்பான நான்கு தவறான கருத்துக்களை உடைப்பது முக்கியத்துவம் பெறுகிறது.

**தவறான கருத்து 1:** சிறார் குற்ற விகிதம் மிக அதிகமாக இருக்கிறது, இதனால் நமது சமுதாயத்திற்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது.

இந்தியாவில் நிகழ்த்தப்படும் ஒட்டுமொத்த குற்றங்களில் சிறார் குற்றங்கள் மிக மிகச் சிறிய விகிதத்தில்தான் உள்ளன. தேசிய குற்றப் பதிவு நிறுவன ஆவணங்களின்படி, இந்திய தண்டனை சட்டத்தின் கீழ் வரக்கூடிய ஒட்டுமொத்த குற்றங்களில், சிறார்களால் செய்யப்படும் குற்றங்கள் கடந்த மூன்று ஆண்டுகளில் 1 முதல் 1.2 சதவீதம் வரை பதிவாகியுள்ளன. சுமார் 65 சதவீத சிறார் குற்றவாளிகள் திருட்டு, கொள்கை போன்ற சொத்து சார்ந்த குற்றச் செயல்களுக்காக கைது செய்யப்பட்டுள்ளனர். 5 முதல் 8 சதவீதம் வரையிலான சிறார்கள் மட்டுமே வன்புணர்ச்சி, கொலை போன்ற குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டவர்கள். அண்மைக் காலமாக சிறார் குற்றங்கள் பற்றிய ஊடகச் செய்திகள் அதிகரித்துள்ளன என்ற போதிலும் கிடைத்துள்ள ஆதாரங்கள் சிறார் குற்றங்கள் இந்தியாவில் மிகப்பெரிய அளவிற்கு அதிகரித்துவிட்டன என்ற கருத்துக்கு ஆதரவாக இல்லை. இந்தியச் சமுதாயத்திற்கு தனது குழந்தைகளால் “அச்சுறுத்தல்” ஏற்பட்டுள்ளது என்ற அச்சம் மிகவும் மிகைப்படுத்தப்பட்டுள்ளதாகும்.

**தவறான கருத்து 2:** “பெரியவர்களின் குற்றங்களை” செய்கிற சிறார்கள், வழக்கில் பெரியவர்களாகவே நடத்தப்பட வேண்டும்.

பிஞ்சிலேயே வெம்புவது குறித்த கண்ணோட்டங்களுக்கு மாறாக, விடலைப் பருவம் என்பது உடல் ரீதியான, உடல் சுரப்புகள் சார்ந்த, உணர்வுப்பூர்வமான மாற்றங்களும் அதேபோல் மனித மூளையில் நிகழும் கட்டமைப்பு சார்ந்த மாற்றங்களும் கொண்ட பருவமாகும் என்று பல்வேறு உளவியல் மேம்பாட்டு ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஆகவே, இந்தக் காலகட்டத்தில் சிறார்கள் பெருமளவுக்கு சிக்கக்கூடியவர்களாக இருக்கிறார்கள். உடல் ரீதியாக, இந்த மாற்றங்களின் மூலமாக மனிதர்கள் குழந்தைப் பருவத்திலிருந்து முதிர்ச்சிப் பருவதற்கு மாறுகிறார்கள். மூளையின் இந்த கட்டமைப்பு மாற்றங்கள் 20வது வயதின் தொடக்க கட்டம் வரையில் நிகழ்வதாக, அல்பெர்ட்டா பல்கலைக் கழக ஆய்வாளர்கள், மூளைப் பதிவு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கண்டறிந்துள்ளனர். விடலைப் பருவத்தினரின் மூளையில் நிகழும் மாற்றங்கள் குறித்து 20 ஆண்டுகளாக ஆராய்ச்சி செய்து வந்தவரான, அமெரிக்க தேசிய மனநல நிறுவனத்தைச் சேர்ந்த, ஆய்வாளர் ஜே கீட், இந்த மாற்றம் 25 வயது வரையில் கூட நிகழ்கிறது என்று கூறுகிறார்.

கொலை, வன்புணர்ச்சி போன்ற “பெரியவர்” குற்றங்களில் ஈடுபடுவது என்பது முதிர்ச்சியைக் காட்டுவதல்ல. மாறாக பொறுப்பற்ற செயல்களுக்கு சிறார்கள் எப்படி இரையாகிவிடுகிறார்கள் என்பதற்கான நேரடி ஆதாரமே இது. கும்பலாக இருக்கும் விடலைப் பருவத்தினர் குற்றங்களில் ஈடுபடுவது பெரியவர்களை விட அதிகமாக இருக்கிறது என்று ஒரு ஆய்வு சுட்டிக்காட்டுகிறது. உளவியலாளர்களும் நரம்பியல் வல்லுநர்களும் மேற்கொண்ட ஆய்வுகள் விடலைப் பருவத்தினர் தொடர்ச்சியான நிர்ப்பந்தங்களுக்கும், எதிர்மறையான தாக்கங்ளுக்கும் உட்படக்

கூடியவர்களாக இருக்கிறார்கள், எதிர்கால விளைவுகள் பற்றி கவனத்தில் கொள்ள முடியாதவர்களாக இருக்கிறார்கள், பெரியவர்களைவிட அபாய நிலைமைகளை புரிந்துகொள்ளாதவர்களாக இருக்கிறார்கள், அபாயங்களையும் ஆதாயங்களையும் பிரித்துப் பார்க்க இயலாதவர்களாக இருக்கிறார்கள் என்று காட்டுகின்றன.

அமெரிக்க உளவியல் சங்கம், அமெரிக்க மனநல சங்கம், அமெரிக்க தேசிய சமூகப் பணியாளர்கள் சங்கம் ஆகிய அமைப்புகளின் கருத்துப்படி, "சுய கட்டுப்பாட்டை மேற்கொள்வது, அபாயத்தையும் ஆதாயத்தையும் சரியாக மதிப்பிடுவது, குறிப்பாக உணர்ச்சிப்பூர்வமான சூழல்களில் முதிர்ச்சியான மதிப்பீடு தேவைப்படுகிற நிலைமைகளில் எதிர்காலம் குறித்து சரியாக மதிப்பிடுவது போன்றவற்றில் பெரியவர்களுக்குரிய திறன்கள், வயதில் கூடிய விடலைப் பருவத்தினரிடம் இருப்பதில்லை." மேலும், விடலைப் பருவத்தின் பல்வேறு கால கட்டங்களில்தான் மூளை அமைப்பு வளர்ச்சியடைகிறது. நடுத்தர கட்ட விடலைப் பருவத்தில் (14–17 வயதுகள்) அபாயகரமான அல்லது பொறுப்பற்ற நடத்தைகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகள் மிக அதிகம் என்று மனநல வல்லுநர்கள் கண்டறிந்துள்ளனர். இந்தியாவில் கடந்த 5 ஆண்டுகளில் நடந்த குற்றச் செயல்கள் பற்றிய புள்ளி விவரம், இதனை உண்மை என்று எடுத்துக் காட்டுகிறது. இக்கால கட்டத்தில் குற்றச் செயல்களுக்காக கைது செய்யப்பட்ட சிறார்களில் பெரும்பாலோர் 16–18 வயதுப் பிரிவைச் சேர்ந்தவர்களாவர். சிறார் பருவத்திலிருந்து முதிர்ச்சிப் பருவத்திற்கு பொறுப்பான, பாதுகாப்பான முறையில் முழுமையாக மாறுவதில் மிகுந்த ஆதரவும் கவனிப்பும் தேவைப்படுகிற காலகட்டம் இது.

**தவறான கருத்து 3:** குற்றச் செயல்களில் ஈடுபடும் சிறார்களை பெரியவர்களாக நடத்துவது மூலம் சிறார் குற்றங்களுக்கு எதிரான தடையாகப் பயன்படும். அதன் மூலம் பொது மக்களின் பாதுகாப்பு மேம்படும்.

கடுமையான குற்றங்களைச் செய்யும் சிறார்களை பெரியவர்களாக நடத்துவதால் குற்றங்கள் தடுக்கப்படும் என்பதற்கு ஆதரவாக எவ்வித ஆதாரமும் இல்லை. இதற்கு நேர்மாறாகவே நடக்கிறது என்பதற்கு நிறைய ஆதாரங்கள் உள்ளன. அமெரிக்காவின் ரட்ஜர்ஸ் நகரைச் சேர்ந்த குற்ற நீதி ஆய்வு நிறுவன இணை பேராசிரியர் ஜெஃப்ரி ஃபாகன், நியூயார்க் நகரில் உள்ள பெரியவர்களுக்கான குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்ட விடலைப் பருவத்தினர், சிறார் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்ட விடலைப் பருவத்தினர் ஆகிய இரு பிரிவினரையும் ஒப்பிட்டு ஒரு ஆராய்ச்சியை மேற்கொண்டார். "முதிர்ச்சியடைந்த குற்றவாளிகளாக நடத்தப்பட்ட நியூயார்க் குழந்தைகள் அடிக்கடி, வேகமாக மீண்டும் கைது செய்யப்பட்டார்கள்; மேலும் கடுமையான குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டார்கள்; பெருமளவுக்கு அவர்கள் சிறைச்சாலைக்குத் திரும்பி வந்தார்கள்."

சிறார்களை பெரியவர்களுக்கான சிறையில் அடைப்பது அவர்களை மோசமான குற்றவாளிகளின் கையில் சிக்க வைத்துவிடும். அந்தக் குற்றவாளிகள் இவ்வாறு சிக்கிக் கொள்ளும் வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு இவர்களை கடுமையான குற்றங்களில் ஈடுபட தூண்டுவார்கள். இது சமுதாயத்தை பெரிய அபாய நிலைக்கு தள்ளிவிடும். திட்டமிட்ட குற்றச் செயல்களுக்கு ஆட்கள் கிடைக்கும் வாய்ப்பை அதிகரித்துவிடும். மாறாக "குற்றச் செயல்களில் ஈடுபடும் விடலைப் பருவத்தினரில் பெரும்பாலோர் வன்முறைக் குற்றங்களின் நாசகரமான வட்டத்திலிருந்து வெளியேறவும், புதிய வாழ்க்கையை தொடங்கவும் உதவி கிட்டுமா என்று ஏங்குகிறார்கள்." அவர்களுக்கு தரமான சீர்திருத்த / மறுவாழ்வு சேவைகள் கிடைப்பதை உறுதிப்படுத்துவதில் விரிவான சமுதாயம் முக்கியமான பங்காற்ற முடியும்," என்று பெங்களூருவில் உள்ள தேசிய சட்டப் பள்ளியில் உள்ள குழந்தைகள் மற்றும் சட்ட மையத்தில் சிறார்களுக்காகவும் அவர்களது குடும்பத்தினருக்காகவும் பணிபுரியும் பல்நோக்குக் குழுவின் தலைவர் ஆர்லென் மனோகரன் கூறுகிறார். அக்கறையுடன் கவனிக்கிற சூழல் அமைவதன் மூலம், கடந்த காலத்தில் அத்தகைய சூழல் இல்லாததால் ஏற்பட்ட சேதங்களை சரிபடுத்த முடியும் என்ற அறிவியல்பூர்வ முடிவுக்கு பல்வேறு கள நிலைமைகள் ஆதரமாக உள்ளன. பெங்களூரு நகரில் உள்ள எக்கோ சிறார் நீதி மையம் 2002ம் ஆண்டு முதல் 135 சிறார்களுக்கு போக்குவரத்து காவல் உதவியாளர் பயிற்சியை அளித்து வந்துள்ளது. இதன் மூலம், "சட்டத்தை மீறியவர்கள்" இப்போது "சட்டத்தை செயல்படுத்துவோராக" மாற்றப்பட்டுள்ளனர். இதன் மூலம் சீர்திருத்தம் சார்ந்த அணுகுமுறையின் வல்லமை வெளிப்படுகிறது.

**தவறான கருத்து 4:** கொடூரமான குற்றங்கள் மாறுபட்டவை, எனவே அவற்றில் சம்பந்தப்படும் சிறார்கள் உண்மையில் வக்கிரமானவர்களே.

அவர்கள் விதிவிலக்கானவர்கள். வித்தியாசமான முறையில் நடத்தப்பட வேண்டியவர்கள். கொடூரமான குற்றங்களின் உணர்ச்சிப்பூர்வ தன்மையின் காரணமாக அதில் சம்பந்தப்படுபவர்கள் தீய சக்திகளாக பிறப்பெடுத்தவர்களே என்று நம்புவது எளிதாக

இருக்கிறது. நம்மைச் சுற்றியுள்ள பெரியவர்கள் நமக்கு வழிகாட்டுகிறபோது நம் ஒவ்வொருவரையும் பொறுப்புள்ளவர்களாகவும் முதிர்ச்சி உள்ளவர்களாகவும் மாற்றுகிற அதே கட்டமைப்பு, பெரியவர்கள் நம்மை வேறு திசையில் தள்ளிவிடுகிறபோது நமக்கு ஆபத்தானதாக மாறிவிடுகிறது. வேறு எந்தப் பகுதியையும்விட ஆப்பிரிக்காவில் இந்த நிலைமையை அப்பட்டமாகக் காணலாம். குறிப்பாக காங்கோ ஜனநாயகக் குடியரசு, சியேரா லியோன் ஆகிய நாடுகளில் குழந்தைகள் பல்வேறு மோதல்களின்போது படை வீரர்களாகவே பயன்படுத்தப்படுகிறார்கள். அவர்கள், நான் கொடூரமான குற்றங்கள் என்று கருதுகிற குற்றச் செயல்களில் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

உலகம் முழுக்க, வறுமைப் பின்னணியிலிருந்து வரக்கூடிய குழந்தைகள், தங்களை வன்முறையில் ஈடுபடுத்தக்கூடிய கும்பல்களிடம் சிக்குகிறார்கள். 'லாஸ்ட் சான்ஸ் இன் டெக்ஸாஸ்' (டெக்ஸாஸ் நகரில் கடைசி வாய்ப்பு) என்ற நூலை எழுதியவரான ஜான் ஹூப்னர், டெக்ஸாஸ் அரசுப் பள்ளியில் 9 மாதங்கள் இருந்து, வன்முறைக் குற்றங்களில் ஈடுபட்ட சிறார்களுடன் பேசினார். அவர்கள் அவரிடம் தங்களது வாழ்க்கையைப் பற்றியும் தங்களது குற்றங்களின் கதைகளையும் வெளிப்படுத்தினர். ''வன்முறைக் கும்பல்களுடன் தொடர்புடைய பல குழந்தைகளிடையே காணப்படும் பொதுவான அம்சம் அவர்கள் துப்பாக்கியை கையாளக்கூடியவர்களாக இருப்பதுதான். ஒரு சிறுமி, இத்தகைய ஒரு கும்பலுடன் தொடர்புடைய தன்னுடைய அண்ணன் துப்பாக்கியை எப்படி கையாள வேண்டும் என்பதில் தனக்கு உதவி செய்ததாகவும், அப்போது தனக்கு 7 வயதுதான் என்றும் தெரிவித்தார். மற்றொரு சிறுவன் லத்தீன் கிங்ஸ் என்ற கும்பலின் தலைவனை சந்தித்திருக்கிறான், அப்போது அவன் பதின்பருவ வயதுக்குள் நுழைந்திருந்தான். அவன் எப்படி துப்பாக்கியை பிடிக்க வேண்டும் என்று கும்பலின் தலைவன் சொல்லிக்கொடுத்திருக்கிறான். ஆம், இப்படி எப்போதுமே நடந்துகொண்டுதான் இருக்கிறது. ஏனெனில், கும்பல் கலாச்சாரத்தில் வன்முறை ஒரு சடங்காகவே இருக்கிறது.

இனக்குழுக்கள் உருவாகிய காலத்திலிருந்தே இந்த வன்முறைச் சடங்குகளும் தொடங்கிவிட்டன. வாழ்க்கையின் அனைத்துத் தளங்களிலும் இதை நாம் காணலாம். இந்தியாவில் கல்லூரிகளில் நடைபெறும் 'ராகிங்' கொடுமை அப்படிப்பட்ட ஒன்றுதான். இன்றைய மூத்தவர்கள் பலரும் தங்களது கல்லூரி அறிமுக காலத்தில் சந்தித்த ராகிங் அனுபவங்களையும், தங்களுடைய ஜூனியர்களாக வந்த மாணவர்களுக்கு தாங்கள் செய்த ராகிங் கலாட்டாக்களையும் இப்போதும் நினைவு கூர்வார்கள். பெருமை வாய்ந்த கல்வி நிறுவனங்களில் கூட ராகிங் கொடுமைகள் நடைபெறுகின்றன. இவ்வாறாக அந்தச் சடங்கு ஒரு பாரம்பரியமாக, அதைத் தடுப்பதற்கு சமுதாயம் எவ்வளவு முயற்சிகள் மேற்கொண்டாலும், தொடர்கிறது. சில ராகிங் அனுபவங்கள் கொடூரமானவையாக மாறியிருக்கின்றன. நேர்மையாக அதையெல்லாம் சிந்தித்துப் பார்த்தால், நம்மில் சிலர் மற்றவர்களை மீள முடியாத அளவிற்கு துன்புறுத்தாமல் விட்டது அதிர்ஷ்டவசமாகத்தான் என்பது வெளிப்படலாம்.

குற்றச் செயல்களில் ஈடுபடும் சிறார்களை தண்டிப்பதற்கு பதிலாக, அவர்களை வேறு வகையில் கையாள வேண்டும் என்றும் என்கிறார் பெங்களூருவைச் சேர்ந்த வழக்கறிஞர் கீதா சாஜனாஷெட்டி. ''சிறார்களை எப்படி குற்றம் செய்யுமாறு தூண்ட முடியுமோ அதேபோல் சரியான வாய்ப்பும் கவனிப்பும் பாதுகாப்பும் கிடைக்குமானால் அவர்களை சட்டத்திற்கு கட்டுப்பட்டு நடக்கும் குடிமக்களாகவும் மாற்ற முடியும்,'' என்கிறார் அவர். புகழ்பெற்ற எழுத்தாளர் சி. எஸ்.லூயிஸ், ''எனக்கு 10 வயது இருந்தபோது குழந்தைகளுக்கான மாய மந்திரக் கதைகளை யாருக்கும் தெரியாமல் ரகசியமாகப் படித்தேன். யாராவது அதை கண்டுபிடித்திருந்தால் அது எனக்கு பெரிய அவமானமாக இருந்திருக்கும். இப்போது எனக்கு 50 வயதாகிறது. அந்தக் கதைகளை வெளிப்படையாக படிக்க முடிகிறது. நான் பெரியவனானபோது குழந்தைத் தனமான செயல்களை நான் கைவிட்டேன். குழந்தைத் தனமாக இருப்பது குறித்த அச்சம், மிகவும் வளர்ந்த ஆள் போல் காட்டிக்கொள்ள வேண்டும் என்ற விருப்பம் ஆகியவையும் கூட குழந்தைத் தனமான செயல்கள்தான்,'' என்று எழுதியுள்ளார்.

உண்மையில் நமது குழந்தைகள் முழுமையாக வளர்ச்சி பெற வேண்டும் என்ற விருப்பத்தை வெளிப்படுத்தவே செய்கிறார்கள். ஆனால், வளர்ந்தவராக இருப்பது என்றால் என்ன என்பது அவர்களைச் சுற்றியுள்ள வளர்ந்தவர்களின் தாக்கத்திற்கு உட்பட்டதாக இருக்கிறது. ''வளர்ந்தவராக'' இருக்க வேண்டும் என்ற குழந்தைகளின் உள்ளார்ந்த விருப்பத்தை பெரியவர்கள் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளவும் மற்றவர்களுக்கு ஆழ்ந்த துன்பம் ஏற்படுத்துமாறு அவர்களைத் தூண்டுவதும் சோகமான விஷயம்தான்.

(கட்டுரையாளர் மனித உரிமை சட்டங்கள் தொடர்பான ஆய்வாளராக உள்ளார். பெங்களூருவில் உள்ள தேசிய சட்டக்கல்லூரியின் குழந்தைகள் சட்ட மையத்தில் பணியாற்றுகிறார்.)

**ஆதாரம்: The Hindu, August 26, 2013**

# காரைக்கால் ஏன் டெல்லியாகவில்லை?

**– அ. வெண்ணிலா**

ஓராண்டுக்கு முன் என்னுடைய நண்பர் ஒருவர் டெல்லி சென்றிருந்தார். காலை ஒன்பது மணியளவில் அவர் கைபேசியில் அழைத்து, உணர்ச்சிவசப்பட்டுப் பகிர்ந்துகொண்ட செய்தி இன்னமும் எனக்கு அதே உணர்வெழுச்சியுடன் மனதில் இருக்கிறது.

ஒவ்வொரு சனிக்கிழமையும் குடியரசு மாளிகையின் பாதுகாப்பு வீரர்கள் பணி மாற்றிக்கொள்ளும் சடங்கு வெகு விமர்சையாக நடைபெறும். அன்று சனிக்கிழமை. அதை வேடிக்கை பார்க்க நண்பர் நின்று கொண்டிருந்திருக்கிறார். அப்போது, பத்துப் பதினைந்து பெண்கள் அங்கு கூடி, நாட்டையே உலுக்கிய நிர்பயாவின் வழக்கில் நீதி வழங்கக் கோரி முழக்கமிடத் துவங்கியிருக்கிறார்கள். முதலில் யார் காதிலும் விழாத அளவுக்கு அந்தப் பெண்களின் முழக்கம் இருந்திருக்கிறது. விநாடிகள் கடக்கக் கடக்க பத்து நூறாகவும் நூறு ஆயிரமாகவும் ஆயிரம் பல ஆயிரங்களாகவும் மாறி, இருபதாயிரத்துக்கும் மேற்பட்ட இளம் பெண்கள் அங்கு கூடிவிட்டார்கள். எப்படி வந்து சேர்ந்தார்கள் என்று யூகிக்கவே முடியாமல் சில நிமிடங்களுக்குள் அந்தப் பெண்கள் கூட்டம் கூடியிருந்தது.

எந்த அரசியல் தலைவராலும், அமைப்பாலும், அரசாலும் திரட்டப்படாமல், பாதிக்கப்பட்ட பெண்ணின் கண்ணீரைத் துடைப்பதற்காகத் தன்னெழுச்சியுடன் ஒன்றுதிரண்ட இளம் பெண்களின் கூட்டம் அது. அவர்கள் இந்திய நாடாளுமன்றக் கட்டிடத்தை முற்றுகையிட்டார்கள். பீய்ச்சியடிக்கப்பட்ட தண்ணீரும் வீசப்பட்ட கண்ணீர் குண்டுகளும் அவர்கள் முன் செயலிழந்து நின்றன. பெண் உடல் மீது நிகழ்த்தப்படும் பாலியல் வன்முறைகளுக்கு எதிரான கடுமையான வாசகங்கள்கொண்ட அவர்களின் ஆடைகள், ஊடகக்காரர்களையே மிரட்டின. நீதி கேட்டு ஒன்றுதிரண்ட பெண்களின் பேரெழுச்சியைக் கண்டு அரசு அதிர்ந்தது. வெற்றுக் கூச்சல்களுக்காக வழக்கமாக உள்ளே முடங்கிப்போகும் நாடாளுமன்றம், அன்று ஒரு நியாயமான எழுச்சிக்காக வெளியே முடங்கியது.

நாட்டின் தலைநகரத்தில், போதிய பாதுகாப்பில்லாததால் ஒரு மருத்துவ மாணவி, அவளுடைய நண்பருடன் இருக்கும்போதே வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டுக் கொல்லப்பட்டாள் என்பது சர்வதேச அளவில் இந்தியாவுக்குத் தலைக்குனிவை உண்டாக்கிய சம்பவம். இச்சம்பவம் தொடர்பாக சரியான முன்னெடுப்புகளைச் செய்த ஊடகங்களும், அப்படியான ஒரு நிர்ப்பந்தத்தை உருவாக்கிய பெண்களின் போராட்டங்களும் இந்த வழக்கை விரைந்து முடிக்க உதவின. சரியான நீதி என்பது, பாதிக்கப்பட்டவர்களுக்கான நியாயம் கிடையாது. அதுவும் இழப்பு உயிராக இருக்கும்பட்சத்தில்.

டெல்லி காயமே இன்னும் ஆறவில்லை. அதற்குள் காரைக்காலில் 15 பேர் கொண்ட கும்பல் ஒரு பெண்ணைப் பாலியல் பலாத்காரம் செய்துள்ளது. உணவுக்காக வேட்டையாடும் மிருகங்கள்கூட இப்படிப் பாலியல் வன்முறையில் ஈடுபடுவதில்லை. மனிதர்கள் என்ற போர்வையில் பெண்ணை வேட்டையாடும் மிருகங்களை என்ன செய்வது ?

குலைநடுங்கச் செய்யும் இதுபோன்ற சம்பவங்கள் நடக்கும்போதெல்லாம், கருத்து கந்தசாமிகள் தங்கள் திருவாய் களைத் திறந்து உளறும் வார்த்தைகள் இன்னும் நாற்றமெடுத்தவை. நிர்பயா, நள்ளிரவில் அரைகுறை ஆடையுடன் தன் ஆண் நண்பரோடு ஆபாசமாக இருந்ததே அவள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டதற்கான காரணம் என்று ஓர் அறிஞர் தன் தீவிரக் கண்டுபிடிப்பைச் சொல்லியிருந்தார். இப்போது, காரைக்காலில் பாதிக்கப்பட்ட பெண் ஒரு விலை மாது என்று தன் ஆராய்ச்சிக்கு நடுவே கருத்துத் தெரிவித்த ஒருவர், வந்த எதிர்ப்புகளைப் பார்த்து, அது தன் கருத்தல்ல என திரும்பப் பெற்றுக் கொண்டிருக்கிறார். பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்படும்போதெல்லாம் அவற்றுக் கான காரணங்களைப் பெண்கள் மேலேயே திருப்புவதற்கு எல்லோரும் தயாராக இருக்கிறார்கள். பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்ட பெண் அரைகுறை ஆடையோடு இருந்தாள். ஆண் நண்பரோடு ஆபாசமாக இருந்தாள். தனியாக இருந்தாள். அழகாக இருந்தாள். நிறைய ஆண்களோடு தொடர்புடன் இருந்தாள். பாலியல் தொழிலாளி. அவள் தோற்றமே தவறு செய்யத் தூண்டியது இவையெல்லாம் காரணங்களாகக் கற்பிக்கப்படுபவையே. உண்மையில், அவள் பெண்ணாக இருப்பதே காரணம்.

பாலியல் வன்முறைக்கு ஒரு பெண் உள்ளாக்கப்பட்ட பிறகு, அதன் மீதான சட்ட நடவடிக்கைகளில் எவ்வளவு அரசியல் ? பாதிக்கப்பட்ட பெண்ணின் இனம், சாதி; குற்றவாளியின் இனம், சாதி, அரசியல் பின்னணி, காவல்

துறை, அதிகாரிகள், குற்றம் நடந்த இடம் இவையெல்லாம்கூடப் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு நீதி கிடைப்பதன் பின்னணியாகச் செயல்படுகின்றன. நிர்பயாவுக்கு கொடுமை நடந்த இடம் தலைநகரம். உலக நாடுகளின் கேமரா லென்ஸ்கள் ஒளிரும் இடம், ஊடகங்கள் உருவாக்கிய உணர்வெழுச்சி, மாண வர்கள் ஒன்றுதிரண்டது எல்லாம் வழக்கை ஓராண்டுக்குள் முடிவுக்குக் கொண்டுவர உதவின. அதே காலகட்டத்தில், தூத்துக் குடியிலும் ஒரு பள்ளி மாணவி பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்ட கொடுமை நடந்தது. அந்த வழக்கின் விசாரணையே இன்னும் தொடங்கப்படவில்லை. சட்டம் எல்லோருக்கும் ஒன்றுதான். ஆனால், அது எல்லோருக்கும் ஒரே வேகத்தில் இல்லை. 15 பேர் சேர்ந்து ஒரு பெண்ணைப் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்குவது என்ற கொடுமையைக் கண்ணை மூடிக்கொண்டு ஒரு நிமிடம் யோசித்துப் பாருங்கள். இந்த சமூகத்தின் மீது காறி உமிழத் தோன்றவில்லையா? அந்தப் பெண் என்ன தவறு செய்தாள்? அவளின் தோற்றமும் நடவடிக்கையும் ஒழுக்கமும் அவள் சுதந்திரம் சம்பந்தப்பட்டது இல்லையா? ஒரு பெண்ணின் தோற்றமும் ஆடையும் அவள் தனிமையும் ஓர் ஆணை வக்கிரத்தை நோக்கித் தள்ளும் என்றால், அவன் மனிதன்தானா?

ஒரு பெண்ணின் உடலை வன்முறைக்கு உள்ளாக்குவது என்பது, அவள் உடல் மீதான அத்துமீறல். அந்த வன்முறையைச் செய்ய – கணவன் உள்பட – எந்த ஓர் ஆணுக்கும் உரிமை இல்லை, அதிகாரம் இல்லை என்று சட்டங்கள் சொல்கின்றன. ஆனால், சட்டத்தை நடைமுறைப்படுத்துபவர்களே பல நேரங்களில் இந்த வன்முறைகளைப் பெண்ணின் தனிப்பட்ட ஒழுக்க விதிகளோடு பொறுத்திப் பார்த்து, பாதிக்கப்பட்ட பெண் தாக்கப்பட்டது நியாயமே என்று வாதிடுவது இன்னும் 1,000 வருடங்களுக்கு இந்தச் சமூகம் திருந்தவே திருந்தாதா என்று அயர்ச்சியைத் தருகிறது. ஒரு பெண் பொதுவெளியில் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படும்போது, பல நூறு பெண்களின் கால்கள் மீண்டும் வீட்டுக்குள் இழுக்கப்பட்டு, இன்னும் பல கனமான சங்கிலிகளால் பிணைக்கப்படுகின்றன!

– தொடர்புக்கு:
அ.வெண்ணிலா, கட்டுரையாளர், கல்வியாளர்.
**ஆதாரம்: தி இந்து, ஜனவரி 3, 2014**

## வேதியியல் ஆய்வகத்தில் செயல்படும் மாதிரி பள்ளி: வகுப்பறை பற்றாக்குறையால் மாணவியர் அவஸ்தை

பனமரத்துப்பட்டி: மல்லூர் அரசு மேல்நிலைப் பள்ளியில், வேதியியல் ஆய்வக கட்டடத்தில், மாதிரி பள்ளி செயல்படுவதால், செய்முறை பயிற்சி நடப்பதில்லை என, புகார் எழுந்துள்ளது. வகுப்பறைகளில், முப்பருவ பாடப் புத்தகங்கள் உள்ளதால், வராண்டா மற்றும் மாடிப்படி அடியில் வகுப்பு நடப்பதால், மாணவியர், கடும் அவதிக்கு ஆளாகி உள்ளனர். சேலம் மாவட்டம், மல்லூர் அரசு மேல்நிலைப் பள்ளியில், 1,300க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் படிக்கின்றனர். 2009ல், நபார்டு திட்டத்தில், 93 லட்சம் ரூபாய் மதிப்பில், 22 வகுப்பறை கட்டப்பட்டு, வகுப்புகள் நடந்து வந்தன. சேலம் கல்வி மாவட்டத்துக்கு தேவையான, முப்பருவ பாடப் புத் தகம், நபார்டு கட்டடத்தில் உள்ள, பத்து வகுப்பறைகளில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன.

இதனால், வகுப்பறை பற்றாக்குறை ஏற்பட்டு, மாடிப்படி அடி, வராண்டா மற்றும் மரத்தடியில் வகுப்புகள் நடத்தப்படுகின்றன. மேலும், இப்பள்ளியின், வேதியியல் ஆய்வகத்தில் செயல்படும் மாதிரி பள்ளியில், ஆறு முதல், பிளஸ் 1 வரை, 163 மாணவ, மாணவியர் உள்ளனர். ஆய்வகத்தில், திரைச்சீலை கட்டி, அறை போல் தடுத்து, வகுப்புகள் நடத்தப்படுகின்றன. வேதியியல் ஆய்வகத்தில், மாதிரி பள்ளி செயல்படுவதால், பொது தேர்வுக்கு தயாராகும், பிளஸ் 2 மாணவ, மாணவியருக்கு, செய்முறை பயிற்சி வகுப்பு பாதிக்கப் பட்டுள்ளதாக, புகார் எழுந்துள்ளது. அதுமட்டுமின்றி, தலைமை ஆசிரியர் பணியிடம் காலியாக உள்ளதால், நிர்வாக பணி மேற்கொள்வதில், சிக்கல் ஏற்பட்டுள்ளது.

மல்லூர் அரசு மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் (பொறுப்பு) ஒருவர் கூறியதாவது; இங்கு, பாடப் புத்தகம் அடுக்கி வைத்திருப்பது, உயர் அதிகாரிகளுக்கு தெரியும். விடுமுறை நாளில், வெளியாட்கள், பள்ளி வளாகத்திற்குள் புகுந்து, பழைய கட்டடத்தில் உள்ள ஓடுகளை, கல் வீசி உடைக்கின்றனர். அதனால், வகுப்பறை ஓடுகள், சேதம் அடைந்துள்ளன. இது பற்றி, போலீசில் புகார் செய்துள்ளோம். சேலம், எம்.பி., நிதியில், 12 வகுப்பறை கட்ட ஏற்பாடு நடந்து வருகிறது. விடுமுறை நாளில், ஆய்வகத்தில் செய்முறை பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

**– ஆதாரம்: தினமலர், 8.12.13**

# மாற்றத்தின் வித்தகர்கள்

– சமஸ்

பிரதமர் மன்மோகன் சிங் அபூர்வமாக, இந்தியாவின் தேசிய அவமானம் இது என்று ஒப்புக்கொண்ட பிரச்சினை ஒன்று உண்டு ஏழ்மை, இந்தியக் குழந்தைகளைச் சூறையாடுவது. வளர்ச்சிபற்றி வாய் கிழியப் பேசும் இந்நாட்டில்தான் ஒவ்வொரு நாளும் 3,000 குழந்தைகள் பசிக்கொடுமையால் உயிரிழக்கின்றன; 42 குழந்தைகள் ஊட்டச்சத்துக் குறைபாட்டுடன் எடை குறைந்தவையாக இருக்கின்றன. இந்தியாவில் ஏழ்மை ஒழிப்புக்கான முயற்சிகளும் வறுமை ஒழிப்புக்கான போராட்டங்களும் அவ்வளவு எளிதானதல்ல.

பல ஆண்டுகளுக்கு முன்பு திருச்சி வீதிகளில், குழந்தைகளுக்காக உதவி கேட்டு நின்ற அந்த எளிய மனிதரை முதன்முதலில் பார்த்தபோது ஆச்சரியம். அவர் ஒரு விரிவுரையாளர். குமுழூர் அரசு ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனத்தில் பணியாற்றுபவர். ஒரு மளிகைக் கடைக்காரரிடம் அவர் உதவி கேட்டுக்கொண்டிருந்தார். அவர் கேட்ட உதவி ஒன்றும் அவ்வளவு பெரிய உதவி அல்ல. 25 குழந்தைகளுக்கு ஒரு வேளை உணவு அளிக்க அந்த மளிகைக் கடைக்காரர் ஏதாவது பொருட்கள் தர வேண்டும். அவ்வளவுதான். மளிகைக் கடைக்காரர் மறுத்துவிட்டார். அசராமல் அவருக்கு நன்றி சொல்லிவிட்டு, அடுத்த கடையை நோக்கிச் சென்றார் விரிவுரையாளர். அங்கும் உதவி கிடைக்கவில்லை. இன்முகத்துடன் இன்னொரு நன்றி. அடுத்த கடையை நோக்கிப் பயணம். இன்னொரு நாள் அவரை, ஒரு காய்கறிக் கடையில் பார்த்தேன். சலுகை விலையில் அதே சமயம், காய்கறிக் கடைக்காரருக்கு நஷ்டம் ஏற்படாத விலையில் காய்கறி கேட்டுக்கொண்டிருந்தார். மற்றொரு நாள் உள்ளூர் பிரமுகர் ஒருவர் வீட்டில் பார்த்தேன். மறுநாள் அந்தப் பிரமுகரின் பிறந்த நாள். எவ்வளவோ செலவுகளுக்கு மத்தியில், ஏன் 30 குழந்தைகளுக்கு ஒரு வேளை உணவு தரக் கூடாது? என்று கேட்டுக்கொண்டிருந்தார்.

நாட்டிலேயே குழந்தைகளுக்கு மதிய உணவுத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் தமிழகம்தான் முன்னோடி என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். காலை உணவுத் திட்டத்துக்கும் முன்னோடியாகிறது தமிழகம், விரிவுரையாளர் எஸ். சிவக்குமாரால். திருச்சியின் 25 அரசு சார் பள்ளிகளைச் சேர்ந்த பல நூறு ஏழைக் குழந்தைகளின் பசியைத் தீர்க்கிறது சிவக்குமார் அறிமுகப்படுத்திய சமுதாயக் காலை உணவுத் திட்டம்.

நான் படிச்சது அரசுப் பள்ளிக்கூடங்களிலும் அரசு உதவி பெறும் பள்ளிக்கூடங்களிலும்தான். எங்க வீட்டில் பெரிய கஷ்டங்கள் எதையும் நான் சந்திக்கலை. அதே சமயம், கூடப் படிச்சவங்களோட கஷ்டத்தைப் பார்த்திருக்கேன். பலரோட படிப்பு அரசாங்கம் கொடுக்குற மதிய உணவுலதான் ஒட்டிக்கிட்டு இருந்ததுங்கிறதை நேரடியா உணர்ந்திருக்கேன். ஆனா, இன்னமும் எவ்வளவு குழந்தைகளைப் பசி கொன்னுக்கிட்டு இருக்குங்கிறதை ஆசிரியர் பயிற்சி நிறுவனத்துல வேலைக்குச் சேர்ந்து, ஒவ்வொரு பள்ளிக்கூடமா ஆசிரியர்களைச் சந்திக்கப் போனப்பதான் உணர்ந்தேன்.

அரசுப் பள்ளிக்கூடங்கள்ல காலை வேளைல பிரார்த்தனைக் கூட்டத்துக்குப் போறப்பவெல்லாம் குழந்தைங்க மந்தமா நிக்குறதை அடிக்கடி பார்த்திருக்கேன். அதே மாதிரி காலை நேர வகுப்புகள்லயும் சில பிள்ளைங்க ரொம்ப சோர்வா உட்கார்ந்திருப்பாங்க. ஒருநாள் அப்படிப்பட்ட குழந்தைங்ககூடப் பேச ஆரம்பிச்சப்பதான் ஒரு விஷயம் தெரிஞ்சுது. காலையில வெறும் டீயும் பன்னும்தான் அவங்களோட உணவுங்கிறது. சில பிள்ளைங்க மயக்கம் போட்டுக்கூட விழுந்துடுவாங்க; நாங்கதான் டீயோ வடையோ வாங்கிக் கொடுப்போம்னு ஆசிரியர்கள் சொன்னாங்க. அன்னைக்கு முழுக்க நான் சாப்பிடலை. சாப்பாட்டுல கையை வைக்கும்போதெல்லாம் அந்தக் குழந்தைங்களோட முகம் வந்து மனசை வதைச்சுடுச்சு.

எப்போதுமே என்னோட பகல் பொழுது என்னோட தொழிலுக்கானதுன்னா, சாயங்காலப் பொழுது பொதுப் பணிக்குன்னு வகுத்துக்கிட்டு வாழறவன் நான். அதுக்கு முன்னாடி எவ்வளவோ விஷயங்கள்ல நான் ஆர்வம் காட்டியிருக்கேன். படிக்காத குழந்தைகளுக்கான வீதிப் பள்ளிகள், வீடு தேடிக் கல்விங்கிற மாதிரியான முயற்சிகள் அதெல்லாம். இதுக்குப் பின்னாடி, பசியைத் துடைக்குறதுதான் முதல் கடமைன்னு இறங்கினேன்.

முதன்முதலா சேவா சங்கம் பள்ளிக்கூடத்துல, அங்குள்ள தலைமை ஆசிரியை விசாலாட்சி உதவியோட இணைஞ்சு இந்தத் திட்டத்தைத் தொடங்கினேன். இன்னைக்குத் திருச்சியில மட்டும் 25 பள்ளிகள்ல காலை உணவு கொடுக்குறோம். இன்னும் இந்த விஷயத்தைக் கேள்விப்பட்டு, ஏராளமான ஊர்கள்ல பலரும் இந்தத் திட்டத்தை முன்னெடுக்குறாங்க என்று சொல்லும் சிவக்குமாரின் திட்டம் எளிமையானது.

ஒவ்வொரு பள்ளியின் ஆசிரியர்களும் தங்களால் இயன்ற ஒரு தொகையைப் பள்ளிக் குழந்தைகளுக்காக அளிக்க வேண்டும். கூடவே, அந்தப் பகுதியில் உள்ள கொடையாளிகளை அடையாளம் கண்டு, உதவி கேட்க வாரத்தில் ஒரு நாள் மாலைப் பொழுதை ஒதுக்க வேண்டும். இவ்வளவுதான். எல்லாப் பள்ளிகளிலும் காலை உணவுத் திட்டத்தைக் கொண்டுவந்துவிடலாம் என்கிறார் சிவக்குமார்.

உள்ளூர்ப் பிரச்சினைகளுக்கு உள்ளூர் வளங்களை வைத்தே தீர்வு காண்றதுதான் இதோட முக்கியத்துவம். அந்தந்தப் பகுதியில உள்ள வசதியானவங்களைத் தேடிப் பிடிப்போம். அவங்களோட பிறந்த நாள், அம்மா அப்பா நினைவு நாள் மாதிரியான முக்கியமான நாட்கள்ல குழந்தைகளுக்கு உணவு கொடுக்கச் சொல்லிக் கேட்போம். தவிர, அரிசி கொடுக்குறவங்க அரிசி கொடுக்கலாம்; மளிகைச் சாமான்கள் கொடுக்குறவங்க மளிகைச் சாமான்கள் கொடுக்கலாம். விறகுன்னு சொல்லி ரெண்டு மரத்துண்டுகளைக் கொடுத்தால்கூட வாங்கிப்போம். மளிகைக் கடைக்காரர்கள், காய்கறிக் கடைக்காரர்கள்கிட்ட சலுகை விலையில பொருட்களைக் கேட்டு வாங்குவோம். நன்கொடையாளர்களை நேரடியா கடைக்காரர்கள்கிட்டே பணத்தைக் கொடுக்கச் சொல்லிடுவோம். மதிய உணவு சமைக்கிற ஆயாக்களே கொஞ்சம் முன்னாடி வந்து சமைச்சுத் தந்துடுவாங்க.

இந்தத் திட்டத்தின் முக்கியமான இன்னோர் அம்சம்: முறைகேடுகளுக்கு வழி இல்லாமல் நடத்தப்படுவது.

உதவியை ஒரு ரூபாய்கூடப் பணமா வாங்குறது இல்லை. ஒண்ணு, உணவை நேரடியா சமைச்சு நீங்களே வந்து தரலாம்; இல்லைன்னா, பொருளா தரலாம். பொருட்கள் எல்லாமே பள்ளிக்கூடங்கள்ல எல்லோர் பார்வையிலேயும் இருக்குறதாலேயும் எல்லோரோட பங்களிப்பாலும் இது நடக்குறதாலேயும் வரவுசெலவுல முறைகேட்டுக்கு வழி இல்லை என்கிறார்.

உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுங்களா? உலகத்துல இருக்குற எடை குறைவான குழந்தைங்கள்ல சரிபாதிக் குழந்தைங்க நம்ம இந்தியக் குழந்தைங்க. பல ஆப்பிரிக்க நாடுகளைவிட மோசமான சூழல்லதான், பசி பட்டினியில இன்னைக்கும் நாம இருக்கோம். 100 ரூபாய் இருந்தா போதும்; 20 பிள்ளைகளுக்கு ஏதோ ஒரு கட்டுச்சாதமும் துவையலும் கொடுத்துடலாம். 50 ரூபாய்தான் இருக்குன்னாகூட கூழ் காய்ச்சிக் கொடுத்துடலாம். பசிக்குற நேரத்துல எதுவுமே அவங்களுக்கு தேவாமிர்தம்தான். நாங்க உணவு கொடுக்க ஆரம்பிச்ச பிறகு, பல பள்ளிக்கூடங்கள்ல குழந்தைங்களோட வருகைப் பதிவு கூடியிருக்கு. நேரத்துக்குப் பள்ளிக்கூடம் வர்றாங்க. படிப்புல காட்டுற ஆர்வம் அதிகரிச்சு இருக்கு. முன்னைவிடக் குழந்தைங்க தெளிவா இருக்காங்க என்று சொல்லும் சிவக்குமார், காந்தியிடம் சுட்டிக்காட்டுவது அவருடைய எளிமையை.

தன்னைக் கடையனிலும் கடையனாகத்தான் எப்போதும் நெனைச்சுக்கிட்டு இருந்தார் காந்தி. அந்த நெனைப்பு இருந்தா போதும். யாரிடமும் இணைஞ்சுக்கலாம். நான் என்னை அப்படித்தான் நெனைக்குறேன். நீங்க உதவின்னு சொல்றதைத்தான் நான் இணைஞ்சுக்குற–துன்னு சொல்றேன்; ஏன்னா, சமூகத்துல எல்லா நல்ல காரியங்களுமே நாலு பேர் கூடுறதாலதான் சாத்தியமாகும் இணையக் கூப்பிடுகிறார் சிவக்குமார்.

**– தொடர்புக்கு: . writersamas@gmail.com**

## பாடத் திட்டச்சுமை

**– முனைவர் ச.சீ. இராஜகோபாலன்**

ஆசிரியர்கள் தனிப் படிப்பிற்கு வரச் சொல்லி மாணவரை வற்புறுத்துவது கடும் தண்டனைக்கு உள்ளாகும் என்று இயக்குனரது எச்சரிக்கை நடைமுறைப்படுத்துவது எளிதல்ல. 1951–ஆம் ஆண்டிலேயே தனிப் படிப்பு பற்றி விதிமுறைகள் வகுக்கப்பட்டும் அவை மீறலுக்கு உட்பட்டே இருந்து வருகின்றன. மாறாக தனிப் படிப்பின் வீச்சு வெகுவாக அதிகரித்துள்ளது. பெரும்பான்மையான மாணவர்க்கு நர்சரி வகுப்பு முதல் தனி கவனம் தேவைப்படுகின்றது என்றால் தவறு பாடத் திட்டத்திலும் வகுப்பறைக் கற்பித்தலிலும் தேர்வு முறையிலும் தான் உள்ளது என்பது தெளிவு.

வயது, கற்கும் திறன், ஆர்வம்! ஆகிய மூன்று அடிப்படைகளுக்கும் முற்றிலும் மாறாக அமைந்துள்ள சுமைகூடிய கல்விமுறையை சீர்திருத்துவதே இன்றைய தேவை. இது குறித்து பேரா. யஷ்பால் குழுவின் சுமையின்றிக் கற்றல் அறிக்கையும் அதன் மீதான தமிழக அரசு நியமித்த குழுவின் அறிக்கையும் நடைமுறைபடுத்தக்கூடியதும் நடைமுறைப்படுத்த வேண்டியதுமான சீரிய பரிந்துரைகளை நல்கியுள்ளன. அவற்றைச் செயல்படுத்துவதன் மூலமே தனிப் படிப்புத் தேவையை ஒழித்து மாணவர் அனைவரும் விருப்பத்துடன் வகுப்பறையிலேயே முழுமையாகக் கற்க இயலும் சூழலை உருவாக்க இயலும் . அது ஒரு கனாக் காலமாக இல்லாது விரைவில் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

# பாலியல் துன்புறுத்தல் புகார்களை விசாரிக்க குழு அமைக்கிறது சென்னை உயர்நீதிமன்றம்

– ஏ. சுப்பிரமணி

பாலியல் துன்புறுத்தல் பிரச்சனைகள் அடுத்தடுத்து கிளம்புவதைத் தொடர்ந்து சென்னை உயர்நீதிமன்றம் தனக்காகவும், தமிழகத்திலும் புதுவையிலும் உள்ள அனைத்து துணை நீதிமன்றங்களுக்கும் விசாரணைக் குழுக்களை அமைத்துள்ளது. அனைத்து விதமான பாலியல் துன்புறுத்தல் புகார்களையும் விசாரிப்பதற்கும் உரிய தண்டனை நடவடிக்கைகளை அறிவிப்பதற்கும் இக்குழுக்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

“எனக்குத் தெரிந்து நாட்டிலேயே முதல் முறையாக பாலின புரிதல் மற்றும் புகார்களுக்கான உள் குழுக்களை (ஜிஎஸ்ஐசிசி) அமைத்து அதை அறிவிக்கவும் செய்திருப்பது எங்களது உயர்நீதிமன்றம்தான்,” என்று ஒரு மூத்த நீதிமன்ற அதிகாரி தெரிவித்தார்.

நவம்பர் 27 அன்று வெளியிடப்பட்ட அரசிதழ் அறிவிக்கையின்படி, இந்தக் குழுக்களை தலைமை நீதிபதி அமைப்பார். இக்குழுக்களில் குறைந்தபட்சம் 7 உறுப்பினர்களும் அதிகபட்சமாக 13 உறுப்பினர்களும் இருப்பார்கள். சென்னையில் உள்ள முதன்மை உயர்நீதிமன்றத்திற்கும், மதுரையில் உள்ள அதன் கிளைக்கும் தனித்தனி குழுக்கள் இருக்கும். சென்னை உயர்நீதிமன்ற வளாகத்திற்குள் பாலியல் துன்புறுத்தல்களை தடுப்பதற்கும், ஏதேனும் புகார்கள் வருமானால் அவற்றை பரிசீலிப்பதற்கும் விரிவான நடைமுறை விதிகள் வெளியிட்டுள்ளதாக அந்த அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜூலை 17 அன்று பினு தாம்தா வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது. தமிழகத்திலும் புதுச்சேரியிலும் உள்ள நீதிமன்றங்களில் வரக்கூடிய பாலியல் துன்புறுத்தல் புகார்களை விசாரிக்க அந்த நீதிமன்றங்களிலும் இத்தகைய குழுக்கள் அமைக்கப்படும் என்று மற்றொரு அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 14 வகையான பாலியல் துன்புறுத்தல்கள்

அந்தக் குழுக்களுக்கு மாவட்ட நீதிபதிகள் தலைமை தாங்குவார்கள். வழக்கறிஞர் மன்றத்தின் மூத்த உறுப்பினர்கள் அவற்றில் இடம்பெறுவார்கள். எனினும், உச்சநீதிமன்றத்தில் நீதிபதி ரஞ்சனா பிரகாஷ் தேசாய் தலைமையில் இதுபோன்ற ஒரு குழு அமைக்கப்பட்டதற்கு மறுநாளே, நவம்பர் 27 அன்று சென்னை உயர்நீதிமன்ற அறிவிக்கை வெளியிடப்பட்டுவிட்டது என்றாலும், அந்தக் குழுக்களின் உறுப்பினர்கள் யார் என்பது அறிவிக்கப்படவில்லை.

ஜிஎஸ்ஐசிசி குழுவில் உயர்நீதிமன்றத்தின் இரண்டு நீதிபதிகள் இருப்பார்கள் அவர்களில் ஒருவர் குழுவிற்குத் தலைமை தாங்குவார். வழக்கறிஞர் மன்றத்தின் தலைவர்களை பங்கேற்கச் செய்வதற்காக குழுவில் சென்னை பார் அசோசியேஷன், சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கம், பெண் வழக்கறிஞர்கள் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் குழுவில் இணைக்கப்படுவார்கள் என்று நீதிமன்றம் தெரிவித்துள்ளது. சென்னை உயர்நீதிமன்ற எழுத்தர்கள் சங்கத்திலிருந்தும் ஒரு பெண் உறுப்பினர் இக்குழுவில் அங்கம் வகிப்பார். அத்துடன், வெளியே இருந்து அதிகபட்சமாக இரண்டு உறுப்பினர்கள், சமூக நலத்துறையிலிருந்தோ அல்லது அரசுசாரா அமைப்புகளிலிருந்தோ தலைமை நீதிபதியால் நியமிக்கப்படுவார்கள். துணைப் பதிவாளர் நிலைக்குக் குறையாத பதவியில் உள்ள சென்னை உயர்நீதிமன்றத்தின் ஒரு பெண் அதிகாரியும் தலைமை நீதிபதியால் நியமிக்கப்படும் மற்றொரு உறுப்பினரும் குழுவில் இடம் பெறுவார்கள். இந்த அறிவிக்கையின் மூலம் மொத்தம் 14 வகையான பாலியல் துன்புறுத்தல்கள்

## முதல்முறையாக...

- **தலைமை நீதிபதியால் அமைக்கப்படும் குழுக்களில் 7 முதல் 13 உறுப்பினர்கள் வரை இருப்பார்கள்.**
- **சென்னையில் உள்ள முதன்மை உயர்நீதிமன்றத்திற்கும் மதுரையில் உள்ள அதன் கிளைக்கும் தனித்தனி குழுக்கள் இருக்கும்.**
- **ஜூலை 17 அன்று பினு தாம்தா வழக்கில் உச்சநீதிமன்றம் பிறப்பித்த ஆணையைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை.**

குறிப்பாக அறிவிக்கப்பட்டுள்ளன. அவற்றில், உடல் ரீதியான தொடர்பு மற்றும் தொடர் செய்கைகள், பாலியல் ஆதாயங்களை வற்புறுத்துதல் அல்லது கோருதல், ஆபாசப் படங்கள் அல்லது பாலியல் வெளிப்பாட்டுக் காட்சிகளை வெளிப்படுத்துதல், விரும்பத்தகாத வாய்மொழித் தகவல்கள் அல்லது எழுத்துப்பூர்வ தகவல்களை அனுப்புதல், பின்தொடர்தல், பாலியல் அங்கங்களை வெறித்துப் பார்த்தல், பாலியல் உணர்வுள்ள கருத்துகளை கூறுதல், உயர் அதிகாரிகள் தங்களது பதவி நிலையைப் பயன்படுத்திக் கொண்டு தொழில் முன்னேற்றத்தை காரணம் காட்டி விரும்பத்தகாத உடல்ரீதியான, வாய்மொழி ரீதியான அல்லது வாய்மொழி சாராத பாலியல் செயல்பாடுகளை கோருதல் உள்ளிட்ட அடங்கும். சட்டம் சார்ந்த வேலை வாய்ப்பில் சலுகை கிடைக்கும் என வாக்குறுதி அளிப்பது, உடனடியாக அல்லது எதிர்காலத்தில் சட்டம் சார்ந்த தொழிலுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்துவது ஆகியவையும் குற்றச் செயல்களாக குறிப்பிடப்பட்டுள்ளன.

உயர்நீதிமன்ற வளாகத்தில் பெண்களுக்கு பாதுகாப்பான வேலைச் சூழலை ஏற்படுத்துவது, பாலியல் துன்புறுத்தலுக்கான தண்டனைகள் குறித்து விளம்பரப்படுத்துவது, விழிப்புணர்வு திட்டங்களை மேற்கொள்வது, இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழும் இதர பிரிவுகளின் கீழும் பாலியல் குற்றத்திற்கான நடவடிக்கைகளை எடுப்பது உள்ளிட்ட பணிகளை ஜிஎஸ்ஜசிசி நிறைவேற்றும்.

**உயர்நீதிமன்ற வளாகத்தில் பெண்களுக்கு பாதுகாப்பான வேலைச் சூழலை ஏற்படுத்துவது, பாலியல் துன்புறுத்தலுக்கான தண்டனைகள் குறித்து விளம்பரப்படுத்துவது, விழிப்புணர்வு திட்டங்களை மேற்கொள்வது, இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழும் இதர பிரிவுகளின் கீழும் பாலியல் குற்றத்திற்கான நடவடிக்கைகளை எடுப்பது உள்ளிட்ட பணிகளை ஜிஎஸ்ஜசிசி நிறைவேற்றும்.**

**- ஆதாரம்: டைம்ஸ் ஆஃப் இந்தியா, 15.12.2013**

## 16 வயதுக்கு மேற்பட்ட இளம் குற்றவாளிகள் பெரியவர்களை போன்று விசாரிக்கப்படுவர்: மத்திய அரசு அதிரடி திட்டம்

18 வயதை எட்டாதவர்கள் இளம் சிறார்களாக கருதப்படுகிறார்கள். 18 வயது அடையாத இளம் குற்றவாளிகளை இளம் சிறார் நீதிபரிபாலன சட்டத்தில்தான் விசாரிக்க முடியும். மற்றவர்களைப் போன்று, இ.பி.கோ. சட்டம் அவர்களுக்கு பொருந்தாது. டெல்லியில், கடந்த ஆண்டு டிசம்பர் 16–ந் தேதி, ஓடும் பஸ்சில் மருத்துவ மாணவி, 6 பேர் கொண்ட கும்பலால் கற்பழிக்கப்பட்டார். 6 பேரில், இளம் சிறார் ஒருவனும் அடங்குவான். அவன்தான் மிக கொடூரமாக நடந்து கொண்டதாக தெரிய வந்தது. இருப்பினும், அவன் இளம் சிறார் என்பதால், 3 ஆண்டு ஜெயில் தண்டனையுடன் தப்பினான். இதற்கு பல்வேறு தரப்பிலும் அதிருப்தி எழுந்தது. அதுபோல், மும்பை சக்தி மில்ஸ் கூட்டு கற்பழிப்பு, கவுகாத்தி கூட்டு கற்பழிப்பு போன்ற சம்பவங்களிலும் இளம் சிறார்கள் ஈடுபட்டுள்ளனர். எனவே, இதற்கு முற்றுப்புள்ளி வைக்க மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம், அதிரடி திட்ட யோசனையை முன்வைத்துள்ளது. அதுதான், கொலை, கூட்டு கற்பழிப்பு போன்ற கொடிய குற்றங்களில் ஈடுபடும் 16 வயதுக்கு மேற்பட்ட இளம் சிறார்களை வயது வந்தவர்களாக கருதி, இ.பி.கோ. சட்டத்தின் கீழ் விசாரிக்கும் திட்டம் ஆகும்.

இதற்கு மத்திய மந்திரிசபை ஒப்புதலை கோரும் வரைவு குறிப்பை மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் தயாரித்துள்ளது. இதுகுறித்து அந்த அமைச்சகத்தின் உயர் அதிகாரி ஒருவர் கூறியதாவது:– இன்னும் சில நாட்களில், இந்த திட்ட யோசனை இறுதி செய்யப்படும். நிபுணர்களுடன் பல முறை ஆலோசனை நடத்தி, அமைச்சகம் இந்த முடிவை எடுத்துள்ளது. வளர்ந்த நாடுகளில் பின்பற்றப்படும் நடைமுறையை நன்கு ஆய்வு செய்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. நிறைய இளம் சிறார்கள் கொடிய குற்றங்களில் ஈடுபடுவதும், அவர்கள் 18 வயதை எட்டவில்லை என்பதால் கடுமையான தண்டனையில் இருந்து தப்பிப்பதும் நடந்து வருவதால், மத்திய பெண்கள் மற்றும் குழந்தை மேம்பாட்டு அமைச்சகம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார். மத்திய அரசின் இத்திட்டம் நிறைவேறினால், 16 முதல் 18 வயதுக்குட்பட்ட இளம் குற்றவாளிகளுக்கு இனிமேல் சட்ட பாதுகாப்பு கிடைக்காது.

**ஆதாரம்: மாலைமலர் 3.12.2013**

# பிறந்ததும் இறப்பு

ஒரு வருடத்தில் இந்தியாவில் பிறந்ததும் இறக்கும் குழந்தைகள் எண்ணிக்கை 3 லட்சத்துக்கும் மேல். இது உலகளாவிய எண்ணிக்கையில் (அதாவது பிறந்த அன்றே இறக்கும் சிசுக்கள்) 29% ஆகும்.

உலகம் முழுவதிலும் பிறந்த அதே நாளில் இறந்துவிடும் குழந்தைகளின் எண்ணிக்கை பத்து லட்சத்தை தாண்டி விடுகின்ற நிலையில், ஒவ்வொரு நாட்டிலும் பிறந்த முதல் 24 மணி நேரம் என்பது பச்சிளம் குழந்தைகளுக்கு பாதிப்பு மிகுந்த பாதுகாப்பில்லா அபாயநாள் என்று கூறிவிடக் கூடியதாக இருக்கிறது.

குழந்தைகளைக் காப்போம் (save the children) என்னும் அமைப்பு, தன் 14வது ஆண்டறிக்கையில் வெளியிட்டுள்ள புள்ளி விவரங்கள் உலகத் தாய்மார்களின் நிலை என்னும் தலைப்பில் வெளி வந்துள்ளது.

**அது பின் வருமாறு:**

ஒவ்வொரு வருடமும் 400 லட்சம் பெண்கள் திறமை வாய்ந்த பிரசவ செவிலியின் துணையில்லாமல் வீட்டிலேயே குழந்தைகளைப் பெற்றெடுக்கிறார்கள்.

ஒவ்வொரு நாளும் 800 பெண்கள் கருவுற்றிருக்கும்போதோ அல்லது பிரசவிக்கும்போதோ இறக்கிறார்கள். 8000 குழந்தைகள் பிறந்த ஒரு மாதத்துக்குள் இறக்கிறார்கள்.

ஐந்து வயதுக்குபட்டு இறக்கும் மொத்த குழந்தைகளில், 43 சதவீதம் குழந்தைகள் பச்சிளம் குழந்தைகளாவர்.

30 லட்சம் பச்சிளம் குழந்தைகள் ஒவ்வொரு வருடமும் இறக்கிறார்கள். அதிலும் இவர்கள் இறப்பது கிருமித் தொற்று, பிறக்கும்போது நிகழும் சிக்கல், முழு வளர்ச்சியடையாமலே பிறக்கும் குறை மாத பிரசவங்கள் போன்ற எளிதாக தடுக்கக் கூடிய நோய்களினால் ஆகும்.

60 சதவீத சிசுக்களின் மரணம் என்பது பிறந்த முதல் மாதத்தில் நடக்கிறது. இவற்றில் மூன்று பங்கு (வருடத்துக்கு 20 லட்சம்) குழந்தைகள் பிறந்த முதல் வாரத்திலேயே இறந்துவிடுகின்றன.

பிறந்ததும் மற்றும் பிறக்கும்போது இறக்கும் குழந்தைகளில் 98 முதல் 99 சதவீதம் வளரும் நாடுகளில்தான் நடக்கின்றன. ஏனெனில், இங்கு கர்ப்பிணி பெண்களுக்கும் பிறக்கும் சின்னஞ்சிறு சிசுக்களுக்கும் போதிய அடிப்படை சுகாதார வசதிகள் கிடைப்பதில்லை.

**இந்தியாவில் நிலவரம்:–**

இந்தியாவில் பிறந்ததும் இறக்கும் குழந்தைகள் எண்ணிக்கை தொடர்ந்து அதிகமாகத்தான் இருந்து வருகிறது. அது வருடத்துக்கு 3 லட்சம் குழந்தைகளுக்கு மேல். இது உலக அளவில் 29 சதவீதம் என்று அறிக்கை தெரிவிக்கிறது.

மாதிரி பதிவு அறிக்கை (SR52011)யை மேற்கோள் காட்டி மத்திய பிரதேசம் மற்றும் உத்தரப்பிரதேசத்தில் 32 என்றும், அதற்கு அடுத்ததாக ஒரிசா 30 என்றும் இவ்வறிக்கை தெரிவிக்கிறது. கேரளம் இவ்வறிப்புகளை குறைப்பதில் முன்னணியில் நிற்கிறதென்றும் தமிழ்நாடு, டில்லி மற்றும் மகாராஷ்டிரம் இவற்றில் 24 என்றும் சொல்கிறது.

இந்தியாவில் பிறக்கும் எல்லா குழந்தைகளும் நிச்சயமாய் பிழைத்துக் கொள்ளும் என்னும் உத்தரவாதமின்மை தான் நிலவுகிறது. இந்த சமமின்மைதான் நிலையாகவும் மிக விரிந்து கொண்டும் செல்கின்றது.

பொருளாதார மற்றும் சமூகப் பின்தங்கிய குடும்பங்களில் பிறக்கும் குழந்தைகள்தான் மிகுதியாக பிறந்ததும் இறப்பை சந்திக்கின்றனர்.

மிக ஏழ்மையான குடும்பங்களில் பிறக்கும் குழந்தைகளுக்கு இறக்கும் வாய்ப்பு பணக்காரக் குடும்பங்களில் பிறக்கும் குழந்தைகளைவிடவும் மிக அதிகம் ஆகும்.

ஏழ்மையான குடும்பங்களில் பிறக்கும் குழந்தைகள் நோய் வாய்ப்படும் வாய்ப்புக்கு இலக்காகி விடுகிறார்கள். நோய் எதிர்ப்பு சக்திக் குறைபாடு மற்றும் ஊட்டச்சத்து குறைவு காரணமாகவும், அவர்கள் வீடுகளில் வசதிக்குறைவு காரணமாக தடுப்பு மருந்துகள் பெறுகின்ற வாய்ப்பும் குறைந்து போய்விடுகின்றது.

**மாநிலங்களுக்கு இடையேயுள்ள வித்தியாசங்கள்:**

மண்டல அளவிலான மாநிலங்களுக்கு இடையேயுள்ள வித்தியாசம் என்று பார்த்தோமானால் சமூக மற்றும் பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய மாநிலங்களான பீகார், சத்தீஸ்கர், ஜார்க்கண்ட், உத்தரபிரதேசம் ராஜஸ்தான் மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகும்.

பிறந்த உடனே இறக்கும் குழந்தைகளின் இறப்பு விகிதத்தில் மிக அதிகமான வேறுபாடு பிஹார், சட்டிஸ்கர், ஜார்கண்ட், உத்தரபிரதேசம், ராஜஸ்தான் மற்றும் மத்திய பிரதேசம் போன்ற சமூக, பொருளாதார மற்றும் சுகாதார விஷயங்களில் மிகவும் பின்தங்கியுள்ள மாநிலங்களில் நிலவுகிறது.

**நகர் மற்றும் கிராமப்புறங்கள்:**

நகரங்களைவிட கிராமப்புறங்களில்தான் பிறந்ததும் இறக்கும் சிசுக்களின் விகிதம் அதிகமாயிருக்கிறது. இருந்த போதிலும் மிகச் சமீபத்திய விஷயங்களைப் பார்த்தால் கிராமப்புறங்களுக்கு சமமாகவும் சில நேரங்களில் அதைவிட மிக மோசமான நிலையிலும் நகரங்கள் இருப்பதாகத் தெரிகின்றது.

**கல்வி நிலை:**

தாய்மார்களின் கல்வி மற்றும் வயது போன்றவற்றை நோக்கும்போது இன்னொரு சமன்பாடின்மை நிலவுவது. தெரிகின்றது. ஓரளவு படித்த பெண்களைவிட படிப்பறிவே இல்லாத பெண்களுக்கு பிறந்த குழந்தைகள் அதிக அளவில் இறந்திருப்பது தெரிய வருகின்றது.

**தாய்மார்களின் வயது:**

தேசிய குடும்ப நலக் கணக்கெடுப்பு (NFHS - 3) படி குழந்தைகளின் பிறப்பு இறப்பு மற்றும் தாய்மார்களின் வயதுக்கு நேரடி தொடர்பு இருப்பது தெரிய வருகின்றது. எந்த அளவுக்கு பெண்ணின் வயது குறைவாக இருக்கிறதோ அந்த அளவுக்கு குழந்தை பிழைப்பது அரிதாகவும் இருக்கின்றது.

**சாதிய ரீதியான வித்தியாசம்:**

சாதி மற்றும் பழங்குடியினருக்குப் பிறக்கும் குழந்தைகள் இறக்கும் வாய்ப்பு பிற சாதியினரைவிட அதிகமாய் இருக்கின்றது. மற்ற சாதியினரிமும் சமூகப் பின்னணி உள்ளவர்களிடமும் இந்த விகிதாசாரம் (பிறந்ததும் இறக்கும் சிசுவிகிதம்) குறைந்து வந்தாலும் இந்த மேற்சொன்ன இருபிரிவினரிடம் குறைந்த இறப்பு விகிதமென்பது காணப்படவில்லை.

## மிகக் குறைந்த செலவிலேயே ஒரு லட்சத்துக்கு அதிகமான குழந்தைகளை காக்கும் கருவிகள்

*பிறந்ததும் இறக்கும் குழந்தைகள்*
*சாவுக்கு காரணங்கள்*

### பிறக்கும்போது சிக்கல்

**ரிசச்சிடேகன் என்னும் குழந்தைகள் சுவாசிக்க உதவும் கருவி.**

# 23%

பிழைக்கும் குழந்தைகள் **229,000**

செலவு – **5 முதல் 6 டாலர் வரை**

### குறைமாத குழந்தை இறப்பு

**கார்டிகாஸ்டரிராய்டு தாய்மார்களுக்கு கொடுப்பதன் மூலம் குறைமாத குழந்தை பிறப்பை தடுக்கலாம்.**

# 35%

பிழைக்கும் குழந்தைகள் **340,000**

செலவு – **51 டாலர்**

### கிருமித் தொற்று

**குளோஷெக்ஸ் டைன் மூலம் தொப்புள் கொடி கிருமித் தொற்றை தடுக்கலாம்**

# 25%

பிழைக்கும் குழந்தைகள் **509,000**

செலவு – **0.23 டாலர்**

செப்சிஸ் மற்றும் நிமோனியாவை (பிறந்த சிசுவுக்கு) தடுக்கும் ஊசி மருந்துகள்

செலவு – 13 முதல் 2.00 டாலர் வரை

பிழைக்கும் குழந்தைகள் 509,000. இந்த நான்கு வகைப் பிரயோகத்தின் மூலம் வருடத்துக்கு 1,077000 பிறந்த சிசுக்களை 75 நாடுகளில் காப்பாற்ற முடியும்.

**– ஆதாரம்: “உலகத் தாய்மார்களின் நிலைமை” என்னும் Save the children என்னும் அமைப்பின் 2013ம் வருட அறிக்கை.**

# குழந்தைகளின் இலவச கட்டாயக்கல்வி உரிமைச் சட்டம் 2009

## கலந்தாய்வுக் கூட்டம், 5 செப்டம்பர், 2013

## கல்வி உரிமைச் சட்டமும் தனியார் பள்ளிகளின் நிலையும்

**முன்னுரை:**

மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு மற்றும் கல்வி உரிமை கூட்டமைப்பு – தமிழ்நாடு நடத்துகின்ற, குழந்தைகளின் இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009 மற்றும் விதிகள் 2011, குறித்த கலந்தாய்வு கூட்டத்திற்கு, தலைமை தாங்குகின்ற தலைவர் அவர்களுக்கும், பிற நிர்வாகிகளுக்கும், வருகை தந்திருக்கும் பொதுநல அமைப்பு நிர்வாகிகளுக்கும், பெற்றோர்களுக்கும், கருத்துரை வழங்க இருக்கின்ற கல்வியாளர்களுக்கும், நான் சார்ந்திருக்கின்ற **தமிழ்நாடு மாணவர்–பெற்றோர் நலச்சங்கத்தின்** சார்பாக அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு மாணவர்–பெற்றோர் நலச்சங்கம், மாநிலம் முழுவதும், பெற்றோர்களை ஒருங்கிணைத்து, அவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி, சங்கமாக ஒன்றுபடுத்தி மாணவர்களின் நலன்களுக்காகவும், பெற்றோர்களின் உரிமைகளுக்காகவும் கல்வி மேம்பாட்டிற்காகவும் பாடுபட்டு வருகிறது.

கடந்த ஆண்டு, இதே இடத்தில் நடந்த கலந்தாய்வுக் கூட்டத்தில், பார்வையாளராக கலந்துகொண்ட என்னை, இந்த வருடம், கருத்துரை வழங்குபவராக அழைத்ததற்கு இயக்குநர் பெர்னாண்டஸ் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அறிவு சார்ந்த, இந்த அவையின் முன் நின்று, எனது கருத்துக்களை எடுத்து வைப்பதில் பெருமை கொள்கிறேன்.

**தூக்கிப்பிடிக்காவிட்டாலும், துரத்த வேண்டிய சட்டம் இல்லை:**

குழந்தைகள் இலவச கட்டாயக்கல்வி உரிமைச்சட்டம் குறித்து, நம்மில் பலருக்கு அதிருப்தி உண்டு. இச்சட்டம் முழுமையான கல்வி உரிமையை வழங்கவில்லை என்ற ஆதங்கம் உண்டு. இச்சட்டத்தை, குழந்தைகளின் **இலவச கட்டாய ஆரம்பக்கல்வி** உரிமைச்சட்டம் என்று சொல்வதே சரியாக இருக்கும் என, நானும் கருதுகிறேன். ஏனெனில், இச்சட்டம் 6 வயது முதல் 14 வயது வரை உள்ள குழந்தைகளின் உரிமைகளை மட்டுமே பேசுகிறது. இச்சட்டத்தில் இன்னும் சில பல குறைபாடுகள் இருப்பது உண்மைதான். அதற்காக இச்சட்டத்தை **ஒதுக்கிவிடவோ அல்லது நீர்த்துப்போகச் செய்துவிடுவதோ** சரியில்லை. நீண்ட நெடிய போராட்டங்களுக்குப் பின் இச்சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

**1910ஆம் ஆண்டுவாக்கிலேயே,** அன்றைய ஆங்கில அரசின் சட்டப்பேரவையில், **திரு. கோபாலகிருஷ்ண கோகலே** அவர்கள், அனைவருக்கும் கட்டாய ஆரம்ப கல்வி அளிக்க வேண்டும் என குரல் கொடுத்துள்ளார். **1944ஆம் ஆண்டுவாக்கில் சார்ஜன்ட்** என்ற ஆங்கிலேயர், தனது அறிக்கையில் 6 வயது முதல் 14 வயது வரையுள்ள அனைத்து குழந்தைகளுக்கும், இலவச அடிப்படைக் கல்வி வழங்க வேண்டும் என பரிந்துரைத்துள்ளார். நமது நாடு குடியரசானபோது, **அறுபது ஆண்டுகளுக்கு முன்பே**, நமது அரசியலமைப்புச் சட்டத்தில், **அடுத்த பத்து ஆண்டுகளுக்குள்** 14 வயதிற்கு உட்பட்ட குழந்தைகள் அனைவருக்கும், இலவச கட்டாயக் கல்வி வழங்க வேண்டும் எனக் கூறப்பட்டிருந்தது. மத்திய அரசு 1964ஆம் ஆண்டுவாக்கில் அமைத்த **கோத்தாரி ஆணையமும்** இதையேதான் வலியுறுத்தியது. இவ்வளவிற்கும் பின்புதான் 2009ஆம் ஆண்டு இச்சட்டம் கொண்டுவரப்பட்டது. **கல்வி கற்றல் என்பது இலவசமாக்கப்பட வேண்டும், அதற்கு எவ்வித தடங்களும் இருக்கக்கூடாது** என்ற நல்ல நோக்க அடிப்படையில் இச்சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. இச்சட்டமானது தனியார் பள்ளிகளின் பெற்றோர்களுக்கு, குறைந்த அளவிலாவது, **பாதுகாப்பையும், பலத்தையும், தட்டிக் கேட்கும் தைரியத்தையும்** கொடுத்துள்ளது. அனைவருக்கும் இலவச கட்டாயக்கல்வி உரிமைச்சட்டம் என்பதின் **துவக்கப்புள்ளியாக** இச்சட்டத்தை எடுத்துக்கொண்டு, இச்சட்டத்தை இன்னும் கூடுதலாக பலப்படுத்தி, அருகாமைப்பள்ளி முறைமையைக் கொண்ட,

**பொதுப்பள்ளிகள் மூலம் கல்வி** என்ற இலக்கை அடைய தொடர்ந்து போராடுவோம்.

### தனியார் பள்ளிகளின் போக்கு:

அரசு உதவி பெறாத தனியார் பள்ளிகள், தங்கள் பள்ளிகளை சுயநிதிப் பள்ளிகள் என அழைத்துக் கொள்கின்றனர். ஏதோ அவர்கள் சொந்த நிதியில் இருந்து பள்ளிகளை நடத்துவதுபோல் ஒரு தோற்றத்தை உருவாக்க முனைகிறார்கள். ஆனால் பள்ளியின் செலவுகள் அத்தனையையும், பல பெயர்களில் கட்டணமாக **பெற்றோர்களிடம் இருந்து வசூலித்து விடுகிறார்கள்.** இவ்வாறு பள்ளியை தாங்கிப் பிடிக்கும் பெற்றோர்களை அவர்கள் கொஞ்சமும் **மதிப்பதில்லை.**
தனியார் பள்ளிகளுக்கான சட்டம், விதிமுறைகள் இருந்தபோதிலும், அவற்றை பெரும்பாலான பள்ளிகள் **கடைப்பிடிப்பதில்லை.** சில சிறிய பள்ளிகள் மட்டுமே கடைப்பிடிக்கின்றன. சேவை அடிப்படையில் பள்ளிகளை நடத்துவோம் என, கல்வி அறக்கட்டளை பெயரில் அங்கீகாரம் பெற்றுவிட்டு, நாங்கள் **இலாபத்திற்காகத்தான்** பள்ளிகளை நடத்துகிறோம் என **பகிரங்கமாகவே** கூறி வருகின்றனர். தனியார் பள்ளிகளில், மாணவர் சேர்க்கை, கல்விக்கட்டணம் போன்ற பெரும்பாலான செயல்களில் **வெளிப்படைத்தன்மை** என்பதே கிடையாது. சுருக்கமாக சொல்வதெனில், தனியார் பள்ளிகள், தனியாக ஒரு ராஜ்ஜியம் நடத்திக்கொண்டு இருக்கின்றனர்.

### தனியார் பள்ளிகளின் வளர்ச்சி:

இலவசக்கல்வி, அரசுப்பள்ளிகளில் வழங்கப்பட்டு வந்த அந்தக் காலத்தில், மேட்டுக்குடி மக்களுக்காக, விரல்விட்டு எண்ணக்கூடிய வகையில் சில மெட்ரிகுலேஷன் **பள்ளிகள்** செயல்பட்டு வந்தன. அவை அப்போது, சென்னை மற்றும் மதுரை பல்கலைக்கழகங்களுடன் இணைந்து இருந்தன. ஒரு கட்டத்தில், மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் கட்டணம் வசூலிப்பதாலும், ஆங்கிலத்தை பயிற்றுமொழியாக

**பள்ளிகளின் எண்ணிக்கை:**

| 2010 (கட்டண குழு அறிக்கை) | | 2013 (நிதி அறிக்கை) | | |
|---|---|---|---|---|
| தனியார் பள்ளிகள் | | தனியார் பள்ளிகள் | அரசு/ உதவி பள்ளிகள் | மொத்தம் பள்ளிகள் |
| துவக்கப்பள்ளி | 5700 | 11349 | 23522 | 34871 |
| நடுநிலைப்பள்ளி | 178 | 2318 | 7651 | 9969 |
| மேல்நிலைப்பள்ளி | 2183 | 2071 | 3096 | 5167 |
| உயர்நிலைப்பள்ளி | 2352 | 3005 | 2595 | 5600 |
| **மொத்தம்** | **10413** | **18743** | **36864** | **55607** |

**குறிப்பு:**

1. தற்போது மொத்த பள்ளிகளில் தனியார் பள்ளிகள் = 34%
2. தனியார் பள்ளிகள் மொத்தம் 2010–2013 இடையிலான வளர்ச்சி = 55%
3. துவக்கப்பள்ளிகள் மட்டும் வளர்ச்சி = 50%
4. உயர்நிலைப் பள்ளிகளில் தனியார் பள்ளிகளில் அதிகம் எண்ணிக்கை = **653**

| **மாணவர்களின் சேர்க்கை சதவீதம் (2013 நிதி அறிக்கை):** | | | |
|---|---|---|---|
| **துவக்கப்பள்ளிகள்** | | | |
| வருடம் | அரசுப்பள்ளி | அரசு உதவிப் பள்ளி | தனியார் பள்ளி |
| 2008–09 | 43.67 | 21.83 | 34.5 |
| 2012–13 | 36.58 | 17.99 | 45.4 |
| **நடுநிலைப் பள்ளிகள்** | | | |
| 2008–09 | 50.46 | 29.03 | 20.52 |
| 2012–13 | 45.03 | 26.45 | 28.50 |

### அசர் 2012 அறிக்கை – மாணவர்கள் படிப்பது:

1. அரசு பள்ளிகளில் 70% தனியார் பள்ளிகளில் 29%
2. தனியார் பள்ளிகளில் 2007ல் 15.5% 2012ல் 29%

முழுவதும் **புற்றீசல்போல்** தனியார் பள்ளிகள் தோற்றுவிக்கப்பட்டன. தற்போது அவைகள் அரசுப்பள்ளிகளை மூடவைக்கும் அளவிற்கு வேகமாக வளர்ந்து வருகின்றன.

### கட்டுப்பாடற்ற சி.பி.எஸ்.சி. பள்ளிகள்:

மெட்ரிகுலேஷன் பள்ளிகளிலும் பொதுப் பாடத்திட்டம் (சமச்சீர்) நடத்தப்படுவதால், பெற்றோர்களிடம் இருந்து **அதிகக்கட்டணம் வசூலிக்க முடியாது** என்பதால், மெட்ரிகுலேஷன் பள்ளிகளெல்லாம் சி.பி.எஸ்.சி. பள்ளிகளாக மாற்றப்பட்டு வருகிறது. மாவட்ட முதன்மை கல்வி அலுவலரின் தடையில்லா சான்றிதழ் பெற்றே இப்பள்ளிகள் துவக்கப்படுகிறது. தற்போது மத்திய அரசு, சி.பி.எஸ்.சி. பள்ளிகள் துவங்க, மாநில அரசிடம் **தடையில்லா சான்று பெற வேண்டாம்** எனத் திருத்தத்தைக் கொண்டு வந்துள்ளது. இதனால், அநேகமாக பெரும்பாலான மெட்ரிகுலேஷன் பள்ளிகள் **சி.பி.எஸ்.சி. பள்ளிகளாக மாறும் அபாயம்** எழுந்துள்ளது. இதனால் சமச்சீர் பாடம் மாணவர்களுக்கு கிடைக்காமல் போவதோடு, பெற்றோர்கள் அதிகக் கல்விக் கட்டணம் கட்ட வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

### தனியார் பள்ளிகளும் கல்வி உரிமைச் சட்ட மீறல்களும்:

நான் ஏற்கனவே குறிப்பிட்டு இருந்ததுபோல், தனியார் பள்ளிகள் **எந்த சட்ட விதிமுறைகளையும்** கடைப்பிடிப்பதில்லை. அதேபோல் குழந்தைகள் இலவச கட்டாயக்கல்வி உரிமைச் சட்டம் 2009 மற்றும் விதிகள் 2011யும் கடைப்பிடிப்பதில்லை. இச்சட்டத்தின் விதிமுறைகள் எவ்வாறு மீறப்பட்டு வருகின்றன என்பதை சுருக்கமாகக் கீழே பார்ப்போம்.

### பிரிவு12(1(சி)): 25 விழுக்காடு குழந்தைகளுக்கு இலவச கட்டாயக்கல்வி வழங்க வேண்டும்:

தனியார் பள்ளிகள் கடந்த கல்வி ஆண்டில், இந்த விதிமுறையை கண்டுக்கொள்ளவேயில்லை. **பெற்றோர்கள் மத்தியிலும்** இது குறித்து சரியான **விழிப்புணர்வு இல்லை.** கல்வித்துறையும் இதை செயல்படுத்த எந்த **நடவடிக்கையும் எடுக்கவில்லை.** ஆனால் இந்த வருடம் கல்வியாளர்களும், அரசு சாரா அமைப்புகளும், பெற்றோர்களும் வலியுறுத்தியதால், அரசு இதுகுறித்து விரிவான அரசாணை வழங்கி, பின்னர் இறுதிநாளை நீடித்து, **முதன்மை கல்வி அலுவலர்கள் மூலமாக** விண்ணப்பம் பெறும் முறையை அமல்படுத்தியதால், இதில் சிறிய முன்னேற்றம் ஏற்பட்டது. தனியார் பள்ளிகள் தொடக்கமுதலே **இதை எதிர்த்து வந்தார்கள்.** நலிந்த மற்றும் ஒடுக்கப்பட்ட பிரிவைச் சேர்ந்த குழந்தைகளை அவர்கள் பள்ளிகளில் சேர்த்துக்கொள்ள விரும்பவில்லை. இந்த வருடம் 25 விழுக்காடு ஒதுக்கீட்டின்கீழ் உள்ள மொத்த இடங்களான **59,292ல் 18,946 இடங்கள்** மட்டுமே நிரப்பப்பட்டுள்ளன. இது வெறும் 32 சதவீதம் மட்டுமே. **68 சதவீத இடங்கள்** நிரப்பப்படவில்லை. தனியார் பள்ளிகள் இதில் உண்மையான அக்கறை காட்டியிருந்தால், நூறு சதவீத இடங்களும் நிரப்பப்பட்டிருக்கும்.

### பிரிவு 13(1): பள்ளி சேர்க்கைக்கு கல்வி கட்டணம், தேர்வு முறை கூடாது:

அரசு விதிப்படி ஒவ்வொரு கல்வி ஆண்டிலும் மே மாதம்தான் மாணவர் சேர்க்கையை நடத்த வேண்டும். ஆனால் தனியார் பள்ளிகள் நவம்பர்–ஜனவர் மாதங்களுக்குள் சேர்க்கையை முடித்துக் கொள்கிறார்கள். மாணவர் சேர்க்கையின்போது, விண்ணப்பத்தை விற்பதில் இருந்து **வியாபாரம் துவங்கிவிடும்.** ரூ.100 முதல் ரூ.5000 வரை விண்ணப்பங்கள் விற்கப்படுகிறது. புதிய மாணவர் சேர்க்கைக்கு தனியார் பள்ளிக்கூடங்கள் அனைத்திலுமே வெளிப்படையாக **நன்கொடைகள் வசூலிக்கப்படுகிறது.** ரூ.10,000/– முதல் ரூ.1,00,000/– வரையிலும் வசூலிக்கப்படுவதாக கூறப்படுகிறது. நன்கொடை வசூலிப்பதற்கு ஏஜென்டுகள் வேறு உண்டு. அவர்களுக்கு தனியாக தொகை கொடுக்க வேண்டும். இந்த தொகைகளுக்கு ரசீது வழங்கப்படுவதில்லை. **சேர்க்கையின்போது கட்டணம் வசூலித்தால் வசூலிக்கப்பட்ட கட்டணத்தைப்போல் 10 மடங்கு** அபராதம் தண்டனையாக விதிக்கப்படும் எனச் சட்டதில் கூறப்பட்டுள்ளது. ஆனால் தனியார் பள்ளிகள் தைரியமாக, அப்பட்டமாக இதை மீறிக்கொண்டுதான் உள்ளார்கள். மாணவர் சேர்க்கையின்போது குழந்தையை எந்தவொரு முன்தேர்வு நடைமுறைக்கும் உட்படுத்தக்கூடாது. ஆனால் தனியார் பள்ளிகளில் **வெகு இரகசியமாக** விண்ணப்பம் வழங்குவதும், இரகசியமாகத் தேர்வு நடத்துவதும் நடந்து கொண்டுதான் இருக்கிறது. வெளிப்படையாக தேர்வு நடத்துவது குறைந்துள்ளது. இந்த சட்ட விதியை முதல் தடவை **மீறினால் ரூ.25,000/–** அபராதமும், மீண்டும் மீறும்போது ரூ.50,000/– அபராதமும் விதிக்கப்படும் என்கிறது சட்ட விதி. ஆனால், தனியார் பள்ளிகள் இதைக்கண்டு பயப்படுவதில்லை.

### பிரிவு14(2): வயது சான்று இல்லாத காரணத்திற்காக எந்தவொரு குழந்தைக்கும் சேர்க்கை அனுமதி மறுக்கப்படக்கூடாது:

தனியார் பள்ளிகளில் எந்தவொரு குழந்தையும் பிறப்பு சான்றிதழ் இல்லாமல் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை.

இதுகுறித்து பெற்றோர்கள் தனியார் பள்ளிகள்மீது புகார் தெரிவிப்பதும் இல்லை.

**பிரிவு 15: பள்ளிகளில் சேர்க்க மறுக்கக்கூடாது:**

தனியார் பள்ளிகளில், விருப்பப்படுகிறவர்கள் அனைவரையும், பள்ளியில் **சேர்த்துக் கொள்வதில்லை.** சேர்க்கை என்பதே மிக இரகசியமாக நடக்கும். வகுப்பில் எத்தனை இடங்கள் காலியாக உள்ளது என்பதோ எத்தனை விண்ணப்பங்கள் வழங்கப்பட்டது என்பதோ, எத்தனை விண்ணப்பங்கள் பூர்த்தி செய்து பெறப்பட்டது என்பதோ, யார் யாருக்கு சேர்க்கை வழங்கப்பட்டது என்பதோ மிகவும் இரகசியமாக இருக்கும். **பெரும்பாலும் அதிக நன்கொடை கொடுப்பவர்களுக்கு** 'சீட்' கிடைக்கும். கல்வி ஆண்டின் தொடக்கம் முடிந்த பின்போ அல்லது இடையிலோ குழந்தைகளை சேர்ப்பது என்பது கிடையாது.

**பிரிவு 16: ஒரே வகுப்பில் இருக்க வைத்தல் மற்றும் வெளியேற்றுவதற்கு தடை:**

தனியார் பள்ளிகளில் ஒரே வகுப்பில் இருக்க வைத்தல் என்பது கிடையாது. சரியாக படிக்காத குழந்தைகளையும், குறும்பு செய்யும் குழந்தைகளையும், வற்புறுத்தி கட்டாயமாக **மாற்றுச் சான்றிதழ்களைக் கொடுத்து** வேறு பள்ளிக்கு அனுப்பிவைத்து விடுவார்கள். அதேபோல் **அரசு நிர்ணயித்த கல்விக்கட்டணத்தை மட்டும் செலுத்தும்** பெற்றோர்களின் குழந்தைகளுக்கு கட்டாயமாக மாற்றுச்சான்றிதழ்களை கொடுத்து வெளியேற்றி விடுவார்கள். தற்போது மாநிலம் முழுவதும் பரவலாக இப்படிப்பட்ட குழந்தைகளுக்கு மாற்று சான்றிதழ்களை **அஞ்சலில் அனுப்பி வைக்கும்** பழக்கமும் ஏற்பட்டுள்ளது.

**பிரிவு 17(1): குழந்தைக்கு உடல்ரீதியான தண்டனை அல்லது மனரீதியான துன்புறுத்தல் ஏற்படுத்த தடை:**

தனியார் பள்ளிகளில் குழந்தைகளை **மதிப்பெண் எடுக்க வைப்பது மட்டுமே குறிக்கோள்.** இதை அடைவதற்கு உடல்ரீதியான தண்டனைகளும் மனரீதியான துன்புறுத்தல்களும் மேற்கொள்ளப்படும். தனியாக நிற்க வைத்தல், முட்டிக்கால் போட வைத்தல், வகுப்பிற்கு வெளியே நிற்க வைத்தல், விளையாட்டு திடலில் ஓட வைத்தல், அனைவர் மத்தியில் அவமானப்படுத்துதல், பெற்றோர்களை வரவழைத்தல் என பட்டியல் நீளும்.

அரசுக் கட்டணத்தை மட்டும் வசூலிக்க வேண்டும் எனச் சட்டம் வந்தபின்பு, **அரசுக் கட்டணத்தை மட்டும் செலுத்தும் பெற்றோர்களின் குழந்தைகளை** உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் துன்புறுத்துவது என்பது மிக அதிகரித்துவிட்டது. இதற்கு ஒரு வரைமுறை கிடையாது. **ஒவ்வொரு பள்ளியும் விதவிதமான முறைகளை கடைபிடிக்கும்.** தனிமைப்படுத்துவது, இருட்டறையில் அடைத்து வைப்பது, நோட்டுப் புத்தகம், புத்தகங்கள் கொடுக்காமல் இருப்பது, ஹால் டிக்கட் கொடுப்பதில்லை. தேர்வு முடிவு வெளியிடுவது இல்லை. தேர்வு எழுத விடுவதில்லை. தனி வகுப்பு நடத்துதல், அனைவர் மத்தியிலும் அவமானப்படுத்துவது, அடிப்பது மாற்றுச்சான்று கொடுத்து அனுப்புவது, மாற்றுச்சான்று அஞ்சலில் அனுப்பி வைப்பது போன்ற எத்தனையோ முறைகள்.

பெற்றோர்கள் இது குறித்து புகார் தெரிவிக்க, கல்வித்துறை, காவல்துறை, ஆட்சியர் அலுவலகம், மனித உரிமை அமைப்பு, நீதிமன்றம் என மாறி மாறி **அலைய வேண்டியுள்ளது.** இவ்வளவுக்கு பின்னரும் தவறு செய்த பள்ளி நிர்வாகிகள் **எவரும் தண்டிக்கப்பட்டது இல்லை.**

**பிரிவு 18 : அங்கீகாரச் சான்றிதழ் பெறாமல் எந்தவொரு பள்ளியும் நிறுவப்படக்கூடாது:**

மாநிலம் முழுவதும், தனியார் மழலையர் மற்றும் துவக்கப்பள்ளிகள் குடிசைத் தொழில்போல் எந்தவித வரைமுறையும் இன்றி நடத்தப்பட்டு வருகிறது. மழலையர் பள்ளிகளும் அங்கீகாரம் பெற்றுத்தான் நடத்த வேண்டும் என 2008ல் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. சமீபத்தில்அரசு அங்கீகாரம் பெறாத சுமார் 700 பள்ளிகளுக்குத் தடைவிதித்து அரசு ஆணை பிறப்பித்தது. இருப்பினும் நிறைய பள்ளிகள் இன்னமும் அங்கீகாரம் இல்லாமல் நடந்துகொண்டுதான் உள்ளன.

அங்கீகாரம் இல்லாமல் நடத்தப்படுகின்ற பள்ளிக்கு **ரூபாய் ஒரு இலட்சம் வரை** தண்டனைத் தொகை விதிக்கவும், தவறு தொடர்ந்தால் நாளொன்றுக்கு **ரூபாய் பத்தாயிரம் வரை** தண்டனைத்தொகை விதிக்கவும் கல்வி உரிமைச் சட்டத்தில் வழிவகைச் செய்யப்பட்டிருந்தும் யாருக்கும் **இதுவரை தண்டனைத் தொகை விதிக்கப்படவில்லை.**

**பிரிவு 19(1) : அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விதிகள் மற்றும் தரங்களை நிறைவு செய்யா எப்பள்ளியும் நிறுவப்பெறுதலுக்கு உரிமை இல்லை:**

தனியார் பள்ளிகள் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அத்தனை விதிகளையும் தரங்களையும் நிச்சயம் கடைப்பிடிப்பதில்லை. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவைகள் அத்தனையும் தனியார்

பள்ளிகளில் கடைப்பிடிக்கப்படுகின்றனவா என்பதைக் கல்வித்துறை ஆய்வு செய்து கண்டுபிடிக்க வேண்டும். இந்த விதிமுறைகள் புதிது என்பதால், பெற்றோர்களுக்கும் இது குறித்துப் போதிய விழிப்புணர்வு ஏற்படவில்லை. ஆகவே இது குறித்து அதிக புகார்கள் வரவில்லை.

**பிரிவு 25 (1): மாணவர்–ஆசிரியர் விகிதம்:**

தனியார் பள்ளிகளில், அட்டவணையில் வரையறுக்கப்பட்டுள்ளபடி, மாணவர்–ஆசிரியர் விகிதம் நிச்சயம் கடைபிடிக்கப்படுவதில்லை. வகுப்பறைகளில் கூடுதல் மாணவர் சேர்க்கை என்பது சாதாரணமானது.

**பிரிவு 28 : ஆசிரியர்கள் தனிப்பட்ட பயிற்சி அளிக்கத்தடை:**

தனியார் பள்ளிகள் தனி பயிற்சி (டியூஷன்) இல்லாமல் பள்ளிகளை நடத்த முடியாது. அதிக மதிப்பெண் பெறுவது என்பதே அவர்களது குறிக்கோள். அதனால் இதை அவர்கள் கைவிடுவது என்பது முடியாத காரியம்.

**பிரிவு 29: பாடத்திட்டம் மற்றும் மதிப்பீட்டு நடைமுறையை அமல்படுத்துதல்:**

தமிழக அரசால் கொண்டு வரப்பட்டுள்ள முப்பருவ, தொடர், முழுமையான மதிப்பீட்டுமுறை, தனியார் பள்ளிகள் தற்போது அமல்படுத்தப்பட்டு வருகிறது. இருப்பினும் தேர்வு முறையும் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

**தனியார் பள்ளிகளில் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்த செய்ய வேண்டியவைகள்:**

அ) கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தை அமல்படுத்தும் பொறுப்பில் இருக்கும் இணைப்பு அலுவலரான (நோடல் ஆபிஸர்) மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநர், இதை ஒரு முக்கியப் பணியாக கருதி, இதைச் செயல்படுத்தத் **தேவையான தீவிர நடவடிக்கைளை மேற்கொள்ள வேண்டும்.**

ஆ) கல்வித்துறை அலுவலர்கள் தனியார் பள்ளிகள் மீது, **கரிசனம் காட்டாமல்** நடுநிலையாக இருந்து புகார்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இ) கல்வித்துறை, போதிய எண்ணிக்கை அளவில் கல்வி அலுவலர்களை நியமித்துப் பள்ளிகளை அடிக்கடி ஆய்வு செய்ய வேண்டும்.

ஈ) கல்வியாளர்கள், பொதுநல அமைப்புகள், எதற்கும் கட்டுப்படாத தனியார் பள்ளிகளை **சரிப்படுத்த அதிரடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.**

உ) மாவட்டம்தோறும், மாதந்தோறும், பொதுநல அமைப்பினர், கல்வித்துறை அலுவலர்கள், பெற்றோர் அமைப்பினர் அடங்கிய குழு, கல்வி உரிமைச் சட்டம் அமல்படுத்துவதை ஆய்வு செய்து அறிக்கை வெளியிட வேண்டும்.

ஊ) பொதுநல அமைப்பினர் மாவட்டம்தோறும், மாதந்தோறும், **பத்திரிகை செய்தியாளர்கள் கூட்டத்தை நடத்தி**, நிலவரத்தை வெளிப்படுத்த வேண்டும்.

எ) ஆறு மாதத்திற்கு ஒரு தடவை, பொதுநல அமைப்பினரும், பெற்றோர் அமைப்பினரும் இணைந்து, **கல்வித்துறை உயர் அலுவலர்களை சந்தித்து** இது குறித்து புகார் தெரிவிக்க வேண்டும்.

**முடிவுரை:**

குழந்தைகள் இலவச கட்டாயக்கல்வி உரிமைச் சட்டம் கலந்தாய்வுக் கூட்டத்தில், தனியார் பள்ளிகளில் இச்சட்டம் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதைப் பேசுவதற்கு வாய்ப்பளித்ததின் மூலம், **தனியார் பள்ளிகளின் ஒட்டுமொத்த செயல்பாடுகள் எவ்வாறு உள்ளன என்பதை வெளிப்படுத்த** ஒரு வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்த மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பிற்கும் கல்வி உரிமை கூட்டமைப்பிற்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இத்தருணத்தில் இந்த அவையில் உள்ள நாம் அனைவரும், நமது இலக்கான, அரசு செலவிலும், அரசு முழு பொறுப்பிலும் செயல்படும் பொதுப்பள்ளி மூலமான கல்வியைப் பெற தொடர்ந்து பாடுபடுவோம் எனக்கூறி விடைபெறுகிறேன்.

நன்றி! வணக்கம்!

**திரு.செ. அருமைநாதன்**
மாநில தலைவர்
தமிழ்நாடு மாணவர்–பெற்றோர் நலச்சங்கம்
4/6, 2வது தெரு, சஞ்சய்காந்தி நகர், விருகம்பாக்கம்,
சென்னை–600 092 தொ.பே.: 94441 40015

## 6000 மாதிரிப் பள்ளிகள் அமைப்பது தொடர்பாக அனைத்து மாநில அரசுகளுக்கும் யூனியன் பிரதேச அரசுகளுக்கும் மத்திய அரசு அனுப்பியுள்ள திட்ட முன்வரைவின் முக்கிய அம்சங்கள் இவற்றில் 2500 பள்ளிகள் அரசு – தனியார் கூட்டு (பிபிபி) அடிப்படையிலானவையாகும்

# ஒரு சுருக்கமான அலசல்

- Dr. V.P. நிரஞ்சனாராத்யா

**பின்னணி:**

1.1. நாட்டின் பிரதமர் 2007ல் நிகழ்த்திய சுதந்திர தின உரை அடிப்படையில், இந்த திட்ட ஆலோசனைகள் முன்வைக்கப்படுகின்றன. ஒவ்வொரு வட்டத்திலுமாக 6,000 புதிய உயர்ந்த தரமுள்ள பள்ளிகள் அமைக்கப்படும் என்று பிரதமர் அப்போது அறிவித்தார். இது, காலம் சென்ற பிரதமர் ராஜீவ் காந்தி 1986ம் ஆண்டு கொள்கையின் ஒரு பகுதியாக ஒவ்வொரு மாவட்டத்திலும் ''சிறப்பு மையங்கள்'' ஏற்படுத்தப்படும் என்று அறிவித்ததைப் போன்றதுதான்.

1.2. பிரதமரின் அறிவிப்பை செயல்படுத்துவதற்கான, மத்திய திட்டமொன்று உருவாக்கப்பட்டு 2008 பிப்ரவரி 5 அன்று அனைத்து மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களுக்கு இந்திய அரசின் மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சகத்தின் பள்ளிக் கல்வி மற்றும் எழுத்தறிவுத் துறை இணைச் செயலரால் அனுப்பப்படுகிறது.

1.3. இத்திட்டத்தின்படி 11வது ஐந்தாண்டு திட்டத்தின்கீழ் மாதிரிப் பள்ளிகள் அமைக்கப்படும். இத்திட்டத்தில் 4 வகையான பள்ளிகள் உள்ளன.

- கே.வி.எஸ். (கேந்திர வித்யாலயா சங்காதன்) அமைப்பால் நடத்தப்படுகிற 1 முதல் 12ம் வகுப்பு வரை உள்ள 500 முறையான பள்ளிகள்
- பதிவு செய்யப்பட்ட அமைப்புகள் மூலமாக மாநில அரசுகளால் நடத்தப்படுகிற 6 முதல் 12ம் வகுப்பு வரை உள்ள 2500 கே.வி. மாதிரிப் பள்ளிகள்
- ஜே.என்.எஸ். (ஜவஹர் நவோதயா சங்காதன்) அமைப்பால் நடத்தப்படுகிற 500 உறைவிடப் பள்ளிகள்
- அரசு தனியார் கூட்டு (பி.பி.பி.) அடிப்படையில் மத்திய பள்ளிகள் முறைப்படி 2500 பள்ளிகள்

பி.பி.பி. அடிப்படையில் 2500 பள்ளிகளுக்கான வழிகாட்டல்கள் (ஆலோசனைத் திட்டத்திலிருந்து எடுக்கப்பட்டது)

1.1 தனியார் நிறுவனங்களிடமிருந்து விருப்பக் கோரிக்கைகளை மாநில அரசு வரவேற்கும். பி.பி.பி. வடிவில் 2500 பள்ளிகள் அமைப்பதற்கான தனியார் கூட்டாளிகளை தேர்வு செய்யும். கல்வியை தனியார்மயமாக்குவதில் எடுத்து வைக்கப்படும் முதலடியாக, கார்ப்பரேட் நிறுவனங்களும் பெரும் வர்த்தக நிறுவனங்களும் கவுரவமான முறையில் கல்வி அமைப்பில் நுழைய இது ஒரு பெரிய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கிறது. (அழுத்தம் நம்முடையது).

பெங்களூருவில் உள்ள இந்திய தேசிய சட்டக் கல்வி பல்கலைக் கழகத்தின் குழந்தை மற்றும் சட்ட மையத்தைச் சார்ந்த டாக்டர் நிரஞ்சனாராத்யா தயாரித்துள்ள விவாதக்குறிப்பு

1.2. தனியார் கூட்டாளிகள் கார்ப்பரேட் நிறுவனங்களாக கருணை அறக்கட்டளைகளாக, கல்வி நிறுவனங்கள் / அறக்கட்டளை அமைப்புகளாக மற்றும் மரியாதைக்குரிய தனியார் நிறுவனங்களாக இருக்கலாம். காலப்போக்கில் இது யாருடைய நலன்களுக்கு சேவை செய்யும் என்பதை இந்தப் பட்டியல் தெளிவுபடுத்துகிறது. (அழுத்தம் நம்முடையது)

1.3 கல்வி ரீதியாக பின்தங்கிய வட்டாரங்கள் அல்லாத வட்டார தலைநகரங்களில் இந்தப் பள்ளிகள் ஏற்படுத்தப்படும். இந்தப் பள்ளிகள் பட்டியல் சாதிகள், பட்டியல் பழங்குடியினர், சிறுபான்மையினர், சிறு சமூகக் குழுக்களாக உள்ள இதர பிற்படுத்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த, கல்வி மறுக்கப்பட்ட ஏழைக் குழந்தைகளுக்காக இந்தப் பள்ளிகள் ஏற்படுத்தப்படவில்லை என்பது தெளிவாகிறது. இந்த முன்னேறிய வட்டாரங்களில் ஏற்கெனவே தேவையான உள்கட்டுமானங்களும் இதர வசதிகளும் இருப்பதால் தனியார் நிறுவனங்கள் உள்ளே நுழைந்து லாபம் ஈட்டுவதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பாக அமைகிறது. (அழுத்தம் நம்முடையது)

1.4 பள்ளிக்கான நிலத்தை தனியார் கூட்டாளிகள் ஏற்பாடு செய்வார்கள். அதற்கு வசதி செய்வது குறித்து மாநில அரசு பரிசீலிக்கலாம். இது முக்கியமானதாகும். ஏனென்றால், நிலத்தைப் பெறுவதற்கு வசதி செய்வது குறித்து மாநில அரசு பரிசீலிக்கலாம் என்ற ஒரு வாக்கியம், அரசுக்குச் சொந்தமான நல்லதொரு நிலத்தை தேடிப் பிடித்து தனியாரிடம் ஒப்படைப்பதற்கும், அதில் தங்களுடைய பங்கை பெற்றுக்கொள்வதற்குமான முழு அதிகாரத்தை இது அதிகாரவர்க்கத்திற்கு அளிக்கிறது. வழிகாட்டலில் உள்ள இந்த எளிய வாக்கியம் சேவையின் பெயரால் பொது நிலத்தை அபகரிப்பதற்கே உதவும். (அழுத்தம் நம்முடையது)

1.5 கேந்திரிய வித்யாலயா நடைமுறைகளை இந்தப் பள்ளிகள் பின்பற்றும். தனியார் அமைப்புகள் தங்களுடைய தரம் தேசிய தரத்திற்கு இணையாக உள்ளது என்று கூறிக்கொள்ள இது ஒரு கூடுதல் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும். தங்களுடைய லாபத்தை பெருக்கிக்கொள்வதற்காக சந்தைப்படுத்துவதற்கு இது நிச்சயமாக உதவும். (அழுத்தம் நம்முடையது)

1.6 இந்தப் பள்ளிகளில் 6 முதல் 12ம் வகுப்பு வரை இருக்கும். ஒவ்வொரு வகுப்பிலும் இரண்டு பிரிவுகள் இருக்கும். 6ம் வகுப்பிலிருந்து தொடங்குவதால், அரசாங்க தொடக்கப் பள்ளிகளில் ஆசிரியர்கள் கடுமையாக வேர்வை சிந்தி உருவாக்குகிற சிறந்த தகுதி வாய்ந்த குழந்தைகளை தனியார் நிறுவனங்கள் இழுத்துக்கொள்ள இது வாய்ப்பளிக்கிறது. இதன் ஆதாயத்தை தனியார் நிறுவனங்கள் அனுபவிக்கும். (அழுத்தம் நம்முடையது)

1.7 இந்தப் பள்ளிகள் தனியார் நிறுவனங்களால் கட்டப்பட்டு, நிர்வகிக்கப்பட்டு, நடத்தப்படும். இப்படியொரு வழிகாட்டல் இருக்குமானால், இதில் தனியார்மயமாக்கல் எதுவும் இல்லை, அரசு – தனியார் கூட்டுதான் இருக்கிறது என்று நம்மால் எப்படிச் சொல்ல முடியும். இது தனியார்மயமாக்கலுக்கான தெளிவான அறிகுறிதான். (அழுத்தம் நம்முடையது)

1.8 தொடக்கத்தில் முதலீட்டுச் செலவு அனைத்தையும் தனியார் கூட்டாளிகள்தான் ஏற்க வேண்டும். கட்டுமானச் செலவின் ஒரு பகுதியை மத்திய அரசு, பத்தாண்டு காலத்தில் வட்டியுடன் கொடுக்கும். மாநில அரசுகளும், முதலீட்டுச் செலவின் ஒரு பகுதியை ஏற்கும். அது, மாநில அரசு எடுக்கிற முடிவுபடி வழங்கப்படும். இது தனியார்மயமாக்கல் மட்டுமல்ல. அரசு நிதி உதவியுடன் நடத்தப்படுகிற தனியார்மயமாக்கல்! பிரமாதம்! கட்டுமான செலவை வட்டியுடன் திருப்பிக் கொடுக்கிறது அரசு, தனியார் நிறுவனங்களிடம் என்ன ஒரு விஸ்வாசம்! (அழுத்தம் நம்முடையது)

1.9 மூன்றில் இரண்டு பங்கு இடங்கள் மாநில அரசின் ஒதுக்கீட்டிற்கு ஒதுக்கப்படும். மூன்றில் ஒரு பங்கு இடங்கள் நிர்வாக ஒதுக்கீடாக இருக்கும். இது தனியார்மயமாக்கலுக்கான பணச்சீட்டு (வவுச்சர்) திட்டம் அல்லது கல்வி உதவி (ஸ்காலர்ஷிப்) திட்டம் போன்றதுதான். (அழுத்தம் நம்முடையது)

1.10 அரசு ஒதுக்கீட்டிற்கான இடங்களில் தற்போதைய இடஒதுக்கீடு விதிகள் பொருந்தும். அருகாமைப் பகுதிகளில் உள்ள எல்லா குழந்தைகளுக்கும் தரமான கல்வியைப் பெறுவதற்கு சமமான வாய்ப்பை அளிக்கக்கூடிய, அவர்களையும் உட்படுத்துகிற நடைமுறை அல்ல இது. (அழுத்தம் நம்முடையது)

1.11 அரசு ஒதுக்கீட்டின்படியான மாணவர்களுக்கு அரசாங்க நடுநிலை அல்லது மேல்நிலைப் பள்ளிகளில் ஒரு மாணவருக்கு ஆகும் சராசரியான கட்டணச் செலவு அடிப்படையில் ஏற்படும் செலவை மாநில அரசு ஈடுகட்டலாம். மீதமுள்ள நடைமுறைச் செலவை தனியார் கூட்டாளிகள் ஏற்க வேண்டும். இதுதான் வவுச்சர் ஏற்பாடு என்பது. நடுநிலைப் பள்ளிகளிலும் மேல்நிலைப் பள்ளிகளிலும் ஒரு மாணவருக்கான கல்விச் செலவு அதிகமாகும். இது தனியார் கூட்டாளிகளுக்கு ஆதாயமாக முடியும். (அழுத்தம் நம்முடையது)

1.12 சம்பந்தப்பட்ட கல்வி வாரிய சட்ட விதிகள் மற்றும் மாநில அரசின் நடைமுறைகளுக்கு ஏற்ப ஆசிரியர் நியமனம், பள்ளியை நடத்துவது போன்ற விஷயங்களில் முடிவெடுப்பதற்கான முழுச் சுதந்திரம் தனியார் கூட்டாளிக்கு உண்டு. உண்மையில் இது பி.பி.பி. என்ற பெயரில் அரசாங்க நிதியில் நடத்தப்படும் தனியார் பள்ளியே ஆகும். (அழுத்தம் நம்முடையது)

1.13 பள்ளிச் சொத்துகள் மாநில அரசு மற்றும் தனியார் கூட்டாளியின் கூட்டுப் பெயரில் 30 ஆண்டுகாலத்துக்கு இருக்கும். வெற்றிகரமாக அந்தக் காலகட்டம் முடிந்தபிறகு, தொடர்ந்து அது பள்ளியாக நடத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனை

எதுவுமின்றி அந்தப் பள்ளி தனியாரிடம் ஒப்படைக்கப்படும். கல்வியை தனியார்மயமாக்கி, பொதுப்பள்ளி முறையை ஒழித்துக்கட்டுவதற்காக கல்லறைப் பெட்டியில் கடைசி ஆணி அடிக்கிற இந்த அருமையான, முன்யோசனை மிக்க, சிறப்பாக உருவாக்கப்பட்டுள்ள கொள்கைக்காக நாட்டு மக்கள் மத்திய அரசுக்கு கடமைப்பட்டிருக்கிறார்கள்! (அழுத்தம் நம்முடையது)

ஏழை மக்களுக்கும் குடிமைச் சமூக அமைப்புகளுக்கும் தெரிவிக்கப்படும் செய்தி என்ன?

1.1 பட்டியல் சாதிகள், பட்டியல் பழங்குடியினர், சிறுபான்மையினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட சமூகங்களிலிருந்து வருகிற கோடிக்கணக்கான குழந்தைகளுக்கு, இந்திய அரசமைப்பு சாசனத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளபடி, 1993ல் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பில் மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளபடி, கல்வி ஒரு அடிப்படை உரிமையாக்கப்படுகிறது என்று 2002ல் செய்யப்பட்ட 86வது சட்டத் திருத்தத்தில் சொல்லப்பட்டுள்ளபடி சமத்துவமான, தரமான கல்வி கிடைப்பதை உறுதிப்படுத்திட நாடு முழுவதும் உள்ள ஒவ்வொரு அரசுப் பள்ளியையும் ஒரு தரமான சிறந்த கல்வி மையமாக மாற்றுகிற அரசியல் உறுதி மத்திய அரசுக்கு இல்லை என்பதை இந்த ஆலோசனைத் திட்டம் தெளிவாகக் காட்டுகிறது.

1.2 அடித்தட்டு மக்களின், சுரண்டப்படும் சமூகங்களின் நலன்களை மேம்படுத்துவதற்கு மாறாக, ஆளும் வர்க்கங்களின் நலன்களை முன்னெடுத்துச் செல்வதற்காக தற்போதைய கல்வி முறையில் உள்ள பாகுபாடுகளை மேலும் தீவிரப்படுத்துவதாக இந்த ஆலோசனைத் திட்டம் அமைந்திருக்கிறது. ஒரு பக்கம் அரசாங்கத்தாலேயே நடத்தப்படுகிற பள்ளிகளுக்கு எதிரான பாகுபாடுகளை அரசாங்கமே கடைப்பிடித்து, அரசமைப்பு சாசனத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை மீறுகிறது. இன்னொரு பக்கம் கல்வியில் தனியார்மயமாக்கலை ஊக்குவிப்பதன் மூலம் அரசு தனது பொறுப்பை தட்டிக்கழிக்கிறது. அரசமைப்பு சாசனத்தை அரசாங்கமே மீறுகிற அப்பட்டமான செயல் இது. இதனை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்க முடியும்.

1.3 அரசுப் பள்ளிகளில் தரமான கல்வியை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான உள்கட்டுமானங்களும் வசதிகளும் இல்லாமல் அரசுப் பள்ளிகளை மேலும் வறுமையில் ஆழ்த்துவதாகவே இந்த ஆலோசனைத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இதனால், மேலும் மேலும் அதிகமான ஏழை பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை தனியார் பள்ளிகளில் சேர்ப்பதற்காக அரசுப் பள்ளிகளிலிருந்து விலக்கிக்கொள்ள நேரிடும். பல்வேறு இணைப்புத் திட்டங்கள் மூலம் பள்ளிகளுக்குத் திரும்பி வந்த லட்சக்கணக்கான குழந்தைகள், தங்களது தரமான கல்விக்கு உரிய போதுமான வசதிகள் செய்து கொடுக்கப்படாததன் மூலம் தங்களுக்கு இழைக்கப்படும் அவமதிப்பை எதிர்த்து அரசுப் பள்ளிகளைவிட்டு வெளியேறக்கூடும். நாடு முழுவதும் பின்னப்பட்டுள்ள அரசுப் பள்ளிகள் வலையமைப்பை புறக்கணிப்பதன் மூலமாகவும், படிப்படியாக ஒழித்துக்கட்டுவதன் மூலமாகவும், தனியார் மயமாக்கலுக்கு ஏற்ற சூழலை உருவாக்குவது என்ற அரசின் திட்டமிட்ட வியூகம்தான் இது.

1.4 மேலும், அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் எதிர்காலம் இதனால் பெரும் அபாயத்திற்கு உள்ளாகிறது. ஆசிரியர்கள் நியமனத்திற்கான புதிய வாய்ப்புகளை இது தட்டிப்பறிப்பது மட்டுமல்லாமல், தனியார்மயமாக்கலை வளர்ப்பதன் மூலம், அரசுப் பள்ளிகளில் தங்களது வேலைகளை இழக்க வேண்டிய கட்டாயத்தையும் ஏற்படுத்துகிறது. இதனால், ஏற்கெனவே, தனியார்மயமாக்கல் காரணமாக தங்களது வாழ்வாதாரத்தை இழந்து கைவிடப்பட்டவர்களாக தெருக்களில் நிற்கிற லட்சக்கணக்கான தொழிலாளர்களோடு இந்த ஆசிரியர்களும் இணைவார்கள்.

1.5 இறுதியாக, சமூக நீதியையும் பள்ளிக் கல்வியில் சமத்துவத்தையும் உறுதிப்படுத்திட, அருகமைப் பள்ளிகள் மூலம் பொதுப் பள்ளி முறையை நோக்கி செல்வதற்காக 1968, 1986 கொள்கை ஆவணங்களிலும், மீண்டும் 1992ல் திருத்தப்பட்ட கொள்கை ஆவணத்திலும் கூறப்பட்டுள்ள கொள்கை உறுதிப்பாடுகளிலிருந்து முற்றிலும் பின்வாங்குவதாக, முழுவதும் நிராகரிப்பதாக இது அமைந்துள்ளது.

**குறிப்பு:**

**பெங்களூருவில் உள்ள இந்திய தேசிய சட்டக் கல்வி பல்கலைக் கழகத்தின் குழந்தை மற்றும் சட்ட மையத்தைச் சார்ந்த மூத்த ஆராய்ச்சியாளர், டாக்டர் நிரஞ்சனாராத்யா தயாரித்துள்ள விவாதக்குறிப்பு**

# சலாம் மும்பை

–அனுபமா கடகம்

*ஆக்ஷன் எய்டு அமைப்பும், டாடா சமூக அறிவியல் நிறுவனமும் இணைந்து வெளியிட்டுள்ள ஒரு ஆய்வறிக்கை, மும்பை தெருக்களில் வாழ்ந்துகொண்டிருக்கிற ஆயிரக்கணக்கான குழந்தைகள் எளிதில் பாதிப்புகளுக்கு உள்ளாகக்கூடியவர்களாக இருப்பதையும் அவர்களது சோகமான வாழ்க்கை நிலைமைகளையும் வெளிச்சத்திற்குக் கொண்டு வருகிறது.*

மும்பை நகரின் தெரு வோரக் குழந்தைகள் பற்றி எடுத்துக்கூறும் 'சலாம் பாம்பே!' என்ற திரைப்படத்தை 1988ல் புகழ்பெற்ற இயக்குநர் மீரா நாயர் வழங்கினார். கிருஷ்ணா அல்லது 'சாயாக்காரன்' என்ற சிறுவனை மையப் பாத்திரமாகக் கொண்ட கதை அது. தனது சகோதரனின் சைக்கிளை சேதப்படுத்துகிறவனை அவனுடைய தாய் வீட்டைவிட்டு வெளியேற்றுகிறாள். ஏற்பட்ட நஷ்டத்தை அவன் ஈடுகட்டினால்தான் வீட்டுக்குத் திரும்பி வரமுடியும் என்று அவள் கூறுகிறாள். ஒரு சர்கஸ் கம்பெனியில் அவன் சேருகிறான். அந்தக் கம்பெனி அவனை பாதியிலிலேயே கழற்றி விடுகிறது. கையில் ஒருசில ரூபாய்களுடன் மும்பை நகருக்கு வருகிற அவனுடைய அந்தப் பணமும் திருடு போகிறது. போக்கிடம் எதுவுமின்றி, உதவி செய்வார் யாருமின்றி அவன் தெருக்களில் வாழத் தொடங்குகிறான். அவமதிப்புகளுக்கும் அடி உதைகளுக்கும் உள்ளாகிற கிருஷ்ணாவுக்கு, போதை மருந்து விற்கிற ஒருவனிடமிருந்து பாதுகாப்புக் கிடைக்கிறது. கிருஷ்ணாவுக்கு அவன் சாயா விற்கிற வேலை வாங்கிக் கொடுக்கிறான். ஒரு திருட்டு முயற்சியில் இறங்கும் கிருஷ்ணா அதில் தோல்வியடைந்து, சிறார் இல்லத்தில் சேர்க்கப்படுகிறான். அங்கிருந்து அவன் தப்பித்தாலும் அது அவனுக்கு மகிழ்ச்சிகரமான முடிவாக அமையவில்லை. சிறு சிறு குற்றங்கள், போதை மருந்துகள், பாலியல் தொழிலுக்கு ஆள்பிடிப்பது என்ற இருட்டு உலகத்திற்கு அவன் திரும்பிச் செல்கிறான் என்றாவது ஒரு நாள் தன் தாயிடம் செல்ல முடியும் என்பது மட்டுமே அவனது நம்பிக்கை.

25 ஆண்டுகள் கடந்துவிட்டன. இப்போதும் நிலைமை பெரிதாக மாறிவிடவில்லை. ''தெருக் குழந்தைகளை பொருட்படுத்துதல்'' என்ற தலைப்பில் முதல் முறையாக, மும்பையின் தெருக் குழந்தைகள் பற்றிய கணக்கெடுப்பு ஒன்று நடத்தப்பட்டுள்ளது. டாடா சமூக அறிவியல் நிறுவனமும் (டி.ஐ.எஸ்.எஸ்.) அரசுசாரா அமைப்பான ஆக்ஷன் எய்டு குழுவினரும் இணைந்து மேற்கொண்ட அந்தக் கணக்கெடுப்பு, 2013ம் ஆண்டில் மும்பை நகரில் 37,059 தெருக் குழந்தைகள் இருந்ததாகவும், கிருஷ்ணா அனுபவித்த அதே கொடுமைகளை தொடர்ந்து அவர்களும் அனுபவித்துக் கொண்டிருந்ததாகவும் தெரிவிக்கிறது. நகரத்தின் தெருக்களில் தஞ்சம் புகுந்துள்ள ஆயிரக்கணக்கான குழந்தைகள் எளிதில் இரையாகக் கூடியவர்களாக இருப்பதையும், அவர்களது வாழ்க்கை நிலைமைகள் சோகமாக இருப்பதையும் இந்தக் கணக்கெடுப்பு வெளிச்சத்திற்குக் கொண்டு வருகிறது.

அந்தக் குழந்தைகளில் சுமார் 24 சதவீதத்தினர் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள். 15 சதவீதத்தினர் போதைப் பழக்கங்களில் சிக்கியவர்கள். 40 சதவீதத்தினர் ஏதாவது ஒரு வகையில் பல்வேறு அவமதிப்புகளை நேரில் பார்த்தவர்கள் அல்லது தாங்களே அனுபவித்தவர்கள். கிட்டத்தட்ட 24 சதவீதத்தினர் பிச்சை எடுப்பது, மோசமான வேலைகளைச் செய்வது, குப்பை பொறுக்குவது, கட்டுமான வேலைகளைச் செய்வது என்று ஈடுபட்டிருப்பதை அந்த கணக்கெடுப்பு அறிக்கை வெளிப்படுத்துகிறது.

குழந்தை உழைப்பு, கல்வியின்மை, உடல் ரீதியான தாக்குதல்கள், பாலியல் ரீதியாக பயன்படுத்தப்படுதல், நிர்ப்பந்திக்கப்பட்ட பட்டினி ஆகியவை தொடர்பான, மனதில் சஞ்சலத்தை ஏற்படுத்தும் உண்மைகளை அந்தக் கணக்கெடுப்பு வெளியே கொண்டு வருகிறது. ''இது ஒரு சவால் மிக்க பணி. ஆனால், அர்த்தமுள்ள பணி. சில பிரம்மைகளை இது உடைக்கிறது. இது எவ்வளவு பெரிய பிரச்சனை என்பது தொடர்பான சில கேள்விகளை எழுப்புகிறது,'' என்று அறிக்கையின் முடிவில் கூறப்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சனைகளின் மூல வேராக வறுமை, வேலையின்மை, புலம் பெயர்தல், பாகுபாடு போன்ற பெரும் நிலைமைகளில் இருப்பதை இந்தக் கணக்கெடுப்பு அங்கீகரிக்கிறது. ''2011ம் ஆண்டின் மக்கள் தொகைக்

கணக்கெடுப்பு வெளியான பிறகு, கிராமப்புற மக்கள் தொகையைவிட நகர்ப்புற மக்கள் தொகை அதிகமாக வளர்ந்திருப்பதை நாங்கள் கண்டறிந்தோம். இந்த அதிகரிப்புக்கு முக்கிய காரணம் கதியற்ற நிலையில் மக்கள் புலம்பெயர வேண்டியிருப்பதுதான். மக்கள் தெருக்களில் வாழ்வது அந்த கதியின்மையின் நிலைமையின் விளைவுதான். தெருக்களில் வாழும் குழந்தைகள் ஒரு கட்டமைப்பு சார்ந்த பிரச்சனையின் அடையாளங்களாக இருக்கிறார்கள். இதுதான் எங்களை இந்தக் கணக்கெடுப்பை மேற்கொள்ளத் தூண்டியது,'' என்று ஆக்ஷன் எய்டு அமைப்பின் அலெக்ஸ் ஜார்ஜ்கூறினார்.

''திட்டவட்டமான எண்ணிக்கையை முன்வைக்க வேண்டும் என்பதுதான் இந்த கணக்கெடுப்பின் நோக்கம். மாதிரி ஆய்வுகளை பொதுவாக அரசாங்கங்கள் தட்டிக்கழித்துவிடுகின்றன. மாதிரி ஆய்வுகள் ஒட்டுமொத்த பிரச்சனையை சுட்டிக்காட்டுவதில்லை என்பது அரசாங்கத்தின் வாதம். ஆனால், மக்கள் தொகைக் கணக்கெடுப்பு விவரங்கள் அக்கறையோடு எடுத்துக்கொள்ளப்படுகின்றன. எங்களது பரிந்துரைகளை மகாராஷ்டிர மாநில அரசு ஒட்டுமொத்தமாக ஏற்றுக்கொண்டுவிட்டது,'' என்றார் அவர்.

**24 சதவீத தெருக் குழந்தைகள் எழுதப் படிக்காத தெரியாதவர்கள். 4–6 வயதுப் பிரிவுகளில் கணக்கிடப்பட்ட 5,467 குழந்தைகளில் 1,724 பேர் மட்டுமே பால்வாடிகளுக்குச் சென்றவர்கள். 22 சதவீத குழந்தைகள் மூன்றாம் வகுப்பு வரை படித்தவர்கள். 20 சதவீதத்தினர் 7ம் வகுப்பு வரை படித்தவர்கள்.**

''நாட்டின் வர்த்தகத் தலைநகரமாக மும்பை இருப்பதால், இந்தக் கணக்கெடுப்பின் விவரங்கள் பெருநகரங்களில் இவ்வாறு இரையாகக் கூடிய மக்கள் விளிம்பு நிலைக்குத் தள்ளப்படுவது எவ்வாறு நடக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள (எங்களுக்கு) உதவும்,'' என்று டி.ஐ.எஸ்.எஸ். நிறுவனத்தின் குற்றவியல் மற்றும் நீதி ஆய்வு மையத்தைச் சேர்ந்த விஜய் ராகவன் கூறினார். ''அரசாங்கத்திற்கு நீங்கள் ஒரு திட்டவட்டமான எண்ணிக்கையைக் காட்டினால்தான் அவர்கள் எதிர்வினையாற்றுகிறார்கள். இந்தக் கணக்கெடுப்பு விவரங்கள் கூட ஓரளவுக்குத்தான் துல்லியமானது என்று நான் நினைக்கிறேன். நாங்கள் சில குறிப்பிட்ட கணக்கெடுப்பு முறைகளைப் பின்பற்ற வேண்டியிருந்தது. ஆனால், சாத்தியமான அளவிற்கு சரியான புள்ளிவிவரங்களை நாங்கள் திரட்டியிருக்கிறோம். இந்த ஆய்வின் மூலம் முன்வைக்கப்படுகிற பரிந்துரைகளை அரசாங்கமும், குடிமைச் சமூகமும் பிரச்சார முயற்சிகள் மூலம் முன்னெடுத்துச் செல்ல வேண்டும்,'' என்றும் அவர் கூறினார்.

**கணக்கெடுப்பு முறை**

இந்த ஆய்வுக்காக ஒரு எண்ணிக்கை அமைப்பைச் சார்ந்த ஆய்வு முறை வகுக்கப்பட்டது என்று ராகவன் விளக்கம் அளிக்கிறார். ஒரு கணக்கெடுப்பு, 728 குழந்தைகளிடம் ஒரு மாதிரி ஆய்வு ஆகிய இரண்டு பகுதிகளாக இந்தக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. முதல் பகுதியில் மும்பையில் வாழும் தெருக் குழந்தைகள் ஒவ்வொருவராகக் கணக்கெடுக்கப்பட்டார்கள். உலகம் முழுவதும் பொதுவாகப் பயன்படுத்தப்படுகிற, தெருக் குழந்தைகள் என்றால் யார் என்பது குறித்து ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதியம் (யுனிசெப்) அமைப்பு முன்வைத்துள்ள வரையறைகளின்படி இந்தக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. யுனிசெப் அமைப்பு தெருக் குழந்தைகளை மூன்று வகைகளாகப் பிரிக்கிறது: (1) தங்களது குடும்பங்களை விட்டு ஓடிப் போகிற, தங்களது சொந்த முயற்சியிலேயே வாழ்கிற குழந்தைகள்; (2) தெருக்களில் வேலை செய்யும் குழந்தைகள். இவர்கள் பெரும்பாலான நேரம் தெருவிலேயே இருப்பார்கள். ஆனால், குறிப்பிட்ட கால அளவில் வீட்டுக்குத் திரும்புவார்கள்; (3) தெருக்களில் வாழும் குடும்பங்கள். இவர்கள் தெருக்களில் தங்களது குடும்பங்களோடு வசிக்கிறவர்கள்.

குழந்தைகளின் வயது, பாலினம் அவர்களது இடம் சார்ந்த வகைப்பாடு, உடல் ஆரோக்கிய நிலைமை, கல்வி, உடல்சார்ந்த இயலாமை, போதைப் பழக்கங்கள் போன்ற விவரங்களைத் திரட்டுவதற்கான ஒரு முறை உருவாக்கப்பட்டது. சமூகப் பொருளாதார நிலை, கல்வி, வேலை, குடும்பப் பின்னணி போன்ற தகவல்களை

கேட்டறிவதற்கான கட்டமைக்கப்பட்ட பேட்டிகளின் அடிப்படைகளில் இந்த ஆய்வு நடத்தப்பட்டது. குழந்தைகள் ஏன் தெருக்களில் வாழ்கிறார்கள் என்பதற்கான காரணங்களை அறியவும் இந்த ஆய்வு இன்றைய காலத்திற்குப் பொருந்துவதாக உறுதிப்படுத்தவும் இந்தத் தகவல்கள் முக்கியமாகத் தேவைப்படுகின்றன. இப்பிரிவு மக்களின் இயல்புத் தன்மை காரணமாக இந்தக் கணக்கெடுப்பை நாங்கள் மிக வேகமாக நடத்த வேண்டியிருந்தது. கிட்டத்தட்ட 100 கணக்கெடுப்பாளர்கள் மூன்று நாட்களுக்குள் இந்தப் பெருநகரம் முழுக்கச் சென்று ஒவ்வொருவராகக் கணக்கெடுத்தார்கள். இதில் கொஞ்சம் தாமதமாகிவிட்டால் சிலரைப் பற்றிய விவரங்கள் இரண்டு முறை பதிவாகிவிடக்கூடும். ஏனென்றால், இந்தக் குழந்தைகள் தொடர்ச்சியாக இடம் விட்டு இடம் நகர்ந்துகொண்டே இருப்பவர்கள் என்று ராகவன் கூறினார்.

மும்பையின் 25 வட்டங்களில் மொத்தம் 36,154 தெருக் குழந்தைகள் கண்டறியப்பட்டார்கள். 905 பேர் நகரத்தின் ரயில் தண்டவாளங்களையொட்டி வசிக்கிறார்கள். இரு பிரிவினருமாகச் சேர்ந்து மொத்தம் 37,059 குழந்தைகள் வருகிறார்கள். அதிகமான தெருக் குழந்தைகள், 2,802 பேர் (7.75 சதவீதம்) எஸ் வட்டத்தில் இருந்தார்கள். அதற்கடுத்து 2312 பேர் (6.39 சதவீதம்) டி – வட்டத்தில் இருந்தார்கள்.

குறிப்பிட்ட வட்டத்தின் அரசியல் பொருளாதாரத்திற்கும் அங்கு இருக்கக்கூடிய தெருக் குழந்தைகள் எண்ணிக்கைக்கும் இடையே ஒரு நேரடித் தொடர்பு இருப்பதாக அறிக்கை தெரிவிக்கிறது. உதாரணமாக, தெருக் குழந்தைகள் அதிகமாக உள்ள இந்த இரண்டு வட்டங்களும் சந்தைகள், ரயில் தடங்கள், பேருந்து நிலையங்கள், கட்டுமானத் தலங்கள், வழிபாட்டுத் தலங்கள் போன்ற சுறுசுறுப்பான, முனைப்புமிக்க, முறைசாராத பொருளாதார நடவடிக்கைகள் கொண்ட வர்த்தகப் பகுதிகளாக உள்ளன.

தெருக் குழந்தைகளில் கிட்டத்தட்ட 65 சதவீதத்தினர், தெருக்களில் தங்களது குடும்பங்களோடு வாழ்கிறார்கள். அடுத்ததாக வருபவர்கள் தெருக்களில் வேலை செய்யும் குழந்தைகள். இவர்கள் 24 சதவீதத்தினர். சுமார் 8 சதவீத குழந்தைகள் தெருக்களில் தங்களது சொந்த முயற்சியிலேயே வாழ்கிறார்கள். இது அவர்களை எளிதில் இரையாகக் கூடியவர்களின் பட்டியலில் சேர்க்கிறது என்று அறிக்கை குறிப்பிடுகிறது.

தெருக் குழந்தைகளில் மிக அதிகமானோர் 16 முதல் 18 வயது வரை உள்ளவர்கள். வயது வாரியாக பதிலளித்தவர்கள் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க பெண் குழந்தைகள் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. இதற்குக் காரணம் பல பெண் குழந்தைகளுக்கு திருமணமாகிவிடுகிறது அல்லது அவர்கள் கடத்தப்படுகிறார்கள் அல்லது ஒடுக்குமுறை சார்ந்த உறவுகளில் தள்ளப்படுகிறார்கள் என்று அறிக்கை கூறுகிறது.

கிட்டத்தட்ட 24 சதவீத தெருக் குழந்தைகள் எழுதப் படிக்காத தெரியாதவர்கள். 4–6 வயதுப் பிரிவுகளில் கணக்கிடப்பட்ட 5,467 குழந்தைகளில் 1,724 பேர் மட்டுமே பால்வாடிகளுக்குச் சென்றவர்கள். 22 சதவீத குழந்தைகள் மூன்றாம் வகுப்பு வரை படித்தவர்கள். 20 சதவீதத்தினர் 7ம் வகுப்பு வரை படித்தவர்கள்.

குழந்தைத் தொழிலாளர் முறை சட்டவிரோதமானது என்பதால் குழந்தைகளின் தொழில் பற்றி விசாரிப்பது ஒரு சிக்கலான விஷயம். ஆனால், ஆயினும் இது தொடர்பாகவும் போதுமான தகவல்களை கணக்கெடுப்பாளர்கள் சேகரித்தனர். 11.5 சதவீத குழந்தைகள் தெருக்களில் பூ விற்பனை, செய்தித்தாள் விற்பனை, பழங்கள் விற்பனை ஆகிய தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். 9 சதவீதத்தினர் உணவகங்களில் வேலை செய்கின்றனர்; 7.9. சதவீதத்தினர் பிச்சை எடுக்கிறார்கள்; 5.5. சதவீதத்தினர் குப்பை பொறுக்குகிறார்கள்; 7.5 சதவீதத்தினர் கட்டுமான வேலைகளில் ஈடுபடுகிறார்கள்; 2.5 சதவீதத்தினர் திருமண ஊர்வல இசைக் குழுக்களில் கருவிகளை வாசிப்பது, கூடை பின்னுவது, வீட்டு வேலை, சுமைகள் ஏற்றி இறக்குதல், ஷூ பாலிஷ், துணிகளுக்கு இஸ்திரி போடுவது, தையல், உலோகத் துண்டுகள் விற்பனை போன்ற சிறு சிறு வேலைகளில் ஈடுபடுகின்றனர்.

அநேகமாக தெருக் குழந்தைகள் அனைவரின் வாழ்க்கை நிலைமைகளும் மனிதத் தன்மையற்றதாகவே இருக்கின்றன என்று அந்த ஆய்வு தெரிவிக்கிறது. சிலர் இரவு நேரங்களில், என்.ஜி.ஓ.க்களால் நடத்தப்படும் இல்லங்களில் தங்குகிறார்கள். பலர் குப்பைத் தொட்டிகளுக்கு அருகில், கழிவுநீர் குழாய்களுக்கு அருகில், திறந்த சாக்கடைகளுக்கு அருகில், ரயில் நிலையங்களுக்கு அருகில், பேருந்து நிலையங்களுக்கு அருகில், பூங்காக்கள்/தோட்டங்கள், கடற்கரை, மேம்பாலங்களின் அடியில், சுற்றுலாத் தலங்களில் வாழ்கிறார்கள்.

சுகாதாரம் ஒரு முக்கிய அம்சமாகும். இந்தக் கணக்கெடுப்பில் மருத்துவ சோதனைகள் நடத்தப்படவில்லை என்றாலும் பல குழந்தைகள் ஆரோக்கியமாக இல்லை என்பதை கண்டறிய முடிந்தது. பல குழந்தைகளுக்கு உடலில் காயங்கள் இருந்தன அல்லது அவர்கள் உடல்நலம் குன்றியவர்களாகவே காணப்பட்டார்கள். சுமார் 2.55 சதவீதக் குழந்தைகள் ஏதேனும் ஒரு வகையில் ஊனமுற்றவர்களாக இருந்தார்கள். அவர்களில் பெரும்பாலோர் பிழைப்புக்காக பிச்சை எடுக்கிறார்கள்.

அதிர்ச்சி அளிக்கும் தகவலாக 15 சதவீத குழந்தைகள் போதை மருந்துகள், ஒய்ட்டனர், புகையிலை, பாலிஷ் மற்றும் இதர மலிவான ஆனால் ஆபத்தான போதைப் பொருள்களுக்கு அடிமையாக உள்ளனர். அப்பட்டமாக போதைப் பொருள்களுக்கு அடிமையாக உள்ள குழந்தைகளை நெருங்கி விசாரிப்பது கடினமாகவே இருந்தது. இந்த புள்ளிவிவரத்தை திரட்ட மிகவும் பொறுமை தேவைப்பட்டது.

மும்பை நகரின் உயிர் துடிப்பு போல இருக்கும் ரயில் நிலையங்கள் ஆயிரக்கணக்கான தெருக் குழந்தைகளுக்கும் வீடற்றவர்களுக்கும் வீடாகத் திகழ்கின்றன. அநேகமாக அந்த ரயில் நிலையங்கள் கட்டப்பட்ட நாளிலிருந்தே இப்படித்தான் இருந்து வருகின்றன. 905 குழந்தைகள் ரயில்வே பிளாட்பாரங்களில் இருக்கிறார்கள். பிச்சை எடுப்பது முதல் சிறு சிறு பொருள்களை விற்பனை செய்வது வரையில் திட்டமிட்ட நடைமுறையோடு சம்மந்தப்பட்டிருக்கிறார்கள். உதாரணமாக, மிகக் கூட்டமான நேரங்களில் அவர்களைப் பார்க்க முடியாது. அப்போதுதான் அதிகாரிகளின் கண்காணிப்பு மும்முறமாக இருக்கும். மேற்குப் பகுதி ரயில் நிலையங்களில் வேலை செய்கிற குழந்தைகளை மற்ற பகுதிகளில் பார்க்க முடியாது.

ஒரு தெளிவான நிலைமையை அறிவதற்காக, 728 குழந்தைகளிடம் ஒரு விரிவான மாதிரி ஆய்வை டி.ஐ.எஸ்.எஸ்., ஆக்ஷன் எய்டு செயல்பாட்டாளர்கள் மேற்கொண்டனர். அந்த ஆய்விலிருந்து தெரிய வரும் தகவல்கள் வருமாறு:

52.2 சதவீதத்தினர் சாலையோர நடைபாதைகளிலும் போக்குவரத்து சிக்னல்களுக்கு அருகிலும் காணப்பட்டனர். 61.5 சதவீத குழந்தைகள் தெருக்களில் தங்களது குடும்பங்களுடன் வசிக்கின்றனர். 24.2 சதவீதத்தினர் தங்களது குடும்பங்களுடன் வசிக்கவில்லை, ஆனால் அவர்களுடன் தொடர்பு வைத்திருக்கிறார்கள். 6.9 சதவீத குழந்தைகள் தங்களது குடும்பங்களுடன் எந்தத் தொடர்பும் இல்லாதவர்களாக உள்ளனர். 69.6 குழந்தைகளுக்கு ஏதோ ஒரு வருமானம் இருக்கிறது. மற்ற குழந்தைகளுக்கு வருமானம் எதுவும் இல்லை. பெரும்பாலும் உணவுக்காகவும் தங்குமிடத்திற்காகவும் பல குழந்தைகள் வேலை செய்கிறார்கள்.

இவர்களுடைய பட்டினி ஒரு கவலையளிக்கும் நிலைமையாக இருப்பதை அந்த ஆய்வு சுட்டிக்காட்டுகிறது. சாப்பிட முடியாத 72.2 சதவீத குழந்தைகள், உணவு வாங்குவதற்கு பணம் இல்லை என்ற காரணத்தையே தெரிவித்தார்கள்.

மற்றொரு முக்கிய பிரச்சனை இவர்கள் அவமதிக்கப்படுவது. 44.1. சதவீத குழந்தைகள் தங்களது சகாக்கள் அவமதிக்கப்படுவதை நேரில் பார்த்திருப்பதாகவே, கேள்விபட்டிருப்பதாகவோ தெரிவித்தனர். சித்திரவதை, அடி உதை, நிர்ப்பந்திக்கப்பட்ட பட்டினி, பாலியல் ரீதியாக தவறான முறையில் பயன்படுத்தப்படுதல் போன்றவை அந்த அவமதிப்புகளில் அடங்கும். கணக்கெடுப்பு நடத்தியவருடன் பேசிய ஒரு சிறுவன், இரவு நேரங்களில், படுப்பதற்கு போதுமான இடம் கிடைக்காததால் சண்டை ஏற்படும் என்றும், அது காவல்துறையினரின் கவனத்தைப் பெற்றுவிடும் என்றும் தெரிவித்தான். அப்போது அந்த இடத்திலிருந்து அவர்களை காவலர்கள் விரட்டி அடிப்பார்கள். பிறகு, அவர்கள் திறந்தவெளிகளில்தான் படுக்க வேண்டியிருக்கும். அங்கே எல்லா விதமான அவமதிப்புகளும் நடைபெறும்.

இந்தக் குழந்தைகள் தெருக்களுக்கு வந்ததற்கான காரணங்களையும் இந்த ஆய்வு வெளிப்படுத்துகிறது. அவர்கள் தங்களது குடும்பங்களுடன் தொடர்பு கொள்கிறார்களா என்று விசாரிக்கப்பட்டது. 88.5. சதவீத குழந்தைகள் தாங்கள் புறப்பட்டு வந்த இடத்தை தெரிந்து வைத்திருக்கிறார்கள். 50.8. சதவீத குழந்தைகள் குடும்பங்களில் ஏற்பட்ட மோசமான நிலைமைகள் காரணமாகவே தெருக்களுக்கு வந்ததாகத் தெரிவித்தனர். 15.8. சதவீதத்தினர் வேலை தேடி அல்லது திரைப்படங்களில் நடிப்பது பற்றிய கனவோடு வந்திருக்கிறார்கள். சுமார் 7.7. சதவீதத்தினர் வீட்டை விட்டு ஓடி வந்ததாகத் தெரிவித்தனர். 11 சதவீதத்தினர் தங்களுடைய பெற்றோர்களால் விரட்டப்பட்டதாகத்

தெரிவித்தனர். அவமதிப்பு, வன்முறை, வறுமை, பட்டினி, ஆள் கடத்தல், தொலைந்துபோவது, இயற்கைச் சீற்றங்கள் போன்ற இந்தக் குழந்தைகள் மும்பைத் தெருக்களுக்கு வந்ததற்கான இதர காரணங்களாகும்.

**களக்குறிப்புகள்**

ஒரு நெருக்கடியை வெளிப்படுத்துகிற இந்தப் புள்ளி விவரங்களுக்கு அப்பால், மனதைத் தொடும் களக்குறிப்புக்களை ஆய்வாளர்கள் பதிவு செய்துள்ளனர். இதோ சில மாதிரிகள்: "கத்துவதும், மோசமான வார்த்தைகளால் திட்டுவதும் தினந்தோறும் நடக்கிறது." "சில குழந்தைகள் நகரத்தில் படிக்க வைப்பதாகக் கூறி அழைத்து வரப்பட்டு பின்பு வேலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்." "இரவில் வேலை செய்துவிட்டு காலையில் பள்ளிக்கூடங்களுக்குச் செல்லும் பல குழந்தைகள் தாராவி பகுதியில் உள்ளனர்."

"பல குழந்தைகள் கடைகளில் வேலை செய்கிறார்கள். ஆனால், கடைகளின் உரிமையாளர்கள் அந்தக் குழந்தைகளோடு எங்களை பேசவிடவில்லை." "குப்பை பொறுக்குவதை விட்டுவிட்டால் எனக்கு வேறு நல்ல வேலை வாங்கிக்கொடுப்பீர்களா என்று ஒரு சிறுவன் எங்களைக் கேட்டான்." "சில குழந்தைகள் குப்பைகளைக் கிளறிக்கொண்டிருந்தார்கள். அதிலிருந்து கிடைக்கக்கூடிய உலோகத் துண்டுகளை விற்பனை செய்வார்கள்." "சில சிறுவர்கள் ஒரு போதை மருந்தை தங்களது உடலில் செலுத்துவதை நான் பார்த்தேன். அவர்கள் அதை பயமே இல்லாமல் செய்துகொண்டிருந்தார்கள். என்னை அவர்கள் பார்த்தபோது அவருடைய கண்களில் ஒரு வெறுமைதான் இருந்தது." "போலீஸ்காரர்கள் குழந்தைகளைப் பிடித்து 'சில்லர் ரூமுக்கு' – அதாவது 'சில்ரன் ஹோமுக்கு' அனுப்பி வைக்கிறார்கள் என்று ஒரு பெண் கூறினார்."

களப் பணியாளர்களிடம் சில குழந்தைகள் என்ன சொன்னார்கள் என்பதற்கு இதோ சில சான்றுகள்: "படுத்து உறங்குவதற்கு எனக்கு ஒரு இடம் வேண்டும்." "எங்கள் அப்பா பலூன் விற்கவில்லை என்றால் குழந்தைகள் பட்டினி கிடப்போம். பல நாட்கள் இரவில் நாங்கள் பசியோடுதான் படுக்கிறோம்." "நான் 5 வருடமாக குப்பை பொறுக்குகிறேன். அப்பாவுக்கு வேலை இல்லை. அவர் குடிகாரரும் கூட. அதனால் நாங்கள் பிச்சை எடுத்து பணத்தை அம்மாவிடம் கொடுக்கிறோம். அந்தப் பணத்தில் கொஞ்சம் பொதுக் கழிப்பறையைப் பயன்படுத்துவதற்காகப் போகிறது."

**பரிந்துரைகள்:**

2001ம் ஆண்டில் உச்சநீதிமன்றம் பிறப்பித்த ஆணையின்படி, மாநில அரசுகள் 5 லட்சத்திற்கு மேல் மக்கள் தொகை கொண்ட அனைத்து நகரங்களிலும் லட்சம் பேருக்கு 100 பேர் என்ற விகிதத்தில் தங்கக்கூடிய ஒரு தங்குமிடம் என்ற அடிப்படையில் 24 மணி நேர இல்லங்களைக் கட்ட வேண்டும். ஆனால், 140 லட்சம் மக்கள் தொகைக் கொண்ட மும்பை நகரில் இரண்டே இரண்டு இல்லங்கள்தான் உள்ளன என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

குழந்தைகளுக்காக மட்டுமாவது இரவு நேர தங்குமிடங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்று அறிக்கை பரிந்துரைக்கிறது. இக்குழந்தைகளுக்கான கல்வி, சுகாதாரம், இக்குழந்தைகளின் போதைப் பிரச்சனை, வேலையில் ஈடுபடுத்தப்படும் பிரச்சனை, அவமதிக்கப்படும் பிரச்சனை, போன்றவற்றில் மகாராஷ்டிரா மாநில அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

தெருக்களில் உள்ள உழைக்கும் குழந்தைகளின் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண்பதற்காக ஒரு விரிவான திட்டத்தை உருவாக்குவதற்கு என்று ஒரு நடவடிக்கைக் குழுவை மத்திய மகளிர் மற்றும் குழந்தை மேம்பாட்டுத் துறை ஏற்படுத்த வேண்டும். அந்தக் குழுவில் மாநில தொழிலாளர் துறை, குழந்தை உரிமைகள் பாதுகாப்புக்கான மாநில ஆணையம் தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம், என்.ஜி.ஓ.க்கள் போன்ற அமைப்புகள் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்று அறிக்கை கூறுகிறது.

தெருக் குழந்தைகள் அவமதிக்கப்படும் பிரச்சனையைப் பொறுத்தவரையில், சிறப்பு சிறார் காவல் பிரிவுகள் ஏற்படுத்தப்பட வேண்டும். தெருக் குழந்தைகள் பெரிதும் சிக்கக்கூடிய இடங்கள் அடையாளம் காணப்பட வேண்டும். காவல்துறையின் குற்றவியல் பிரிவு, சமூகப் பணியாளர்களோடு இணைந்து தெருக்களில் கண்காணிப்புப் பணி மேற்கொண்டு இந்தக் குழந்தைகளைச் சென்றடைய வேண்டுமேயன்றி, அவர்களை விரட்டியடிக்கக் கூடாது. ரயில்வே நிர்வாகம் தனது ஊழியர்களுக்கு பயிற்சி அளித்து, இக்குழந்தைகளின் பிரச்சனையை மனிதத் தன்மையோடு அணுக வேண்டும் என்றும் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

| குழந்தைகள் சாதாரணமாக காணப்படும் இடங்கள் | ஆண் குழந்தைகள் | | பெண் குழந்தைகள் | |
|---|---|---|---|---|
| | | சதவீதம் | | சதவீதம் |
| தெரு | 13,412 | 51.66 | 5,626 | 50.68 |
| தற்காலிக தங்குமிடம் | 143 | 0.55 | 54 | 0.48 |
| பாலம்/மேம்பாலம் அடியில் | 684 | 2.63 | 492 | 4.43 |
| வழிபாட்டுத் தலம் | 651 | 2.50 | 224 | 2.01 |
| சந்தை | 4,049 | 15.59 | 659 | 5.93 |
| பூங்கா | 312 | 1.20 | 122 | 1.09 |
| ரயில் நிலையம் | 947 | 3.64 | 601 | 5.41 |
| பேருந்து நிலையம் | 142 | 0.54 | 59 | 0.53 |
| குடிசைகள் / தற்காலிக கட்டுமானங்கள் | 2,750 | 10.59 | 2,192 | 19.74 |
| சுற்றுலா இடங்கள் | 59 | 0.22 | 43 | 0.38 |
| வேலைத்தளம் / கட்டுமானத் தளம் | 2,781 | 10.71 | 1,018 | 0.90 |
| பதில் சொல்லாதவர்கள் | 30 | 0.11 | 9 | 0.08 |
| மொத்தம் | 25,960 | 100 | 11,099 | 100 |

| குழந்தைகள் சாதாரணமாக காணப்படும் இடங்கள் | ஆண் குழந்தைகள் | | பெண் குழந்தைகள் | |
|---|---|---|---|---|
| | | சதவீதம் | | |
| பிச்சை எடுத்தல் | 1,772 | 6.82 | 1,162 | 10.46 |
| குப்பை பொறுக்குதல் | 1,422 | 5.47 | 622 | 5.60 |
| சாலையில் பூ, பழம் மற்றும் இதர பொருள்கள் விற்பனை | 3,093 | 11.91 | 1,170 | 10.54 |
| கார், டூவீலர் சுத்தப்படுத்துதல் | 916 | 3.52 | 77 | 0.69 |
| சாலையோர கடைகள் மற்றும் பனிமலைகளில் வேலை | 3,686 | 14.91 | 245 | 2.21 |
| சிறு உணவகங்களில் வேலை | 3,153 | 12.14 | 184 | 1.65 |
| கிடைக்கிற எந்த வேலையும் | 771 | 2.96 | 147 | 1.58 |
| கட்டுமான வேலை | 796 | 3.06 | 142 | 1.27 |
| எந்த வேலையிலும் இல்லாதவர்கள் | 5,149 | 19.83 | 3,472 | 31.28 |
| இந்தக் கேள்வி பொருந்தாதவர்கள் | 4,407 | 16.97 | 3,581 | 32.26 |
| மற்ற வேலைகள் | 761 | 2.93 | 282 | 2.54 |
| பதில் சொல்லாதவர்கள் | 34 | 0.13 | 15 | 0.13 |
| மொத்தம் | 25,960 | 100 | 11,099 | 100 |

| தங்கும் இடங்கள் | ஆண் குழந்தைகள் | | பெண் குழந்தைகள் | |
|---|---|---|---|---|
| | | சதவீதம் | | சதவீதம் |
| தெரு | 4,854 | 18.69 | 2,719 | 2.49 |
| இரவுத் தங்குமிடம் | 646 | 2.48 | 164 | 1.47 |
| பாலம் / மேம்பாலம் அடியில் | 914 | 3.52 | 684 | 6.16 |
| வழிபாட்டுத் தலம் | 249 | 0.95 | 83 | 0.74 |
| சந்தை | 455 | 1.75 | 88 | 0.79 |
| பூங்கா | 156 | 0.60 | 57 | 0.51 |
| ரயில் நிலையம் | 406 | 1.56 | 222 | 2.00 |
| பேருந்து நிலையம் | 113 | 0.43 | 32 | 0.23 |
| குடிசை | 8,751 | 2.89 | 5,120 | 46.13 |
| சுற்றுலா இடங்கள் | 33 | 0.12 | 14 | 0.12 |
| வேலைத்தளம் | 2,092 | 8.05 | 215 | 1.93 |
| கடலோரம் / கடற்கரை | 824 | 3.17 | 499 | 4.49 |
| இதர இடங்கள் | 418 | 1.61 | 169 | 1.52 |
| குடிசைப் பகுதி | 5,748 | 22.14 | 938 | 8.45 |
| பதில் சொல்லாதவர்கள் | 301 | 1.15 | 95 | 0.85 |
| மொத்தம் | 25,960 | 100 | 11,099 | 100 |

இரையாகக் கூடிய, விளிம்பு நிலையில் உள்ள மக்களுக்கான தற்போதுள்ள சட்டங்கள், கொள்கைகள், திட்டங்கள், மறு ஆய்வு செய்வதற்கு துறைகளுக்கிடையேயான குழு ஒன்றை மாநில அரசு ஏற்படுத்த வேண்டும். அந்தக் குழுவிற்கு தலைமைச் செயலர் தலைமை தாங்க வேண்டும். 6 வாரங்களுக்கு ஒருமுறையாவது அந்தக் குழு கூட வேண்டும் என்றும் அறிக்கை கூறுகிறது.

2008ம் ஆண்டில், தெருக் குழந்தைகளின் கதையை அடிப்படையாகக் கொண்ட 'ஸ்லம்டாக் மில்லினர்' என்ற திரைப்படத்தை டேனி பாயல் உருவாக்கினார். மீரா நாயரின் படத்திலிருந்து மாறுபட்ட இந்தப் படம் 8 ஆஸ்கர் விருதுகளைப் பெற்றது.

அந்தப் படத்தில் வரும் கதாபாத்திரங்களுக்காக நான் ஆழமாக வேதனைப்பட்டோம். ஆனால் நிஜத்தில், போக்குவரத்து சிக்னல் அருகில் ஒரு சிறுவன் பூ விற்க முயலும்போது நாம் முகத்தைத் திருப்பிக் கொள்கிறோம்.

– ஆதாரம்: ஃபிரண்ட் லைன், ஜனவரி 24, 2014

For Private Circulation Only



*Education Material Published on behalf of*

**Tamil Nadu Child Rights Protection Network by**
**Human Rights Advocacy and Research Foundation (HRF)**

*# 10, LDG Road, Little Mount, Saidapet, Chennai - 600 015, India.*
*☎ 22353503, 22351919 Fax : 22355905,*
*E-mail : humanrightsadvocacyandresearch@gmail.com*
*website : www.humanrightsadvocacyandresearchfoundation.org*

# சட்டத்துடன் முரண்படும் நிலைமைக்கு சிறார்களின் குற்றப் பொறுப்பை புரிந்துகொள்ளுதல்: வளர்ச்சி மற்றும் உயிரியல் சார்ந்த தொலைநோக்குகள்

## சுருக்கம்

ஐக்கிய நாடுகள் அமைப்பின் குழந்தை உரிமைகள் மாநாடு, குழந்தை என்பதை பின்வருமாறு வரையறுக்கிறது: ‘‘குழந்தைக்குப் பொருந்தத்தக்க சட்டத்தின் கீழ், வயது மூப்பு என்பது முன்கூட்டியே ஏற்பட்டாலன்றி, குழந்தை என்பது 18 வயதுக்குக் குறைந்த ஒரு மனிதப் பிறவியாகும்.’’

வளர்ச்சி அடிப்படையிலும் உயிரியல் அடிப்படையிலும் விடலைப் பருவம் என்பது குழந்தைப் பருவத்திற்கும் பெரியவர்களாக வளர்ந்த பருவத்திற்கும் இடைப்பட்ட காலகட்டத்தைக் குறிக்கிறது. இதுதான் ஒரு குழந்தை தனது தனித் திறன்களை வளர்த்துக்கொள்ளும் காலகட்டமாகும். உயிரியல் அடிப்படையில், வயதுக்கு வரும் கட்டத்திலிருந்து பாலியல் ரீதியாகவும் உடல் ரீதியாகவும் முதிர்ச்சியடைந்த பெரியவர்களாக விடலைப் பருவத்தினர் வளர்ச்சி பெறுகிற, மாற்றம் அடைகிற காலகட்டம் இது.

18ம் நூற்றாண்டில், ஜீன் ஜேக்குயிஸ் ரோஸூ விடலைப் பருவம் குறித்து ஒரு மேம்பட்ட கண்ணோட்டத்தை முன்வைத்தார். பிரெஞ்சு தத்துவ அறிஞரான ரோஸூ, குழந்தைப் பருவத்தை வரையறுக்கிறபோது ஒரு குழந்தை குட்டிப் பெரியவர் அல்ல என்று கூறினார். சிறு உருவத்திலான பெரியவர்கள் என குழந்தைகளை நடத்துவது பொறுத்தமானதல்ல, அது தீங்கு விளைவிக்கக்கூடியது என்றார் அவர். 12 வயது வரையிலான அல்லது அதுபோன்ற வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் பெரியவர்களுக்கான கட்டுப்பாடுகள் இல்லாதவர்களாக இருக்க வேண்டும், தங்களது உலகத்தை இயற்கையாக அனுபவித்துப் புரிந்துகொள்ள அனுமதிக்கப்பட வேண்டும், அவர்கள் மீது கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்படக்கூடாது என்று அவர் வாதிட்டார்.

சாதாரணமான வளர்ச்சிப் போக்கில், ஒரு குழந்தைக்கு தனது செயல்களின் பின் விளைவுகள் குறித்து கற்பிக்கப்படுகிறது. அந்தச் செயல்களுக்கு பொறுப்பேற்குமாறு குழந்தையின் பெற்றோராலும் கல்வி முறையாலும் சமூகத்தாலும் சமூகப் பழக்கவழக்கங்களாலும் ஊக்கமளிக்கப்படுகிறது. குழந்தைகள் சரியாக எந்த வயதில் சமூக ரீதியாக ஏற்கத்தக்க தார்மீக ரீதியாகவும் சட்டப்பூர்வமாகவும் பொருந்தத்தக்க நடத்தைகளை வளர்த்துக்கொள்ளவும் வெளிப்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறார்கள் என்பது அவர்களது குடும்பம், பண்பாடு, நாடு போன்ற பல்வேறு அம்சங்கள் சார்ந்ததாகும். அதற்காக குழந்தை வளர்ப்பு தொடர்பாக உள்ள பல்வேறு சட்டங்களின் விதிகளைப் பயன்படுத்துகிறோம், சட்டத்துடன் முரண்படுகிற குழந்தைகளைக் கட்டுப்படுத்துகிறோம்.

சிறார் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் – 2000 பின்னர் 2011ம் ஆண்டில் திருத்தம் செய்யப்பட்டது. அந்தச் சட்டம், ‘‘சட்டத்துடன் முரண்படும் சிறார் என்பது ஒரு குற்றத்தை செய்ததாக குற்றம் சாட்டப்படுகிற, அந்தக் குற்றம் நடந்தபோது 18 வயது நிறைவடையாத ஒரு நபர் என்று பொருள்படும்,’’ என்று வரையறுக்கிறது. ‘‘குற்றம் என்பது நடப்பில் உள்ள எந்த ஒரு சட்டத்தின் கீழும் தண்டனைக்குரிய குற்றச் செயலைச் செய்வது என்று பொருள்படும்,’’ என்றும் அந்தச் சட்டம் கூறுகிறது. சிறார் குற்றம் அல்லது இளையோர் குற்றம் என்றும் அறியப்படுகிற சிறார் பொறுப்பின்மை என்பது வயதில் குறைந்தோர் (சிறார்கள்) (வயது வந்தோர் என்பதற்கான சட்டப்பூர்வ வயதுக்குக் குறைவான தனி நபர்கள்) சட்டவிரோத செயல்களில் ஈடுபடுவதாகும். சிறார்களைக் கையாள்வதற்காக சிறார் காவல் மையங்கள் மற்றும் சிறார் நீதிமன்றங்கள் போன்ற, குறிப்பான நடைமுறைகளை பெறும்பாலான சட்ட அமைப்புகள் வகுத்துறைக்கின்றன.

இந்தியாவில், குற்றச் செயலுக்கு பொறுப்பேற்கும் வயது 7 என இந்திய தண்டனைச் சட்டம் (ஐபிசி) – 1860 என்று தீர்மானித்துள்ளது. ‘‘7 வயதுக்குக் குறைந்த ஒரு குழந்தை செய்யக்கூடிய எதுவும் குற்றமாகாது.’’ 8 முதல் 12 வயது வரையிலான குழந்தைகளைப் பற்றி

கூறும்போது, ''குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் தனது செயலின் தன்மை மற்றும் பின் விளைவுகளை மதிப்பிடக் கூடிய அளவுக்கு போதிய புரிதல் முதிர்ச்சியைப் போதுமான அளவிற்குப் பெறாத, 7 வயதுக்கு மேற்பட்ட 12க்குக் குறைந்த ஒரு குழந்தை செய்யக்கூடிய எதுவும் குற்றச் செயலாகாது,'' என்று ஐபிசி பிரிவு 83 கூறுகிறது. ஆகவே, தண்டனையிலிருந்து விலக்குப் பெறுவதற்கு, குற்றம்சாட்டப்பட்ட குழந்தை தனது செயல் தவறானது என்று புரிந்துகொள்வதற்குப் போதுமான முதிர்ச்சியை பெறவில்லை என்று நிரூபித்தாக வேண்டும். 12 முதல் 18 வயது வரையிலான குழந்தைகளுக்கு இப்படிப்பட்ட விலக்கு எதுவும் இல்லை. ஆனால், குற்றச் செயல்களில் இவர்களுக்குப் பொறுப்பு உள்ளது என்று கண்டுபிடிக்கப்பட்டால்கூட, பெரியவர்களை நடத்துகிற அதே முறையில் இவர்களை நடத்த முடியாது. 18 வயதிற்கு கீழ் உள்ள குற்றவாளிகளுக்கு மரண தண்டனையோ, விடுதலை பெற வாய்ப்பில்லாத ஆயுள் தண்டனையோ வழங்கப்பட முடியாது என்று குழந்தை உரிமைகளுக்கான உடன்படிக்கை (CRC) – உரை 37 கூறுகிறது. இந்த உடன்படிக்கையை அங்கீகரித்துள்ள இந்தியாவும் இதே கொள்கையைத்தான் பின்பற்றுகிறது.

எனவே, இந்தியாவில் 7 வயதுக்கு குறைந்த ஒரு குழந்தை எந்த ஒரு குற்றப் பொறுப்பையும் ஏற்கத் தேவையில்லை. சட்டத்துடன் முரண்படும் சிறாருக்கான சிறார் நீதிமுறை எதற்கும் உட்பட வேண்டியதில்லை. போதிய முதிர்ச்சியுடன் 7–12 வயதுப் பிரிவில் உள்ள குழந்தைகளும், 12–18 வயதுப் பிரிவில் உள்ள குழந்தைகளும் இந்த சட்டத்தின் கீழ் வருகிறார்கள். அவர்கள் தங்களது குற்றச் செயலுக்குப் பொறுப்பேற்க வேண்டும். ஆனால், பெரியவர்களுக்கான குற்றவியல் சட்டங்கள் இவர்களுக்குப் பொருந்தாது. இவர்களை சீர்திருத்துவதையும், இவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதையும் நோக்கமாகக் கொண்ட சிறார் நீதிச் சட்டத்தின் (JJA) கீழ் உள்ள வரும் விதிகளின்படிதான் இவர்கள் நடத்தப்பட வேண்டும். குழந்தைகளை ஆயுள் காலம் முழுக்க சிறையில் அடைக்க முடியாது, அவர்களுக்கு மரண தண்டனை அளிக்க முடியாது என்று கூறுகிற CRC உரை 37, சட்டத்துடன் முரண்படும் குழந்தைகளுக்கான சட்டம் (JCL) எவ்வளவு விரைவாகவும் கவனத்துடனும் அக்கறையுடனும் கையாளப்பட வேண்டும் என்பதற்கான வழிகாட்டல்களையும் வகுத்துள்ளது. நிகழ்ந்துள்ள சில குற்றங்களின் தன்மையையும் கடுமையையும் கருத்தில் கொண்டு சிலர், 18 வயதுக்குக் குறைந்தவர் மீது பெரியவர்களைப் போலவே வழக்குத் தொடரப்பட வேண்டும் என்று வாதிடுகிறார்கள். தற்போதுள்ள JJAயில் அப்படிப்பட்ட விதிகள் இல்லை. ஒரு கொடூரமான குற்றத்தில் ஒரு சிறார் சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய நிலையில், அந்த வழக்குகளில் 'நீதி' கிடைத்தாக வேண்டும் என்று சமுதாயத்தில் சில பிரிவினர் விரும்புவதால் ''பெரியோர் குற்றம் என்றால் பெரியோருக்கான காலகட்டம்தான்.'' என்ற வாதம் முக்கியத்துவம் பெறுகிறது. இந்த வாதத்தை முன்வைக்கிறவர்கள் பாதிப்புகளின் விகிதம் என்ற கோட்பாட்டை அடிப்படையாக எடுத்துக்கொள்கிறார்கள். அதை ஒரு கோட்பாடாக எடுத்துக்கொள்ளும்போது, குற்றத்திற்கான பொறுப்பு, குற்றத்தின் கடுமை ஆகிய இரண்டும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். இவ்வாறாக, இந்த விவாதம் இப்போது குற்றத்தின் கடுமை சார்ந்ததாக இல்லாமல், விடலைப் பருவத்தினர் எந்த அளவிற்கு இதற்குப் பொறுப்பேற்க வேண்டும் என்பதைப் பொறுத்ததாக நடந்துகொண்டிருக்கிறது.

## முதிர்ச்சியின் உயிரியல்

குறிப்பிட்ட வயதுக்குப் பிறகு விடலைப்பருவத்தினர் 'முதிர்ச்சி'' அடைவதாகக் கருதப்படுகிறது. குழந்தைகள் எப்போது பெரியவர்களாவதாகக் கருதப்படுகிறார்கள் என்பது கலாச்சாரம், வசதிகள், வரலாற்றுத் தேவைகள் ஆகியவற்றின் கலவையோடு சம்பந்தப்பட்டதாகும். இளையோர் வளர்ச்சியை 7 ஆண்டுகள் கொண்ட 3 கட்டங்களாகப் பிரித்த அரிஸ்டாட்டில், ஒருவர் அந்த 3 கட்டங்களையும் நிறைவு செய்கிற 21வது வயதில் முதிர்ச்சியடைவதாகக் கூறினார். மத்திய கால கட்டத்தில் பெரியவராவது 21 வயதில்தான் என்று கருதப்பட்டதாக பதிவுகள் காட்டுகின்றன. இந்தியாவில் வயதுவந்துவிட்டதன் அடையாளமாக 18, 21 ஆகிய வயதுகளைக் கருதுவது ஏற்கெனவே பரவலாக உள்ளது.

''பொறுப்பு என்பதற்கான வயது என்ன'' என்ற கேள்வி எழுகிறது. ஒரு ஜனநாயக அமைப்பு தனது மக்களுக்கு வழங்குகிற உரிமைகள் அனைத்தையும் பெறத்தக்கவர்களாக குடிமக்கள் போதுமான அளவுக்கு பொறுப்புடன் செயல்படத் தொடங்குகிறபோது அந்த வயது, சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வயதுகளுடன் பொருந்தவில்லை என்றால் என்ன செய்வது ? விடலைப் பருவத்தினரையும் வயது வந்த இளைஞர்களையும் எப்படி நடத்துவது என்பது தொடர்பான நமது முந்தைய சட்டமானது பெருமளவுக்கு குழப்பமானதாகவே இருந்து வந்திருக்கிறதேயன்றி எந்த வகையிலும் நடைமுறை அனுபவம் சார்ந்த நியாயங்களுடன் ஒத்துப் போகவில்லை என்பதை அங்கீகரிப்பது இப்போது அதிகரித்து வருகிறது.

அரிஷ்டாட்டில் காலத்திலிருந்து விடலைப் பருவத்தினர் தங்களை கட்டுப்படுத்திக் கொள்ள இயலாதவர்களாக

இருக்கிறார்கள் என்பதும், வயது வந்தோரைவிட அதிக அளவிற்கு அபாயச் செயல்களில் ஈடுபடக் கூடியவர்களாக இருக்கிறார்கள் என்பதும் பதிவு செய்யப்பட்டு வந்துள்ளது. வயது வந்தோரைவிட விடலைப் பருவத்தினர் பொறுப்பை உணராதவர்களாக இருக்கிறார்கள் என்ற வரலாற்று நியானத்தை, உணர்வுத் தூண்டல் மற்றும் சுய நிர்வாகத்தில் ஏற்படும் வளர்ச்சி மாற்றங்கள் குறித்த ஆராய்ச்சிகள் உறுதிப்படுத்துகின்றன. விடலைப் பருவத்தினர் வயது வந்தோரைவிட விரைவாகவும் அதீதமாகவும் உணர்ச்சி மாற்றங்களுக்கு உட்படுகிறார்கள், அதில் ஆக்கப்பூர்வமான மாற்றங்களும் உண்டு. எதிர்மறை மாற்றங்களும் உண்டு என்று ஆராய்ச்சிகள் காட்டுகின்றன. உணர்வுகள் சோர்ந்து போன நிலைமைக்கும், உணர்ச்சிவசப்படுவதற்கும் இடையேயான இணைப்பு பற்றி தெளிவாகப் புலப்படவில்லை என்றாலும் கூட, அளவு கடந்த உணர்வுத் தூண்டல்கள், அது கோபமாக இருந்தாலும் சரி பரவசமாக இருந்தாலும் சரி, சுய கட்டுப்பாட்டில் உள்ள சிரமங்களோடு சம்பந்தப்படுகின்றன என்பதற்கு வாய்ப்பிருக்கிறது. வயது வந்தோரைவிட விடலைப் பருவத்தினர் தங்களது மனநிலைகளையும் உணர்ச்சிகளையும், நடத்தைகளையும் முறைப்படுத்திக் கொள்வதில் கூடுதலான சிரமங்களைக்கொண்டிருக்கிறார்கள் என்று, இதுவரைக் கிடைத்துள்ள ஆதரங்கள் காட்டுகின்றன.

விடலைப் பருவத்தினரின் மூளை குறித்த உயிரியல் ஆய்வுகள், கட்டமைப்பிலும் செயல்பாட்டிலும் அது வயது வந்தோரின் மூளையிலிருந்து மாறுபட்டதாக இருக்கிறது என்று எடுத்துக்காட்டுகின்றன. முதலில், நரம்பு இணைப்புகள் மெலிவடையும்போது, குறிப்பாக மூளையின் முன் பகுதியில், இணைப்புப் பகுதிகளில் தேவையற்றதை கழிக்கும் நடைமுறை நிகழ்கிறது. இது விடலைப் பருவத்தில்தான் நடைபெறுகிறது. அந்தக் கட்டத்தில்தான் அடிப்படை திறன்களிலும் தர்க்கப்பூர்வ புரிதல்களிலும் முக்கிய முன்னேற்றம் நிகழ்கின்றன. ஓரளவுக்கு இந்த நடைமுறையின் காரணமாகத்தான் பயன்படுத்தப்படாத இணைப்புகள் அகற்றப்படுகின்றன.

இரண்டாவதாக, மூளையின் உணர்வு மாற்றிப் பகுதிகள் தொடர்பான உயிரணுக்களில் கணிசமான மாற்றங்கள் நிகழ்கின்றன. குறிப்பாக, அங்கங்களுடனான இணைப்புப் பகுதிகளில் இந்த மாற்றங்கள் நிகழ்கின்றன. இந்தப் பகுதிகளில்தான் உணர்வுகளின் அனுபவங்கள் பதிவாகின்றன. மூளையின் இந்த முன்பகுதியில்தான் அந்த அனுபவங்களுக்கான மகிழ்ச்சியான எதிர்வினைகளும் அல்லது தண்டிக்க வேண்டும் என்ற உணர்வுகளும் பதப்படுத்தப்படுகின்றன. வளர்ச்சியின் வேறு எந்த கட்டத்தையும்விட இந்தக் கட்டத்தில்தான் உணர்வு மாற்றிப் பகுதிகள் முனைப்புடன் செயல்படுகின்றன. மகிழ்ச்சியை நாம் எப்படி அனுபவிக்கிறோம் என்பதில் இந்த உணர்வு மாற்றிப் பகுதிகள் முக்கிய பங்காற்றுகின்றன. ஒரு வேளை இந்த வயது கட்டத்தில் உற்சாகங்களை நாடுகிற மனப்போக்கு அதிகமாக இருப்பதற்கு இது ஒரு காரணமாக இருக்கக்கூடும்.

மூன்றாவதாக, மூளையின் முன்பகுதியில் உயிரணுக்கள் நரம்புத் தொகுப்புகளோடு ஒருங்கிணைவது அதிகமாக நடைபெறுகிறது. தேவையற்றதை நீக்குகிற நடைமுறை விடலைப் பருவத்தின் நடுக்கட்டத்திலேயே நிறைவடைகிறது. ஆனால், இந்த வளர்ச்சிப் போக்கு, வயது வந்த பருவத்தின் தொடக்கக்கட்டம் வரையில் நீடிக்கிறது. மூளையின் முன் பகுதியில் இந்த மேம்பட்ட இணைப்புகள் நிகழ்வது என்பது, முன்கூட்டியே திட்டமிடுதல், ஆதாயங்களையும் அபாயங்களையும் மதிப்பிடுதல், சிக்கலான முடிவுகளை எடுத்தல் போன்ற உயர்நிலை அறிவார்ந்த செயல்பாடுகளில் முக்கியத்துவம் உள்ளதாகிறது.

நான்காவதாக, மூளையின் முன்பகுதி தொகுப்புக்கும் அங்கங்கள் சார்ந்த பகுதிக்கும் இடையேயான தொடர்புகள் மேம்படுகின்றன. இதன் மூலம் (அங்கங்கள் சார்ந்த பகுதிகளில்) உணர்வுகளை முறைப்படுத்துவதற்கும், சுயகட்டுப்பாட்டுடன் சம்பந்தப்பட்ட மூளை முன் பகுதி தொகுப்புக்கும் இடையே முக்கியமான இணைப்புகள் உருவாகின்றன.

### சிறாரும் குற்றமும்

விடலைப் பருவத்தினர் பெரும்பாலோர் பெரியவர்களைப் போலவே எது 'சரி' அல்லது 'தவறு' என பிரித்துப் பார்க்கக்கூடியவர்களாக இருக்கக் கூடும் என்றாலும், தூண்டிவிடப்படும்போது அவர்களால் தங்களது தீவிரமான உணர்வுகளை கட்டுப்படுத்த முடியாமல் போகக்கூடும். அழுத்தங்களுக்கு உட்படும்போது நிதானமாக யோசிக்க முடியாமல் போகக்கூடும். மற்றவர்களால் நிர்ப்பந்திக்கப்படும்போது தங்களது செயல்களின் பின்விளைவுகள் குறித்து சிந்திக்க முடியாமல் போகக்கூடும். காந்தப்புலன் பதிவுக் கருவிகளைப் பயன்படுத்தி தேசிய மனநல நிறுவனத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் சராசரி மூளையானது 20ம் வயதுகளின் நடுக்கட்டத்தில் கூட, குறிப்பாக முன் பகுதியில், வளர்ச்சியடைந்துகொண்டிருக்கின்றன என்று காட்டுகின்றன. மூளையின் இந்தப் பகுதிதான் திட்டமிடுதல், சரியா தவறா என பிரித்துப் பார்த்தல்,

உணர்வுகளைக் கட்டுப்படுத்துதல் போன்ற செயல்பாடுகளுக்கு முக்கியமானதாகும். (3) இந்த வேறுபாடுகள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய முக்கியமான அம்சங்களாகும். ஏனெனில், சிறார்கள் பொதுவாக குழுக்களாக செயல்படும்போதுதான் குற்றங்களில் ஈடுகிறார்கள். பெரியவர்களோ தங்களது சொந்த முடிவின் அடிப்படையிலேயே குற்றங்களைச் செய்கிறார்கள்.

## அறிவு முதிர்ச்சியும் சமூக முதிர்ச்சியும்: கட்டுமானங்களும் காலகட்டமும்

உடல் கட்டுமானம் முதிர்ச்சியடையும்போது, சிந்திப்பதற்கும் நுட்பமாக ஆராய்வதற்குமான திறனும் முதிர்ச்சியடைகிறது என்று பொதுவாக கருதப்படுகிறது. ஆகவே, "பெரியவர்களுக்கான" நடத்தைகள் இருக்குமானால், "பெரியவர்களுக்கான" நோக்கங்களும் இருக்கும் என்று ஊகிப்பது தவறல்ல. தனது செயலின் விளைவுகளை புரிந்துகொள்ளக்கூடிய அளவுக்கு, மிக முக்கியமாக அதன்படி செயல்படக்கூடிய அளவுக்கு மனம் முதிர்ச்சியடைந்திருக்கும் என்று கருதுவதும் தவறல்ல என்று பொதுவாக எடுத்துக்கொள்ளப்படுகிறது.

விரிவான கண்ணோட்டத்தில் அணுகுவோமானால், அடிப்படையான புலனுணர்வு சார்ந்த செயல்பாடுகளானாலும் சரி, உணர்ச்சிவசப்படுவதை கட்டுப்படுத்துதல், மதிப்பிடுதல், முன்கூட்டியே திட்டமிடுதல், உணர்வுப்பூர்வமாக முறைப்படுத்துதல் இவை அனைத்துமே மூளைக்குள் உள்ள வேறுபட்ட அமைப்புகளின் செயல்பாடுகள் என்பது தெரியவரும். நடத்தைகள் முறைப்படுத்தப்படுவது தொடர்பான அமைப்புகள் குறித்த சுவையான தகவல்களை நரம்பு அறிவியல் நமக்குத் தருகிறது. இந்த அமைப்புகள் பல்வேறு காலகட்டங்களில் உருவாகின்றன என்பது இப்போது தெரிய வந்துள்ளது. தகவல்களை பெறுதல், அவற்றை தன்வயப்படுத்துதல் ஆகிய அடிப்படை புலனுணர்வுத் திறன் சார்ந்த நடைமுறைதான், முதிர்ச்சி அடைவதன் முதல் கட்டமாக நிகழ்கிறது. நுண்ணறிவு எனப்படும் செயல்பாட்டில் இதுதான் ஆளுமை செலுத்துகிறது. அதனால் உயர்நிலை சிந்தனை, உணர்ச்சிக் கட்டுப்பாடு இரண்டும் சார்ந்த உணர்வுப்பூர்வமான நுண்ணறிவு என்பது கடைசி கட்டமாகத்தான் நிகழ்கிறது. விடலைப் பருவத்தின் கடைசி கட்டத்தில், பெரியவர் வயதின் தொடக்க கட்டத்தில் இது நிகழ்கிறது. சமூக நுண்ணறிவு என்பதிலும் இதுவே ஆளுமை செலுத்துகிறது. வேறு சொற்களில் சொல்வதானால், விடலைப் பருவத்தினர் சமூக ரீதியாக அல்லது உணர்வு ரீதியாக முதிர்ச்சியடைவதற்கும் முன்பாக, நுண்ணறிவு சார்ந்த முதிர்ச்சியை எட்டிவிடுகிறார்கள்.

### ஒரு சிறார் குற்றவாளி பற்றிய குறிப்பு

குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்ட சிறார்கள் உயிரியல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் வாய்ப்புகள் மறுக்கப்பட்டவர்களாக இருந்து வந்திருப்பதை ஆய்வுகள் காட்டுகின்றன. 1987ல் அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வு, இவர்களில் 60 சதவீதத்தினருக்கு நரம்பு சார்ந்த உளவியல் குறைபாடுகள் இருந்ததையும், 50 சதவீதத்தினருக்கு குழந்தைப் பருவத்திலிருந்தே மனநல குறைபாடுகள் இருந்ததையும், 95 சதவீதத்தினருக்கு 90க்கும் குறைவான நுண்ணறிவுத் திறன் (IQ) இருந்ததையும், 20 சதவீதத்தினருக்கு மட்டுமே சராசரியான வாசிப்புத் திறன்கள் இருந்ததையும் தெரிவித்தது. இவர்களில் 90 சதவீதத்தினர் உடல் ரீதியாக அல்லது உடல் ரீதியாகவும் பாலியல் ரீதியாகவும் தவறாகக் கையாளப்பட்டார்கள், 40 சதவீதத்தினர் உறவினர்களால் பாலியல் அனுபவங்களுக்கு உட்படுத்தப்பட்டார்கள் என்பதையும் அதே ஆய்வு வெளிப்படுத்தியது. (6)

அமெரிக்காவில், 2003ம் ஆண்டில், மரண தண்டனை அளிக்கப்பட்ட சிறார்களின் துயரமான வாழ்க்கைக் குறித்த ஒரு ஆய்வு நடத்தப்பட்டது. அந்தச் சிறார்களில் 74 சதவீதத்தினரின் குடும்பங்கள் முறையாக செயல்பட்டிருக்கவில்லை. 60 சதவீதத்தினர் தவறாக கையாளப்பட்டவர்களாக, புறக்கணிக்கப்பட்டவர்களாக இருந்திருக்கிறார்கள். 43 சதவீதத்தினருக்கு மனநல குறைபாடுகள் இருந்துள்ளன. 38 சதவீதத்தினருக்கு போதை மருந்து பழக்கம் இருந்து வந்துள்ளது. 38 சதவீதத்தினர் வறுமையில் வாழ்ந்துள்ளனர். மரண தண்டனை அளிக்கப்பட்ட சிறார்களில் 30 சதவீதத்திற்கும் அதிகமானோர் 6 அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைப் பருவ துன்பங்களை அனுபவித்துள்ளனர். சராசரியாக 4 வகையான துன்பங்களை ஒவ்வொரு சிறார் குற்றவாளியும் அனுபவித்திருப்பதை அந்த ஆய்வு எடுத்துக்காட்டுகிறது. அதே நேரத்தில் பெரும்பாலான குழந்தைகளும் விடலைப் பருவத்தினரும் இந்த வரையறுக்கப்பட்ட கடினமான பகுதிகள் ஒன்றைக் கூட எதிர்கொள்வதில்லை. சிறார் குற்றவாளிகள் தொடர்பான வழக்கு விசாரணைகளில் பாதிக்கு மேல் சில வழக்குகளில் மட்டுமே இந்த ஆதாரங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்று ஆய்வாளர் மாலட் கூறுகிறார். (7).

சட்டத்தோடு முரண்படும் சிறார்களிடையே பணியாற்றும் வல்லுநர்களின் அனுபவங்களும், இதேபோன்ற உணர்வுப்பூர்வமான, உடல் சார்ந்த புறக்கணிப்புகளையும், வறுமைப் பின்னணியையும், சமூக உளவியலில் வாய்ப்புகள் மறுக்கப்பட்ட பின்னணியையும், இந்தப் பின்னணிகள் உள்ள சிறார்கள் நீண்டகாலமாக துன்பமான அனுபவங்களுக்கு உள்ளாகி வந்திருப்பதையும் எடுத்துக்காட்டுகின்றன.

### விடலைப் பருவத்தினரை பெரியவர்களாக நடத்துவதன் விளைவுகள்

குற்றத்திற்குப் பொறுப்பேற்கும் வயதை குறைப்பதன் விளைவுகள் என்னவாக இருக்கும் என்பது குறித்து, அதனைச் செயல்படுத்திய பல்வேறு நாடுகளின் வரலாற்றைத் திரும்பிப் பார்க்க வேண்டியுள்ளது. இதில் மிகுந்த கவனமும் நிதானமும் தேவை என்பதை அந்த வரலாறு உணர்த்துகிறது. 20ம் நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகளில் அமெரிக்காவின் ஒவ்வொரு மாநிலத்திலும் சிறார்களைக் கையாள்வதற்கான தனித்த சட்ட அமைப்புகள் உருவாக்கப்பட்டன. அவற்றில் சிறார்கள் என 18 வயதிற்குக் கீழ்பட்டோர் குறிப்பிடப்பட்டனர். குற்றவியல் சட்டங்களின் கடுமைகளிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கிற “பாதுகாப்பான அறிவார்ந்த பெற்றோர்” போல மாநில அரசுகள் செயல்படுகின்றன என்று அந்தக் காலகட்டத்தைச் சேர்ந்த வழக்கறிஞர்கள் சித்தரித்தார்கள். ஆனால், 1980ம் ஆண்டுகளில் இத்தகைய குற்றவாளிகளை சீர்திருத்தி அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதே பிரதாண நோக்கமாக இருக்க வேண்டும் என்ற சிந்தனை பின்னுக்குத் தள்ளப்பட்டது. தற்போது சிறையில் எத்தனை சிறார்கள் இருக்கிறார்கள் என்ற துல்லியமான புள்ளி விவரம் கிடைக்கவில்லை. ஆனால், எப்படிப் பார்த்தாலும் குறைந்தது 10,000 சிறார்கள் பெரியவர்களுக்கான சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிய வருகிறது. 13 வயது சிறுவர்களை, வயதான, அதிக அனுபவமுள்ள குற்றவாளிகளோடு சேர்த்து சிறைக்கு அனுப்புவது ஞானமுள்ள செயல்தானா என்று இப்போதுதான் மாநில அரசுகள் மறுபரிசீலனை செய்யத் தொடங்கியுள்ளன. குற்ற வழக்குகளில் பெரியவர்களாக நடத்தப்பட்ட சிறார்கள், சிறார்களுக்கான நீதி முறையின் கீழ் கையாளப்பட்ட சிறார்களைவிட 34 சதவீதம் அதிகமாக மீண்டும் குற்றச் செயல்களில் ஈடுபடக்கூடியவர்களாக இருக்கிறார்கள் என்று நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையங்களின் கூட்டமைப்பு ஆய்வு தெரிவிக்கிறது. பெரியவர்களாக நடத்தப்பட்ட சிறார் குற்றவாளிகள் மீண்டும் விரைவாக, மீண்டும் மீண்டும் குற்றச் செயல்களில் ஈடுபடுகிறார்கள் என்பது மட்டுமல்லாமல், அவர்கள் வன்முறைக் குற்றங்களில் ஈடுபடுகிற வாய்ப்பும் அதிகமாக உள்ளது என்று அந்த ஆய்வு கூறுகிறது. (8)

### மீண்டும் குற்றம் செய்வதை முன்கூட்டியே கணிக்க முடியுமா ? கணிக்க வேண்டுமா ?

சில விடலையர்கள் பொதுவாக வயதில் மூத்தவர்கள், கடும் தண்டனைகள் தேவை என்று கோருகிற பொது மக்களின் எதர்பார்ப்பை நிறைவேற்றத் தக்க அளவுக்கு சிறார் நீதி அமைப்பால் போதிய தண்டனை வழங்க முடியாமல் போகிற கடுமையான குற்றங்களைச் செய்யக்கூடும் என்று பொதுவாக ஒப்புக்கொள்ளப்படுகிறது. (9) சிறார் நீதி அமைப்பால் சிறந்த முயற்சிகள், எடுக்கப்பட்ட போதிலும், தொடர்ந்து குற்றங்களைச் செய்யக்கூடிய விடலையர்களும் இருப்பார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் ஒரே விதமான வழிமுறைகள் பலனளிக்காமல் போகக்கூடும். பெரியவர்களுக்கான குற்றவியல் சட்டங்களுக்கு இவர்களை மாற்ற வேண்டும் என்ற கொள்கையின் பின்னணியில், இந்த இரண்டு வகை இளைஞர்களுமே மற்ற இளம் குற்றவாளிகளைவிட திட்டவட்டமாக மாறுபட்டவர்கள் என்ற கருத்தும், சீர்திருத்தத்தை மையமாகக் கொண்ட சிறார் நீதிமன்றங்களோடு ஒப்பிடுகையில், இத்தகைய விடலைப் பருவத்தினரை தண்டனை சார்ந்த குற்றவியல் நீதிமன்றங்களில் கடுமையான தண்டனைகள் வழங்குவதன் மூலம் நல்ல முறையில் கையாள முடியும் என்ற கருத்தும் உள்ளன. (8)

விடலைப் பருவத்தினரின் பொறுப்பு தொடர்பாக முடிவுக்கு வருவதில் ஒரு தடயவியல் வல்லுநர் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளக் கூடிய வேறு பல அம்சங்களும் உள்ளன. தவறை உணர்தல், சட்டத்திற்கு உட்பட்டு செயல்படும் திறன், மூர்க்கமாக, உணர்ச்சிவசப்பட்டு செயல்படக்கூடிய வளர்ச்சிப் போக்கு, (கால உணர்வு, சகாக்களின் நிர்ப்பந்தங்களுக்கு உட்படுதல், அபாயச் செயலில் ஈடுபடத் துணிதல், மற்றவரது அனுபவத்தை உணரும் திறன் ஆகியவை உள்ளிட்ட) உளவியல் முதிர்ச்சியின்மை, சந்தர்ப்ப சூழல்கள், சகாக்களுடன் குழுவாக செயல்படும் முறைகள், தனது தன்மைக்கு மாறான செயல்கள், முடிவடையாத தனி மனித ஆளுமை வளர்ச்சி, மனநோய், குற்றம் தொடர்பான எதிர்வினை அணுகுமுறை ஆகியவையே அந்த அம்சங்களாகும். (11)

### விடலைப் பருவத்தினரின் குற்றப் பொறுப்பு மற்றும் பின் விளைவுகளை வரையறுத்தல்

குற்றப் பொறுப்பு என்பது பல்வேறு வடிவங்களில் அமையக் கூடும். ஒருவர் குறிப்பிட்ட நோக்கத்துடன்

குற்றம் செய்யும்போது, குற்றச்சாட்டுக்குரிய மிக கடுமையான செயல் வடிவமாக அது பெரும்பாலும் கருதப்படுகிறது. சுதந்திரமாக சிந்தித்து செயல்படுதல், குற்ற நோக்கத்துடன் ஒரு செயலைச் செய்தல், நெறி சார்ந்த, ஒழுக்கம் சார்ந்த முடிவுகளை எடுக்கக்கூடிய முழுமையான திறன் ஆகியவை ஒரு நபரை அவரது குற்றத்திற்குப் பொறுப்புள்ளவராக்குகின்றன.

ஆனால், இப்போது நாம் விவாதிப்பது, விடலைப் பருவத்தினர் குற்றப் பொறுப்பு உள்ளவர்கள்தானா, அதாவது பெரியவர்களுக்கான அர்த்தத்தில் விடலைப் பருவத்தினரையும் குற்றத்திற்கு பொறுப்பாக்க முடியுமா, அப்படி இல்லையென்றால் எப்படிப்பட்ட நடவடிக்கை பொருத்தமாக இருக்கும் என்பதுதான். அவர்கள் மன்னித்து விடப்பட வேண்டியவர்களா அல்லது கடுமை குறைந்த தண்டனைக்கு உரியவர்களா? தொடர்ந்து விவாதிப்பதற்கு முன்பாக, இந்த பதங்களின் அர்த்தத்தை புரிந்துகொள்ள முயல்வோம். "மன்னித்தல்" என்பது, குற்றச்செயலில் ஈடுபட்ட ஒரு நபரை முற்றிலுமாக விடுவிப்பதாகும். ஆணோ, பெண்ணோ அவருக்கு குற்றச் செயலில் எந்த பொறுப்பும் இல்லை என்று அவரை தண்டனையின்றி விடுவதாகும்.

குற்றச் செயலில் ஈடுபடும் விடலைப் பருவத்தினரின் குற்றப் பொறுப்பை மதிப்பிடுவதில், கடுமை குறைந்த தண்டனையின் ஒவ்வொரு வகையும் முக்கியமானதாகும். முறையாகச் செயல்படும் விடலைப் பருவத்தினருக்கும் பெரியவர்களுக்கும் இடையேயான வேறுபாடுகளைப் புரிந்துகொள்ள இவை உதவுகின்றன. முதலில், மிக வெளிப்படையாக, விடலைப் பருவத்தினரின் புலனுணர்வு சார்ந்த உளவியல்பூர்வ சமூகநிலை சார்ந்த வளர்ச்சி மட்டங்கள் அவர்களது குற்றத் தேர்வுகள் உள்ளிட்ட தேர்வுகளை வடிவமைக்கக் கூடியவையாக உள்ளன. முடிவெடுக்கும் தகுதியைப் பொறுத்தவரையில் பெரியவர்களிடமிருந்து விடலைப் பருவத்தினரை வேறுபடுத்திக் காட்டும் வகையில் அந்த வடிவமைப்பு நிகழ்கிறது. இரண்டாவதாக, விடலைப் பருவத்தினரின் முடிவெடுக்கும் திறன் முதிர்ச்சியற்றதாக இருப்பதாலும், அவர்களது சுயெச்சையான தன்மை வரம்புக்கு உட்பட்டிருப்பதாலும் ஆத்திரமூட்டல், மன அழுத்தம், அச்சுறுத்தல், சகாக்களின் தாக்கம் போன்ற நிர்ப்பந்தச் சூழல்களின் தாக்கங்களுக்கு அவர்கள் பெரியவர்களைவிட அதிகமாக உட்படுகிறார்கள். இந்த நிலைமைகள் எல்லோருக்குமே குற்றப் பொறுப்பின் கடுமையைக் குறைக்கக் கூடியவையாகும். இறுதியாக, விடலைப் பருவத்தினர் அவர்களது சொந்த அடையாளங்களை உருவாக்குகிற நடைமுறை இன்னும் நிகழ்ந்துகொண்டிருக்கிறது என்பதால், மோசமான குணத்தை பிரதிபலிப்பதில் பெரியவர்களைவிட விடலைப் பருவத்தினரின் நடத்தை குறைவாகவே உள்ளது. இவ்வாறாக குற்றவியல் சட்டத்தின் கடுமை குறைந்த மூலங்கள் ஒவ்வொன்றிலும், **குறிப்பிடத்தக்க விடலைப் பருவத்தினர் பெரியவர்களைவிட குறைவான குற்றப் பொறுப்பு உள்ளவர்களாவர்; ஏனெனில், விடலைப் பருவத்தினரின் குற்றச்செயலானது, அவர்களது இந்த வளர்ச்சிக் கட்டத்தில் பங்களிக்கிற மாறிக்கொண்டே இருக்கும் தாக்கங்களுக்கு உட்பட்டதாகும்.**

## விடலைப் பருவத்தினரின் குறைந்த குற்றப் பொறுப்பு

சிறார்களின் வயதை சமநிலைப்படுத்திப் பார்ப்பது, அவர்களது வளர்ச்சி நடைமுறைகளிலும் சமூகப் பண்பாட்டு செயல்களிலும் உள்ள பொறுப்பை மதிப்பிடுவதிலும் உள்ள சிக்கல்கள் எளிதானவை அல்ல. ஆனால், சட்டங்களால் என்ன செய்ய முடியும் என்றால், சிறார் ஒருவர் வளர்ச்சி அடைவது என்பது ஒரு தொடர்ச்சியான நடைமுறையேயன்றி, ஒரு பிறந்த நாளோடு அமைவதல்ல என்பதை அங்கீகரிக்கலாம். விடலைப் பருவத்தினருக்கு குறிப்பிடத்தக்க முக்கியமான நரம்பியல் பற்றாக்குறைகள் உள்ளன. அது அவர்களது முடிவெடுக்கும் திறனை கடுமையான வரம்புகளுக்கு உட்படுத்துகிறது. அந்த வரம்புகள், (புறக்கணிப்பு, அவமதிப்பு, வறுமை போன்ற) அபாய நிலைகளோடு சேர்கிறபோது, வன்முறைக்கான உளவியல் கட்டத்தை உருவாக்குகின்றன. நமது நீதி முறையானது, குற்றத்திற்கு மிக மிக பொறுப்பாக்கப்படக் கூடியவர்களுக்கு பெரும் தண்டனைகளை வழங்கக்கூடியதாக உள்ளது. இந்நிலையில், சிறார்களுக்கு இறுதியான தண்டனைகள் வழங்குவது என்பது நமது நீதிமுறையின் நியாயச் சிந்தனைக்கு முரணானதாகும். இவ்வாறாக, ஒரு சிறார் குற்றவாளி, அவரது வளர்ச்சியின் முதிர்ச்சியின்மையைக் கருத்தில் கொண்டு, ஒப்பிடத்தக்க வளர்ச்சியடைந்த குற்றவாளியைவிட குறைந்த அளவே குற்றப் பொறுப்பு உடையவராக கருதப்படுகிறார். ஆனால், குற்றத்திற்கு எவ்வித பொறுப்பும் அற்றவராக கருதப்படுவதில்லை. சிறார் குற்றவாளிகள் அவர்களது குற்றச் செயல்களுக்கு பொறுப்பாக்கப்பட வேண்டும், அதன் மூலமே எதிர்காலத்தில் குற்றங்களில் ஈடுபடக்கூடியவர்களுக்கு தங்களது செயல்களின் பின் விளைவுகள் குறித்து ஒரு வலுவான எச்சரிக்கை சென்றடையும், அதன் மூலம் மீண்டும் குற்றம் செய்யக்கூடியவரிடமிருந்து சமூகம் பாதுகாக்கப்படும் என்று பொது மக்கள் எதிர்பார்ப்பது புரிந்துகொள்ளத்தக்கதுதான். கடுமை குறைந்த தண்டனையை அடிப்படையாகக் கொண்ட ஒரு

கொள்கை இந்த நோக்கங்களுக்கு உதவக் கூடும்; அதே நேரத்தில் அப்படிப்பட்ட ஒரு கொள்கையானது இத்தகைய இளையவர்கள் பெரியவர்களைவிட குறைவாகவே குற்றப் பொறுப்பு உள்ளவர்கள் என்பதை அங்கீகரிப்பதாக இருக்க வேண்டும்.

### சிறார் குற்றவாளிகள் மறுவாழ்வு

இந்தியாவின் சிறார் சட்டமுறை ''நல்வாழ்வு'' என்பதற்கும் ''நீதி'' என்பதற்கும் இடையே ஒரு சமநிலையை ஏற்படுத்த முயன்றுள்ளது. அதன் அடிப்படையாக ''சமூக சட்ட'' அம்சம் தொடர்ச்சியாக உள்ளது. அதில் சிறார் குற்றவாளியின் சமூக அம்சம் உரிய வகையில் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறது. மேலும், அதன் மையமான வழிகாட்டல் கொள்கையாக ''குழந்தையின் நலன் கருதி'' என்பதே இருந்து வருகிறது.

குற்றச் செயல்களில் ஈடுபடும் சிறார்களை அவர்களது வயதின் அடிப்படையில் அல்லது குற்றத்தின் தன்மை அடிப்படையில் பெரியவர்களுக்கான குற்ற நீதிமுறைக்கு மாற்றுவதற்கான சில ஏற்பாடுகள் தேவை என்று ஒரு பகுதியினர் வலியுறுத்துகிறார்கள். பல நாடுகளில் விடலைப் பருவத்தினரை பெரியவர்களுக்கான நீதிமன்றத்திற்கு மாற்றுவதில், சில திருத்தங்கள் செய்யப்பட்டு, குற்ற வகைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. அவர்களை பெரியவர்களுக்கான நீதிமன்றத்திற்கு மாற்றுவதற்கான வழிமுறைகளாக சட்டப்பூர்வ விதிவிலக்குகளும் வழக்குத் தொடர்வதற்கான சட்டப்பூர்வ அதிகாரங்களும் கூடுதலாக சேர்க்கப்பட்டுள்ளன(8). ஆனால், அவ்வாறு சிறார்களுக்கு விதிவிலக்கு அளிக்கும் விதிகளை தள்ளுபடி செய்யும் நடைமுறைகளுக்கு ஏராளமானோர் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். குறிப்பாக, ஏற்கெனவே சுட்டிக்காட்டியது போல, விடலைப் பருவத்தினர் அவர்களது வளர்ச்சி சார்ந்த அம்சங்கள் காரணமாக குற்றப் பொறுப்பு உடையவர்கள் அல்ல என்றும், இவ்வாறு விதிவிலக்குகளைத் தள்ளுபடி செய்வதால் சிறார் குற்றங்களோ, மீண்டும் குற்றங்களில் ஈடுபடுவதோ குறைந்துவிடவில்லை என்றும் அவர்கள் வாதிடுகிறார்கள்.

எளிமையாகச் சொல்வதெனில், பெரியவர்களுக்கான குற்றவியல் நடைமுறையானது விடலைப் பருவத்தினரை கையாளத்தக்க வகையில் நுட்ப உணர்வுடன் அமைந்திருக்கவில்லை. அவர்களுக்கு தேவைப்படுவது கூடுதலான மீட்டமைப்பு மற்றும் சீர்திருத்த அணுகுமுறைகள்தான். இத்தகைய, பெரியவர்களுக்கான நீதிமுறைக்கு குழந்தைகள் உட்படுத்தப்படுவது, அவர்களை மேலும் தனிமைப்படுத்துவதற்கும், அவமதிப்புகளுக்கு உள்ளாக்குவதற்கும், சமூகத்திலிருந்து மேலும் விலக்குவதற்கும்தான் வழிவகுக்கும். அத்தகைய நிலைமைகள் அவர்களை மேலும் வன்முறையில்தான் தள்ளிவிடும். மற்றநாடுகளில் இவ்வாறு சட்டநடைமுறை மாற்றப்பட்டதால் ஏற்பட்ட விளைவுகள் குறித்த புள்ளிவிவரங்கள் இதைக் காட்டுகின்றன.

சட்டத்துடன் முரண்படும் சிறார்களை பெரியவர்களுக்கான நீதிமுறைக்கு மாற்றுவதற்கும் பதிலாக, தற்போதைய சிறார் நீதிமுறையை வலுப்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது. அதற்காக சிறார் நீதிச் சட்டத்தின்கீழ் தற்போதுள்ள சிறப்பு இல்லங்களை தீவிரமான முறையில் மேம்படுத்த வேண்டும். மிகச் சிறப்பான, தனி மனித அக்கறை சார்ந்த அணுகுமுறைகள் தேவைப்படுகின்றன. சட்டத்துடன் முரண்படும் சிறார்களின் தேவைகள் பலவகைப்படும். முதலில் அவர்களை அந்த நிலைக்கு கொண்டு வந்த நிகழ்வு குறித்த அறிவுபூர்வ சிந்தனைகள் ஏற்படுத்தப்பட வேண்டும். நிகழ்வுகளைக் கட்டுப்படுத்தும் ஒரு உணர்வை அவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும். எதிர்காலம் பற்றிய நம்பிக்கை உணர்வை ஏற்படுத்த வேண்டும். அவர்கள் சிலர்தான் என்பதால், ஒரு அறிவுபூர்வ ஆதரவு நடைமுறை இருப்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

சிறார் நீதிமுறையானது சட்டத்துடன் முரண்படும் குழந்தைகளைக் கையாள்வது தொடர்பானதாக மட்டும் இருக்கக் கூடாது. மாறாக, குற்றங்களில் ஈடுபடும் உருவாவதன் அடிப்படைக் காரணங்களைக் களைவதாகவும், அத்தகைய குணங்கள் வளர்வதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் இருக்க வேண்டும். சட்டத்துடன் முரண்படும் சிறார்களைக் கையாளும்போது தடுப்பு மற்றும் மறுவாழ்வுக்கான முக்கியத்துவத்திற்கு அழுத்தம் தரப்பட வேண்டும். விரிவான விழிப்புணர்வு பரப்புரை இயக்கங்கள், அபாய நிலையில் உள்ள சிறார்களுக்கும் சட்டத்துடன் முரண்படும் இளைஞர்களுக்குமான தேசிய நடவடிக்கைத் திட்டங்கள் போன்ற சில பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பயிற்சித் திட்டங்கள் உருவாக்கப்பட்டு, சட்டத்துடன் முரண்படும் சிறார்களுக்கான பயிற்சி வகுப்புகளை நடத்துவதற்கான நடவடிக்கைகள் தொடங்கப்பட வேண்டும். பாதிப்புக்கு உள்ளாக்கக்கூடை இப்பிரிவினரிடையே மனநலம் சீர்குலையும் வாய்ப்பு அதிகமாக இருப்பதை புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. இத்தகைய சிறார்களுக்கு மனநல சிகிச்சை வாய்ப்புகளும் உளவியல் சேவைகளும் எளிதில் கிடைக்கச் செய்ய வேண்டும்

என்பதை அந்த புள்ளிவிவரங்கள் வலியுறுத்துகின்றன. (தனிப்பட்ட சிகிச்சை அளிக்கக்கூடிய வகையில்) அபாய நிலைகளை மதிப்பீடு செய்த பிறகு இந்த சிகிச்சைகளும் சேவைகளும் கிடைக்கச் செய்ய வேண்டும். அத்துடன் தீவிரமான கலந்தாலோசனைகள், குடும்பம் சார்ந்த கலந்தாலோசனைகள், வாழ்க்கைத் திறன் கல்வி இயல்புத் தன்மையையும் செயல்பாட்டையும் மீண்டும் உருவாக்கக்கூடிய நடவடிக்கைகள் போன்றவை தொடர் நடவடிக்கைகளாக மேற்கொள்ளப்பட வேண்டும். சிறப்பு மையங்களை புதுப்பிப்பதன் மூலம் சிறார்களுக்கான காவல் நிலைமைகளை மேம்படுத்துதல், அவர்களைப் பற்றிய கோப்புகளைப் பராமரித்தல், அவர்களுக்கான கல்வி மற்றும் வேலைப் பயிற்சித் திட்டங்களை வலுப்படுத்துதல், சிறப்பு இல்லங்களிலிருந்து விடுவிக்கப்படும் சிறார்களுக்கான தொடர் கவனிப்புத் திட்டங்களை அரசுசாரா அமைப்புகளின் ஒத்துழைப்புடன் ஏற்படுத்துதல் ஆகிய நடவடிக்கைகள் இந்த விடலைப் பருவத்தினரை சீர்திருத்துவதற்கும் சமுதாயத்துடன் அவர்கள் ஒருங்கிணைந்து வாழ்வதற்கும் உதவும்.

**Bibilography:**


1. Elizabeth R. Sowell, Paul M.Thompson, Kelvin D. Tessner, and Arthur W. Toga Mapping Continued Brain Growth and Gray Matter Density Reduction in Dorsal Frontal Cortex; Inverse Relationships during Postadolescent Brain Maturation. The Journal of Neuroscience, 15 November 2001, 21(22);8819-8829
2. Lewis, DO, Pincus, Bard, Richardson, Prichep, Feldman, Yeager, Neuropsychiatric, Psychoeducational, and family characteristics of 14 juveniles condermned to death in the United States. Am. J. of Psychiatry. 1988.145
3. Mallett, Chris. Socio-Historical Analysis of Juvenile Offenders on Death Row, 3 Juv. Corr.Mental Health Report. 2003. 65
4. Myers DL. The recidivism of violent youths in juvenile and adult court: A consideration of selection bias. Youth violence and Juvenile Justice. 2003;1(1) 79-101
5. Thomas A. Loughran, Edward P.Mulvey et al. Differential Effects of Adult Court Transfer on Juvenile Offender Recidivism. Law Hum Behav. 2010 December; 34(6): 476-488.
6. Ash, Peter. But he knew it was wrong; Evaluating adolescent culpability. Journal of the American Academy of Psychiatry and the Law, Vol 40(1), Jan 1, 2012. Pp. 24-32
7. Kadish, S. (1987). Excusing crime, California Law Review, 75, 257-296
8. Morse, S. (1994). Culpability and control. Pennsylvania Law Review. 142, 1587-1660.